Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 30 ரூபா • தீபம் 73 • 01.01.2017

2017 புத்தாண்டு பலன்கள்





## விரைவு நகரம்
நெல்லியடி



## தமிழ்செல்வனிடம்
பிடி கொடுக்காத கருணா



# சுமந்திரனோடு இணையத் தயார்!
கஜேந்திரன் "கலகல" பேட்டி

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

KIRUBAA LEARNERS
Government Approved Driving Trainning School

கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

யாழ்ப்பாணம்
முதலாம் கட்டைச்சந்தி,பருத்தித்துறை, 0214923201, 0714546961
இல.227/6 கே.கே.எஸ் வீதி,சுன்னாகம், 0212242022, 0714546958
பிரதான வீதி, நெல்லியடி, 0213006550, 0714546958
கண்டி வீதி, சாவகச்சேரி, 0214923202, 0212270700
யாழ். கச்சேரியடி, யாழ்ப்பாணம். 39 கச்சேரி நல்லூர் வீதி. 0212226699, 0767225292
ஓம் பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். 0212226688, 0772422622

கிளிநொச்சி
A9. கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 0212285505, 0714546955
வாடியச்சந்தி, பூநகரி. 0213201818, 0703337171
புளியடிச்சந்தி முல்லைத்தீவு, விசுவமடு. 0213201212, 0714546955
நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 0213006544, 0703336161

வவுனியா
216. A9 வீதி வவுனியா. 0242227777, 0777100444

மன்னார்
இல.94 பிரதான வீதி, மன்னார். 0232251656, 0778472732


NO 1 TOPAZ
TOPAZ
No. 01 Shop in Jaffna
திருமணப் பட்டுச்சேலை
காஞ்சிபுரம் பட்டுச்சேலை
சுரிதார் மற்றீரியல்கள்
மற்றும்
ரெடிமெற் ஆடைகள்
ஆண்களிற்கான
சேட் சூட் மற்றும்
ரெடிமெற் ஆடைகள்
மிஸ் சுட்டி
மிஸ் பியூட்டியாக
வலம் வரும் சுட்டிச்
சிறுமியர்களுக்கான
பெஷன் ஆடைகள்
We are Specialist in
Wedding Suits | Wedding Sarees | Party Sarees | Wedding Frocks | Party Frocks
and all kinds of Items
TOPAZ
No. 72, Grand Bazaar, Jaffna.
Tel : 021 222 4743
Fax : 021 222 7645
TOPAZ TAILORING
No. 80/24, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021 222 4643
E-mail : topazagn@gmail.com
TOPAZ MALL
No. 195, Power House Road, Jaffna.
Tel : 021 222 4933
021 221 9933


BARATHI
Star Hotel
No.164, A9 Road, Kilinochchi
TP: 021 228 5050, 021 228 5060
077 718 0123 , 071 485 0486
Email: barathistarhotel@gmail.com


2017 புதிய ஆண்டில் புதிய வகுப்புகளுக்கு செல்லும்
பாடசாலை மாணவர்களுக்கு குறைந்த விலையில்
அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை
உபகரணங்களையும் அலுவலகத்திற்கு தேவையான
அனைத்து உபகரணங்களையும் ஒரே இடத்தில் பெற்றிட
முரசம் புத்தகசாலை
ஏ-9வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி.


THE VALAMPURI
A Small Luxurious Hotel in Jaffna
148/10, Station Road, Jaffna
Tel : 021 222 0111 / 3444
Web : www.valampurihotel.com
E-mail : info@valampurihotel.com




## சுற்றிக்காட்டிய சீனா!

பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கிரமமான முறையில் சீனாவிற்கு அழைக்கப்பட்டு கொண்டிருக்கிறார்கள். சிறு குழுக்களாக பல முறை பாராளுமன்ற உறுப்பினர்கள் சீனா சென்றுவிட்டனர். இந்த திட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுடனும் நெருக்கத்தை பேண சீனா முயல்வதாக தெரிகிறது.

சீனாவிற்கு அழைத்து செல்லப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமது அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய சாதகமான அபிப்பிராயங்களை ஏற்படுத்தும் முயற்சியிலும் சீனா ஈடுபடுகிறது. இதன்படி, அழைத்து செல்லப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சீன தலைநகர் பெய்ஜிங்கிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் தங்க வைக்கப்படுகின்றனர். பின்னர் சீன வெளிவிவகாரத்துறை உயரதிகாரிகள் அவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றனர். இறுதியாக சென்ற இலங்கை பாராளுமன்ற குழுவினருடன் சீன துணை வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் சீனாவின் உள்ளூர் தலைவர்கள், முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிற்கு அழைத்து செல்கிறார்கள். அத்துடன், அம்பாந்தோட்டை துறைமுகத்தை குத்தகைக்கு பெற்றுள்ள சீன நிறுவனம் அங்கு மேற்கொள்ளும் பிரமாண்ட கட்டுமானப்பணிகள் நடக்கும் இடங்களிற்கு அழைத்து சென்று,பணிகளை காண்பிக்கிறார்கள்.

அம்பாந்தோட்டை துறைமுகம் சீன நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்படுவதற்கு உள்நாட்டில் பெரும் எதிர்ப்பு கிளப்பப்படுகிறது. அதன் பின்னணியில் அரசியல் வாதிகள் இருக்கலாமென கருதப்படும் நிலையில், சீனா இந்த புதிய உத்தியை கையாள்கிறது. இதுதவிர, இலங்கை அரசியலில் இதுவரை வெளிப்படையான தலையீட்டை காண்பிக்காத சீனாவின் நிலைப்பாடு தற்போது பெருமளவில் மாற்றமடைந்து விட்டதை இது காண்பிக்கிறது.

## பழையதை மறந்து விட்டோமா?



கடந்த 24ம் திகதி நடந்த கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் நடந்த சம்பவமொன்றை இங்கு பதிவிடுகிறோம்.

யுத்தத்தால் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டு, இடுப்பின் கீழ் செயலிழந்தவர்களை கொண்டது “உயிரிழை” என்ற அமைப்பு. முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ வசதியுடன் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதி செய்துதரக் கோரும் விண்ணப்பக்கடிதம் சமர்ப்பிக்கவே அங்கு சென்றிருந்தனர். அந்த அமைப்பின் செயலாளர் சக்கர நாற்காலியில் சென்றிருந்தார்.

எனினும், முன் அனுமதி பெறப்படவில்லையென கூறி அவர்களை கூட்ட மண்டபத்திற்குள் அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதனால் கோரிக்கை கடிதத்துடன் மண்டப வாசலில் காத்திருந்துள்ளார்.

கூட்டம் முடிந்ததும் மாகாண கல்வியமைச்சர் முதலில் வெளியில் வந்தார். அவரிடம் கடிதத்தை நீட்டியபோது “ஆ... என்ன” என்றவர், தனது பிரத்தியேக செயலாளரிடம் கடிதத்தை கொடுக்குமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார்.

அடுத்ததாக வந்த பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் அவர்களை கணக்கெடுக்காமல் சென்றிருக்கிறார். அவரின் பின்னால் வந்த வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் வர அவரிடமும் கடிதத்தைநீட்டியுள்ளனர். நடந்தவாறே “பார்க்கிறேன்” என்றவர் பிரத்தியேக செயலாளரிடம் கடிதத்தை கொடுக்கும்படி கூறியுள்ளார். இவர்களின் பின்னால வந்த தெற்கு தேசிய கட்சியை சேர்ந்த அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் அவர்களின் கோரிக்கையை செவிமடுத்து, அவர்களின் விபரங்களை பெற்றுச்சென்றுள்ளனர்!



## மன்னாரில் ரிசாட் அமைத்த வெனிஸ்

மன்னார் கரிசல் 50 வீட்டுத்திட்டம் மக்கள் வசிக்காத வீட்டுத்திட்டமாக மாறி வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையான திட்டமிடலின்மை காரணமாக அந்த வீட்டுத்திட்டத்தில் மக்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் தலைமன்னார் வீதியில் கரிசல் 50 வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டது. அமைச்சர் ரிசாட் பதியுதீன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். அந்த வீடுகள் முஸ்லீம் மக்களிற்கு வழங்கப்பட்டது.

அந்த வீட்டுத்திட்டம் சிறிய நீர்த்தேக்கத்துடன் அண்டியதாக அமைக்கப்பட்டுள்ளது. சாதாரண மழை காலத்திலேயே அந்த பகுதி வீடுகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கிவிடும். அந்த பகுதியில் எப்பொழுதும் நீர் நிறைந்து, இயல்பு வாழ்க்கைக்கு உகந்த இடமாக இருப்பதில்லை. எனினும், அந்தப்பகுதியில் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டு, மக்களிற்கு வீடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டது. கடந்த 2015 பெருமழையில் அந்த பகுதியே நீரில் மூழ்கியது. அடிக்கடி வெள்ளம் மூடும் பகுதியென்பதால் அந்த குடியிருப்பை விட்டு பெருமளவு குடும்பங்கள் வெளியேறி விட்டன.

## மகிந்த மகன் கூனலாமா?


சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்கவின் பெயர் தொடர்ந்தும் செய்திகளில் அடிபட்டபடியே உள்ளது. ராஜபக்சக்களுடன் நெருக்கமாக உள்ளார் என கிளம்பிய சர்ச்சையை தொடர்ந்து, ராஜபக்சக்களின் முகாமிற்குள்ளும் சர்ச்சையாகியுள்ளார்.

அண்மையில் மரணவீடொன்றில் சாகல கலந்து கொண்டிருந்தார். அதில் யோஷித ராஜபக்சவும் கலந்து கொண்டிருந்தார். சாகலவுடன் அவர் நடந்து கொண்டது வெட்கக்கேடானது என ஒன்றிணைந்த எதிர்கட்சி பிரமுகர்கள் சிலர் மகிந்த ராஜபக்சவின் காதில் ஓதியுள்ளனர்.

பிரபல வர்த்தகர் ஜயந்த தர்மதாஸவின் மனைவியின் மரணச்சடங்கிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது. சாகலவிடம் சென்ற யோஷித, “சாகல அண்ணா“ என அழைத்து, அவருடன் கூனிக்குறுகி நடந்துள்ளார். சாகலவின் சில உதவிகளிற்கு நன்றியும் தெரிவித்துள்ளார். அங்கிருந்த ஒன்றிணைந்த எதிர்க்கட்சி பிரமுகர்கள் சிலர் இதனை பார்த்து முகத்தை சுழித்துக் கொண்டுள்ளனர்.

அன்று மாலை மகிந்தவை சந்தித்தபோது இதனை அவர்கள் கூறியுள்ளனர். ராஜபக்ச குடும்ப உறுப்பினர் ஒருவர் இவ்வாறு நடந்து கொள்வது வெட்கக்கேடானது என அவர்கள் முறையிட்டுள்ளனர். எனினும், மகிந்த இதற்கு பதிலளிக்கவில்லையென தெரிகிறது.

யோஷித தொடர்பில் நிதிக்குற்றவியல் பிரிவு நடத்தி வந்த விசாரணை முடங்கிப் போயுள்ளதாக ஜேவிபி உள்ளிட்ட கட்சிகள் குற்றம் சுமத்தி வருவது குறிப்பிடத்தக்கது. சிஎஸ்என் நிறுவனத்திற்கு நிதி எப்படி வந்தது என்பதில் தெளிவில்லை என நடந்த விசாரணையில் பாட்டியின் ஊடாக வந்ததாக வாக்குமூலமளிக்கப்பட்டது. எனினும், அதன் பின்னர் விசாரணை நகரவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.



# காந்தியை தெரியும்... ஹன்டியை தெரியாது!

## முல்லைத்தீவில் முகம்சுழிக்கும் மக்கள்

நம்மாழ்வார்

முல்லைத்தீவில்சட்டவிரோதமாகஅமைக்கப்பட்ட காந்திசிலை புதிய சர்ச்சைகளை கிளப்பியுள்ளது. நகரமையத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டதென்பதே ஒரு சர்ச்சையாக நீடித்துக் கொண்டிருக்க, அதை இரவோடிரவாக இனம்தெரியாதவர்கள் இடித்து வீழ்த்தியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக நான்கு இளைஞர்கள் பொலிசாரால் சந்தேகத்தின் பெயரில் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். அந்த மூன்று இளைஞர்களும் சிலைஉடைப்பில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என பொலிசாரிடம் அடையாளம் காட்டியது முல்லைத்தீவிலுள்ள தமிழரசுக்கட்சி புள்ளி ஒருவரே!

இது தற்போதைய கொந்தளிப்பு நிலவரத்தின் சுருக்கம்.

முல்லைத்தீவு நகரத்தில் மாவீரன் பண்டாரவன்னியன் சிலை வைப்பதற்கு வடமாகாண கலாசார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. அதற்கு அருகில் அனுமதியில்லாமல் அவசரகதியில் அமைக்கப்பட்டதே காந்தி சிலை. அண்மையில் நடந்த முல்லைத்தீவு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் இந்த விடயம் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அனுமதிபெறப்படாமல் கட்டவிரோதமாகவே காந்தி சிலை அமைக்கப்பட்டதென பிரதேசசபை அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர்.

சட்டவிரோத காந்தி சிலைக்கு எதிராக முல்லைத்தீவு இளைஞர்கள் சமூகவலைத் தளங்களில் பதிவுகளை இடத் தொடங்கினார்கள். சமூக வலைத்தளங்களிற்கே உரிய இயல்பின்படி அது காட்டுத்தீயாக பற்றி, சமூக வலைத்தளங்களில் பெரியளவில் விவாதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவே சிலை உடைக்கப்பட்டுள்ளது. சிலை உடைப்பில் சம்பந்தப்பட்டதாக பொலிசாரிடம் அடையாளம் காட்டப்பட்ட இளைஞர்கள், காந்தி சிலை அமைப்பதற்கு எதிராக சமூகவலைத் தளங்களில் தீவிரமாக எழுதியவர்கள்தான்.

இது அந்த சம்பவத்தின் பின்னணி. இதற்கெல்லாம் அப்பாலும் ஒரு பின்னணி உள்ளது. அதுதான் சம்பவத்தின் உள் அரசியல்.

முல்லைத்தீவு நகர மையத்தில் பண்டாரவன்னியன் சிலை வைப்பதற்கு வடக்கு கலாசார அமைச்சின் மூலம் ஆயத்தப்பணிகள் நடந்து கொண்டிருந்தன. இந்தப்பணியில் முன்னின்றவர் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன். அவர் முல்லைத்தீவை சேர்ந்தவர்.

"முல்லைத்தீவு நகரமையத்தில் பண்டாரவன்னியன் சிலை அமைந்தால் அது ரவிகரனின் பெயர் சொல்வதாக அமைந்துவிடும் என்பதால்தான் அதை தடுப்பதற்காக அவசரகதியில் காந்திசிலை வைத்தார்கள்" என்கிறது ரவிகரன் தரப்பு.

அவசரகதி காந்திசிலையின் பின்னணியில் இருந்தது முல்லைத்தீவு எம்.பி சிவமோகன் தரப்பு. காந்தி அகிம்சையை போதித்தவர். அவரது சிலையை ஏன் புத்தர்சிலையை போல பார்க்கிறார்கள் என தெரியவில்லை. இந்தசிலை அமைக்கப்பட்டதற்கு எந்த உள்நோக்கமும் கிடையாது. காந்திசலைக்கு எதிராக பேஸ்புக்கில் பிரசாரம் செய்தது யார், உடைத்ததன் பின்னணியெல்லாம் எங்களுக்கு தெரியும்" என்கிறார்கள் அவர்கள்.

இந்த ஏட்டிக்குப்போட்டிக்கு பின்னால் உள்ளது கட்சி பிரச்சனை!

சிவமோகன் அரசியலுக்கு நுழைந்தது ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினூடாக. ஆரம்பத்தில் கட்சிக்கு தீவிர விசுவாசியாக இருந்தார். மாகாணசபை உறுப்பினர்களின் பதவியேற்பு சர்ச்சை ஏற்பட்டபோது, தலைமையுடன் நெருக்கமாக நின்று விசுவாசத்தை வெளிப்படுத்தினார். அதனாலேயே நாடாளுமன்ற தேர்தலிலும் ஆசனம் கிடைத்தது.

சிவமோகன் தேர்தலில் வெற்றிபெற்றதும் தமிழரசுக்கட்சிக்கு தாவிவிட்டார். கட்சி தாவிய பின்னர் சிவமோகன் அமர்களமாகவே செயற்பட்டார். முதலமைச்சரை காரசாரமாக விவாதித்து, வடமாகாண விவசாய அமைச்சு தென்னிந்திய கவிஞரை அழைத்ததற்கு ஏட்டிக்குபோட்டியாக தென்னிந்திய நடிகர்களை அழைத்து வந்ததென "புகுந்த இடத்தை" மகிழ்ச்சிப்படுத்த கடுமையாக உழைத்தார்.

ரவிகரனும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பை சேர்ந்தவர்.

முல்லைத்தீவை யார் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்ற திரைமறைவு போட்டிதான் இப்பொழுது நடக்குதென்கிறார்கள். "இருவரும் ஏட்டிக்குப்போட்டியாக செயற்படுகிறார்கள். இருவருக்கும் ஆதரவாக கொஞ்சப்பேர் இருக்கிறார்கள். சிலை வைப்பு, உடைப்பு, பொலிஸ் முறைப்பாடு எல்லாவற்றிற்குமே இந்த போட்டிதான் காரணம்" என்கிறார்கள் அங்குள்ள மக்கள்.

நாம் பேசியவரையில் அங்குள்ளவர்கள் இந்த மோதலை ரசிக்கவில்லை. "தமிழ்தேசிய கூட்டமைப்பாக செயற்படுவதற்கு மக்கள் அங்கீகாரத்தை பெற்றுவிட்டு தமிழரசுக்கட்சி ஈ.பி.ஆர்.எல்.எவ் மோதலில் ஈடுபடுவது எமது வாக்கை துஷ்பிரயோகம் செய்வதாகும். உரிமைக்காக போராடும் இனமொன்றின் மக்கள் பிரதிநிதிகள் போராளிகளாக இருக்க வேண்டுமே தவிர, இப்படி களைக்கூத்தாடிக் கொண்டிருக்க கூடாது" என கவலையுடன் சொன்னார் பாடசாலை ஆசிரியர் ஒருவர்.

சில காலமாகவே நடந்துவரும் இந்த மோதலில் யார் பக்கம் நியாயம் உள்ளதென்ற விசாரணைக்குள் நாம் புகவில்லை. நாம் பேசியவரையில் மக்களிடமும் அந்த ஆர்வம் இருக்கவில்லை. "பார்க்கவே சகிக்கவில்லை" என ஒற்றை வரியில் பேசிவிட்டுத்தான் போகிறார்கள்.

இந்த சிலை விவகாரத்தில் பெரும்பாலான மக்களின் அபிப்பிராயமாக உள்ளது இது தேவையற்ற சர்ச்சை. முல்லைத்தீவிலுள்ள ஆங்கிலேயர்களின் கோட்டையை தகர்த்து பீரங்கியை கைப்பற்றி, தமிழ் வீரத்திற்கு முகவரி தந்த பண்டாரவன்னியனின் சிலையை முல்லைத்தீவில் அமைப்பது பொருத்தமானதென்பதுதான் பெரும்பாலானவர்களின் அபிப்பிராயம். அதற்கு பக்கத்தில் அவசரமாக எதற்கு காந்தித் தாத்தா என கேட்கிறார்கள்.

உண்மைதான். நமக்கு எதற்கு காந்தி?

காந்தி அகிம்சையை போதித்தார் என்று சிலை வைக்கிறோம். வைரமுத்து நன்றாக பாடல் எழுதுகிறார், நாசர் நன்றாக நடிக்கிறார் என அழைத்து வருகிறோம். இந்தி திரைப்படங்கள்தான் நன்றாக இருக்குமென பார்க்கிறோம். இந்திய தலங்களில்தான் உச்சபட்ச அருள் கிடைகுமென யாத்திரை கிளம்புகிறோம். தென்னிந்திய பாணியில் பேசிக்கொண்டிருக்கிறோம். தென்னிந்திய செய்தி சனல்களைதான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அப்படியாயின் நம்மிடையே அகிம்சைக்கு உதாரணமாக யாரும் இல்லையா? நம்மிடையே கலைஞர்கள் இல்லையா? நமக்கென்றோர் நலியாக் கலையில்லையா?

நமது அடையாளங்களை சிங்களவர்கள் அழிக்கிறார்கள், புத்தர்சிலை வைக்கிறார்கள் என கத்திக்குழறிக் கொண்டிருக்கிறோமேஞ் நமது அடையாளம் எது? காந்தி சிலையா? வைரமுத்துவின் கவிதைகளா? தென்னிந்திய திரைப்படங்களா? தென்னிந்திய அடையாளங்களா?

உரிமைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த இனமொன்று, சுய அடையாளங்களை பேணாமல், இரவல் அடையாளங்களில் சுகம் கண்டுகொண்டிருப்பதை என்னவென்று சொல்வது?

நமது வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் சுயஅடையாளத்தை பேணுவதில் முன்னின்றவர்கள். நீண்டபல காலமாக தென்னிந்திய மயக்கத்தில் மூழ்கியிருந்த நம்மவர்களை அவர்கள்தான் பெருமளவில் மீட்டெடுத்தார்கள். தென்னிந்திய மயக்கத்திலிருந்த நமது மூத்தவர்கள் நமது அடையாளங்களை முறையாக அடையாளப்படுத்த தவறியிருந்தனர். அதற்கான முயற்சிகளில் புலிகள் இறங்கினார்கள். வரலாற்று காப்பகங்கள், ஆவண காப்பகங்கள், தொல்லியல் சின்னங்களை சேமித்தல், தமிழர் கட்டிடக்கலைகளை மீள நிலைநாட்டல் என அவர்கள் நீண்டபயணமொன்றை ஆரம்பித்தனர். எனினும், அந்த அமைப்பு தோற்கடிக்கப்பட்டது நமது அடையாளங்களை நிறுவிக்கொள்ள கிடைத்த வாய்ப்பையும் அழித்து விட்டது.

இப்போதைய மக்கள் பிரதிநிதிகள் பற்றி சொல்லிக்கொள்ளத் தேவையில்லை. மக்கள் பிரதிநிதிகள், கட்சிகள், மாகாணசபை உள்ளிட்ட எந்த அரசகட்டமைப்புக்களிடமும் இப்படியான எந்த திட்டமும் கிடையாது.

இதில் இன்னும் துயரம் நமது மக்கள் பிரதிநிதிகளின் புரிதல். வடமாகாண விவசாய அமைச்சின் நிகழ்வொன்றிற்கு வைரமுத்து அழைக்கப்பட்டார். அதற்கு பின்னர், புதுக்குடியிருப்பில் நடந்த கலைஞர் கௌரவிப்பொன்றில் தென்னிந்திய நடிகர்கள் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். சிவமோகன் எம்.பி இந்த நிகழ்வை ஒழுங்கமைத்தார். உள்ளூர் கலைஞர்கள் இன்றும் வயிறு பற்றி எரிந்து கொண்டிருக்கிறார்கள்.





சிவமோகன் - ரவிகரன்

எதற்காக இந்த இந்திய மோகம்?

நம்மிடமும் நீண்ட தத்துவ மரபும், கலையும், இலக்கியமும், வாழ்வியலும் உள்ளது. ஆனால் என்னஞ் இன்னும் முறையாக வகைப்படுத்தப்படாமல், அடையாளம் காணப்படாமல் மண்ணோடு மண்ணாக அனேகமானவை உள்ளன.

காந்தி அகிம்சைவழியில் பயணித்தார். அவரிடமிருந்து கற்றுக்கொள்ள விடயங்கள் உள்ளன என்பது சரி. நம்மிடம் அகிம்சைக்கு உதாரணங்கள் கிடையாதா? திலீபனை விடலாம். ஏனெனில் அந்தப்பெயர் என்றாலே பலருக்கு இப்போது அலர்ஜி.

ஹன்டி பேரின்பநாயகம் என்றொருவர் இருந்தார். 1924 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசை ஆரம்பித்தார். முழு இலங்கைக்கும் விடுதலை வேண்டும் என்ற கோரிக்கையுடன் அமைப்புரீதியில் முதலாவதாக செயற்பட்ட அமைப்பு. தேசிய ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை என பல முற்போக்கான விடயங்களை அப்பொழுதே வலியுறுத்தினார்.

தந்தை செல்வாவை கூடவா இவர்கள் மறந்து விட்டார்கள்?

காந்திசிலை விவகாரத்தில் இப்பொழுது இளைஞர்கள் சிலர் பொலிஸ் பிடியில் சிக்கியுள்ளனர். இது எவ்வளவு பெரிய அசிங்கம். நம்மவர்களின் அரசியல் போட்டியில் நமது இளைஞர்களே வில்லங்கத்தில் சிக்கியுள்ளார்கள்.

அரசியல் என்பதே வெட்கக்கொடானது என்பது இதைத்தானா?

# புதிய ஆண்டு...
# புதிய அணுகுமுறை

புதிய ஆண்டில் காலடியெடுத்து வைத்துள்ளோம். புதிய ஆண்டில் புதிய நம்பிக்கைகளுடன் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளோம். ஒவ்வொரு புத்தாண்டும் தமிழர்களிற்கு எதிர்பார்ப்பை தூண்டுவதுதான். நம்பிக்கைகளுடன்தான் ஒவ்வொரு ஆண்டுக்குள்ளும் காலடியெடுத்து வைக்கிறோம். அந்த நம்பிக்கைகள் அந்த ஆண்டில் நிறைவேறியதா என்பதை விட, பெரும் துயருக்குள்ளிருந்து மீண்டெழ உறுதுணையாக அந்த நம்பிக்கைகள் அமைந்திருந்தன என்பதே யதார்த்தம்.

இந்த ஆண்டிலும் நம்பிக்கைகள், எதிர்பார்ப்புக்களுடன் நுழைகிறோம். 2017 இரண்டு விடயங்களில் தமிழர்களிற்கு முக்கியத்துவம்மிக்க ஆண்டாக அமைகிறது. புதிய ஆண்டு தமிழர்களின் முன் இரண்டு பெரிய சவாலை வைத்துள்ளது.

முதலாவது அரசியலமைப்பு உருவாக்கம். இந்த ஆண்டில் இல்லாவிட்டால் எந்த ஆண்டிலும் தமிழர் பிரச்சனை தீர்வது கடினம் என்பதே யதார்த்தம். கடந்த வருடத்தில் அரசியலமைப்பு மாற்றம் நிகழுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் அது நிறைவேறவில்லை. எனினும், மாபெரும் பணியொன்றிற்கான தயாரிப்பு ஆண்டாக அதனை கொள்ளலாம்.

இந்த வருடத்தில் அந்த பணியை கச்சிதமாக முடிக்க வேண்டியது தமிழர்களின் கடமை. கட்சிகள், கட்சி தலைவர்களின் பொறுப்பு அது, நாம் அதில் சம்பந்தப்பட்டவர்கள் அல்லவென்ற வழக்கமான மனநிலையிலிருந்து மக்கள் வெளியில் வர வேண்டும். நமக்கு என்ன தேவை, எங்கள் பிரதிநிதிகளாக சென்று இதையெல்லாம் செய்து வாருங்கள் என தேர்தலில் தெளிவாக சொன்னீர்களோ, அதுவெல்லாம் சரியாக நடக்க நீங்கள் தேர்வு செய்த பிரதிநிதிகளை கண்காணித்துக் கொள்ள வேண்டும். உங்கள் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற்கு சென்று, நடப்பவற்றை கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

நமது சூழலில் இது புதிய அரசியல் கலாச்சாரமாக இருக்கலாம். ஆனால் இது அவசியமான கலாச்சாரம். உங்கள் ஒவ்வொருவரின் வாக்கும்தான் மக்கள் பிரதிநிதிகள் என்ற உயரிய மகுடத்தை அவர்கள் சூட வழியேற்படுத்தியது. அதனால் உங்கள் ஒவ்வொருவரின் கேள்விக்கும் அவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

வாக்களித்த மக்களை உதாசீனம் செய்யும் அரசியல் கலாச்சாரம் நம்மிடையே இல்லையென்பது ஆறுதலானது.

இரண்டாவது சவால் இயற்கை தந்தது. கடந்த வருடம் பருவமழை பொய்த்து விட்டது. சராசரியான மழை வீழ்ச்சி கிடைக்கும் ஆண்டுகளிலேயே வறட்சி தீர்க்க முடியாத பிரச்சனையாக இருக்கிறது. கடந்த வருடம் மிகக்குறைந்த மழைவீழ்ச்சிதான் பதிவாகியுள்ளது. அதனால் இந்த வருடம் கடுமையான வறட்சியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

வறட்சி நமக்கு புதியதல்ல. வடக்கு கிழக்கிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகள் உள்ளன. அடிக்கடி வறட்சி இந்தப்பகுதிகளில் ஏற்படுவதுண்டு. நீர்நிலைகள் வற்றி, மனிதர்களும் விலங்குகளும் நீருக்காக அலைவதுஞ் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவது அடிக்கடி ஏற்படும் நிகழ்வு. ஆனால் இந்த வறட்சியை நிரந்தரமாக தீர்க்க எந்த வழிமுறையையும் அரசு கண்டறியவில்லை. உள்ளூராட்சி அதிகாரங்களை கொண்டுள்ள நம்மவர்களும் எதற்கும் முயற்சிக்கவில்லை.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு பவுசர்களில் தண்ணீர் அனுப்புவது என்பதற்கு அப்பால் எதையும் சிந்திக்கவில்லை.


இருக்கின்ற நீர் மாசடைகிறது, உவரடைகிறது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து செல்கிறது. இது எதற்கும் நம்மால் தீர்வு கண்டுபிடிக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் கழிவு எண்ணெய் விவகாரம் எழுந்தபோது, அதையே முறையாக கையாள முடியாத செயலற்ற நிர்வாகம்தான் நம்முடையது. குடிநீரில் கழிவு எண்ணெய் கலந்ததா? இல்லையெனில் நீரில் கலந்தது என்னவென்பதை இறுதிவரை நம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. அல்லது ஏதோ காரணத்தால் செய்யாமல் தவிர்த்தோம்.

அரசியலமைப்பு உருவாக்கம், மற்றும் நீர் முகாமைத்துவம் இரண்டுடனும் மக்கள் பிரதிநிதிகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். அதிகாரிகளிற்கு உத்தரவிடுபவர்களாக மக்கள் பிரதிநிதிகள்தான் செயற்படுகின்றனர். மக்கள் பிரதிநிதிகளை பொறுப்புச் சொல்ல வைக்கும் கலாச்சாரமொன்றை உருவாக்கினால் மாத்திரமே மக்கள் பிரதிநிதிகளை செயற்படுபவர்களாக மாற்ற முடியும்.

கடந்து செல்லும் ஒவ்வொரு ஆண்டும் நமக்கு படிக்கல்லாகவும், அனுபவங்களின் சேமிப்பாகவும் அமைய வேண்டும். அப்படி பார்த்தால் இந்த இரண்டு பிரச்சனைகளையும் நாம் புதிய ஆண்டுவரை இழுத்து வந்திருக்க வேண்டியதில்லை. இந்த தவறையும் ஒரு அனுபவமாக்கி, 2017 இல் செயற்படுவோம்.


தீபம்
197, அரசடிவீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர்பீடம்: 0768255562
விளம்பரம்: 0768255560, 0768255567
விநியோகம் 0768255563
செய்திகளிற்கு: deepamdesk@gmail.com
செய்திகளை அறிந்திட: deepamnews.lk

பத்திரிகை, இணையத்தளத்தில் செய்தியாளர்களாக செயற்பட ஆர்வமுள்ளவர்களிற்கு களங்கள் விரிந்துள்ளன. செய்தித்துறை ஆர்வம், புத்தாக்க திறனுள்ளவர்கள் உடன் தொடர்புகொள்ளுங்கள்.
0768255562, editor@deepam.lk





# இலங்கையின் ஒரேயொரு பெண்



தினுஷா பற்றித்தான் கடந்த வாரம் சிங்கள ஊடகங்கள் பேசிக்கொண்டன. இலங்கையிலுள்ள ஒரேயொரு பெண் என்றும் தினுஷாவை சொல்லலாம். ஒரேயொரு பெண் என்றதும் ஏடாகூடமாக பார்க்காதீர்கள். மிக குறைந்த வயதிலே மனிதர்களின் இறுதிப் பயணத்த ஆயத்தப்படுத்தும் தொழிலை மிக வெற்றிகரமாக துணிவுடன் செய்து வரும் முதல் பெண் எனலாம்.

ருவன்வெல்ல ராஜசிங்க மைதானத்திற்கு அருகில் வசிக்கும் மஞ்சுல ஜயஷாந்த மற்றும் விநித்தா சில்வாவின் ஒரு மகள் தினுஷா.

பொறியிலாளராகும் கனவில் இருந்த தினுஷா குடும்ப வறுமை காரணமாக தொழில் செய்ய ஆரம்பித்தார். தன்னால் அதிக பணம் ஈட்ட கூடிய தொழிலாக மரண ஊர்வலங்களை தயார் செய்யும் தொழிலை தேர்ந்தெடுத்து மிக துணிவுடனும் வெற்றிகரமாகவும் நடாத்தி வருகின்றார் இவர்.

பாடசாலை செல்லும் வயதிலியே தந்தையின் வாகனம் பழுது பார்க்கும் இடத்தில் உதவி செய்து வேலைப் பயின்றுள்ளார். அப்போது வாகனங்களை ஓட்டுவதற்கு பயிற்சியும் பெற்றுள்ளார்.

பாடசாலையில் 11ஆம் வகுப்பு படிக்கும்போது சாதாரண வாகனத்தில் இருந்து பெரிய வாகனங்கள் பெகோ இயந்திரங்கள் உட்பட நிர்மாணிப்பு இயந்திரங்கள் போன்றவற்றை செயற்படுத்தும் முறையை பயின்றுள்ளார்.

வாகனம்திருத்தும்இடத்திற்குமேலதிகமாகதினுஷாவின் தந்தை ருவன்வெல்ல கூட்டுறவு சவப்பெட்டி செய்யும் கடை ஒன்றில் பணியாற்றியுள்ளார்.

அங்கு தனது தந்தை எம்பம் செய்யும் முறையினையும் பார்த்து பழகியுள்ளார். அந்த நடவடிக்கைகளுக்கு தினுஷா உதவி செய்துள்ளார். பொறியிலாளராகும் கனவை தினுஷா கைவிட்டார்.

எனினும் பொறியிலாளருக்கு கிடைக்கும் சம்பளத்தை விடவும் உயர் வருமானம் ஒன்றை மாதாந்தம் அவர் ஈட்டினார். மலர்சாலையின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மேலாக இறுதி ஊர்வல வாகனத்தை செலுத்துவதும் இந்த பெண் தான்.

இந்த நிலையில் தங்கள் வீட்டிலேயே மலர்சாலை ஒன்றை தினுஷா உருவாக்கியுள்ளார். அதற்கு அருகிலேயே வாகனம் பழுது பார்க்கும் இடமும் உள்ளது.

சில சந்தர்ப்பத்தில் அவரால் இலங்கையில் உள்ள முதல் மற்றும் ஒரே ஒரு பெண் மலர்சாலை இயக்குனராக மாறுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலர்சாலையில் உள்ள அனைத்து பொருட்களும் வீட்டில் உள்ளபோது பலர் அச்சப்படுவதாகவும், வாகனம் திருத்த வரும் சிலர் சற்று தூரத்தில் இருந்தே பேசுவதாகவும் அந்த அளவில் சவபெட்டிக்கு அச்சப்படுவதாக தினுஷா கூறுகின்றார்.

“மகன் ஒருவன் தங்களுக்கு இருந்திருந்தாலும் இப்படி செய்திருக்கமாட்டார், எனினும் மகள் அச்சமின்றி இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றாள். இந்த வேலைக்கு நல்ல அர்ப்பணிப்பு அவசியம். இதற்கான அனைத்து திறமையும் மகளுக்கு உள்ளது“ என்கிறார்கள் தினுஷாவின் பெற்றோர்.

மாதாந்தம் இரண்டரை லட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை தினுஷா சம்பாதிக்கின்றார். மாதாந்தம் 10 முதல் 15 சடலங்களுக்கு எம்பம் செய்யப்படுகின்றது.


வாழ்க்கை பற்றி தினுஷா கூறும்போது “வேலை நேரம் தவிர்ந்த மற்ற நாட்களில் நானும், தாயும் தந்தையும் சுற்றுலா பயணங்களுக்கு செல்வோம். சமூக சேவைகளுக்கு உதவி செய்வேன். மற்றவர்கள் ஆச்சரியப்பட்டு பார்க்கும் அளவில் இந்த தொழிலை வித்தியாசமானதாக நான் உணரவில்லை. ஒரு பெண் வைத்தியரானால், ஒரு பெண் வாகனம் ஓட்டினால் என்ன செய்வார்களோ அதனை நான் செய்கிறேன்“ என்கிறார்.

விரைவில் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளார். அத்துடன் மலர் சாலையை மேலும் அபிவிருத்தி செய்யவுள்ளாராம். “நன்றாக சம்பாதிக்கிறேன், பெற்றோரை நல்ல விதமாக பார்த்து கொள்கிறேன். இதனைவிட வேறென்ன வேண்டும்?“ என்கிறார் அவர்.

திருமணம் பற்றி கேட்டால், அலட்டிக்கொள்ளாமல் சொல்கிறார் “என்னை புரிந்து கொண்ட ஒருவர் வரும்போது நிச்சயம் திருமணம் நடக்கும்”.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
editor@deepam.lk

# பாடசாலைகள் 7.30க்கு சாத்தியமா?



எஸ்.நிதர்சன்

வடமாகாண பாடசாலைகளின் ஆரம்ப நேரத்தில் மாற்றம் செய்துள்ளது வடக்கு கல்வியமைச்சு. இதுவரை காலை 8 மணிக்கு ஆரம்பித்த பாடசாலைகள் இனி 7.30 இற்கு ஆரம்பிக்கவுள்ளன. முடிவடையும் நேரமும் அரை மணி முன்னகர்ந்து 1.30 ஆகியுள்ளது.

கடந்த தவணை முடிவில் கல்வியமைச்சு இந்த திடீர் அறிவித்தலை வெளியிட்டுள்ளது. ஜனவரி திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கும் போது புதிய நேரமாற்றத்தின்படி காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளன.

**நேரமாற்றத்திற்கு காரணம் என்ன?**

இதுதான் மிகக்குழப்பமாக உள்ளது. கல்வியமைச்சர் குருகுலராஜா சொல்கிறார் இலங்கையிலுள்ள ஏனைய 22 மாவட்டங்களிலும் காலை 7.30 இற்குத்தான் பாடசாலை ஆரம்பிக்கிறது. அதனால் வடக்கில் அமுல் படுத்துவதில் ஒரு பிரச்சனையும் இல்லை" என. ஆனால் கல்வியமைச்சின் செயலாளர் ரவீந்திரன் கொடுக்கும் விளக்கம் சற்று வித்தியாசமானது. "வடக்கில் ஏற்கனவே மூன்று மாவட்டங்களில் 7.30 இற்குத்தான் பாடசாலை ஆரம்பிக்கிறது. அதனால் யாழ்ப் பாணத்திலும் மாற்றம் செய்துள்ளோம்" என.

வடக்கு கல்வியமைச்சில் உயர்பீடத்தில் இருக்கும் இருவரிடமிருந்தும் சற்று வேறுபட்ட பதில்கள் வருவது ஏன் என்பதுதான் புரியவில்லை.

இந்த குழப்பமோ என்னவோ தெரியவில்லை, இந்த திட்டத்திலும் நிறைய குழப்பம் உள்ளது. காலை 7.30 இற்கு பாடசாலை என்ற அறிவித்தல் வந்ததும், கிடைத்த வரவேற்பை விட எதிர்ப்புத்தான் அதிகமாக உள்ளது. ஏனைய மாகாண நிலைமையும் வடக்கின் நிலைமையும் ஒன்றல்ல, வடக்கிலுள்ளதை போன்ற போக்குரவத்து பிரச்சனையான, அதிக தொலைவில் உள்ள பாடசாலைகள் பிற இடங்களில் கிடையாது. கல்வியமைச்சு எல்லா தரப்பினரின் பிரச்சனையையும் கருத்தில் எடுக்காமல் அவசரகதியில் எடுத்த தீர்மானம் இதுவென்ற குரல்தான் அதிகமாக எழுந்து கொண்டிருக்கிறது.

காலை 7.30 இற்கு பாடசாலைகளை ஆரம்பிப்பதென்ற முடிவிற்கு மேல் மாகாணம் முதலில் வந்ததற்கு காரணம் போக்குவரத்து நெரிசல். காலை 8 என்பது அதிக போக்குவரத்து நெரிசல் மிக்க நேரம். பாடசாலை நேரத்தை சற்று முன்னகர்த்தினால் போக்குவரத்து நெரிசலை குறைக்கலாமென திட்டமிட்டார்கள். போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த அங்கு அது அவசியமாக இருந்தது. அதனை தொடர்ந்து மற்றைய மாகாணங்களும் இந்த நடைமுறையை பின்பற்றின.

**வடக்கில் ஏன் இந்த நேரமாற்றம்?**

பெரும் போக்குவரத்து நெரிசல் கிடையாது. வேறென்ன அவசியம்?

ஏனைய மாகாணங்கள் நடைமுறைப் படுத்துகின்றன என்பதற்காக ஒரு திட்டத்தை நமது பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்துவது புத்திசாலித்தனமா என்பதே இப்போதைய கேள்வி. ஏனெனில் மேல்மாகாணம் போன்றதல்ல வடமாகாணம். இரண்டும் நேரெதிரான வித்தியாசங்களை கொண்டவை.

முக்கியமாக போக்குவரத்து. வட மாகாணத்தில் பேரூந்துகள் ஒழுங்காக செல்லாத கிராமங்களே ஏராளமாக உள்ளன. எப்பொழுதாவது பேரூந்து வரும் கிராமங்களும் உள்ளன. வதிவிடத்திலிருந்து நூறுக்கும் அதிகமான கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாடசாலையில் நியமனம் பெற்ற ஆசிரியர்களே ஏராளம் பேருள்ளனர்.

ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்தில் நியமனம் பெற்றவர்கள் நிறையப் பேருள்ளனர். அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் அதிகமானவர்கள் நியமனம் பெற்றுள்ளனர். காலை எட்டு மணி பாடசாலைக்கே செல்ல முடியாமல் பலர் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், கல்வியமைச்சின் இந்த திடீர் அறிவிப்பால் ஆடிப்போயுள்ளனர் பெரும்பாலான ஆசிரியர்கள்.

வடக்கில் பன்னிரண்டு கல்வி வலயங்கள் உள்ளன. அவற்றில் வவுனியா தெற்கு, மன்னார் கல்வி வலயங்களில் இந்த நேர மாற்றம் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டு விட்டது. இந்த வலயங்களில் நேரமாற்றம் செய்யப் பட்ட போது பெரியளவில் எதிர்ப்பு கிளம்ப வில்லை. காரணம், இரண்டும் சிறிய, நகர்ப் புறம் சார்ந்த கல்வி வலயங்கள். நகர்ப்புறத் தில் போக்குவரத்திற்கு சிரமமில்லையென்ப துடன், நகர்ப்புற பாடசாலைகளிற்கே அதிகாரிகள் போதிய வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள் அல்லவா!

யாழ்ப்பாணத்தில் இருந்து தூர இடங் களிற்கு செல்லும் ஆசிரியர்கள் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாமல் படும் சிரமம் சொல்லில் அடங்காதது. போக்குவரத்து வசதிகள் குறைந்த பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் சொல்லும் கதைகள் இரத்தக்கண்ணீர் வரவைப்பவை. பேரூந்துகள் இல்லாத சமயத்தில் வீதியால் செல்லும் வாகனங்களிற்கு கைநீட்டிக் கொண்டிருந்த காலத்தை நினைவுகூர்ந்தார் நெட்டாங்கண்டலில் கல்வி கற்பித்த ஆசிரியையொருவர்.

இதுதவிர, வசதி குறைந்த பிரதேசங்களில் உள்ள பாடசாலைகள் பெரும்பாலானவற்றில் முறையான விடுதி வசதிகளே கிடையாது. இப்படியான நிலைமை வடமாகாண கல்வியமைச்சுக்கு தெரியாதா? இதுவரை கண்ணை மூடிக் கொண்டிருந்ததா என கொந்தளிக்கிறார்கள் ஆசிரியர்கள்.

> **யாழ்ப்பாணத்தில் உள்ள ஆசிரியர் வவுனியா வடக்கில் நியமனம் பெற்றிருந்தால் 130 KM க்கும் அதிகமான தூரம் பயணிக்க வேண்டும். சுமார் மூன்று மணித்தியாலம் பிரயாணம் செய்ய வேண்டும்.**

> **காலை 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிப்பதால் மாணவர்களிற்கு கல்வி கற்கும் மனநிலை, சூழல் அமையும். 1.30 இற்கே பாடசாலை விடுவதால் மாணவர்கள் நேரத்துடன் வீடு சென்று ஓய்வெடுத்து, தனியார் கல்வி நிலையம் செல்லலாம் என்கிறனர் கல்வியமைச்சின் அதிகாரிகள்.**

நேரமாற்ற முடிவு எடுக்க முன்னர் ஆசிரியர் சங்கங்களுடன் கல்வியமைச்சு கலந்துரையாடவில்லை, ஆசிரியர்களின் பிரச்சனையை கருத்தில் எடுக்காமல் ஒரு தலைப்பட்சமாக செயற்படுகிறது என்பது ஆசிரியர் சங்கத்தின் குற்றச்சாட்டு. நேரமாற்ற விவகாரத்தில் கல்வியமைச்சு ஏதேச்சதிகாரமாக செயற்படுகிறதென குற்றம் சுமத்தினார்கள் ஆசிரியர் சங்க பிரதிநிதிகள்.

நேர மாற்றத்தால் வசதிகுறைந்த பிரதேச பாடசாலையில் கடமையாற்றும் தூரஇடத்து ஆசிரியர்களும், மாணவர்களும்தான் அதிகம் பாதிக்கப்பட போகிறார்கள். இந்த பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் உரிய நேரத்தில் பாடசாலை செல்ல சிரமங்களை எதிர்கொள்வதுடன், முதலாவது பாடத்தில் போதிய சிரத்தையெடுக்க முடியாத நிலையேற்படலாம்.

அதுபோல, கல்வியமைச்சு கணக்கில் எடுக்காத பிரச்சனையொன்றுள்ளது. வடக்கிலுள்ள எல்லா மாவட்டங்களிலுமுள்ள பின்தங்கிய பிரதேச பாடசாலைகளில் மாணவர்களின் தாமதித்தவருகை அதிகளவில் பதிவாகி வருகிறது. 8 மணிக்கு ஆரம்பிக்கும் பாடசாலைக்கே மாணவர்களை சரியான நேரத்திற்கு வரவைக்க முடியாத இந்த கல்விக் கட்டமைப்பால் எப்படி 7.30 இற்கு மாணவர்களை வரவைக்க முடியும்?

யாழ்ப்பாண நகரப்பகுதிகள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா நகரப்புற பாடசாலைகள் சரிஞ் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னாரின் உள்கிராமங்களின் பாடசாலை களின் கதி?

முறையான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்த பின்னர் அல்லவா நேர மாற்றம் செய்திருக்க வேண்டும். எதற்கிந்த அவசரம்?

**குயின்றஸ் றீகன் றஞ்சித்குமார்**
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

இந்த நடைமுறை பிள்ளைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். 7.30 பாடசாலையெனில் பிள்ளைகளை நேரத்திற்கே எழுப்பி தயார்செய்து, அவசர அவசரமாக கொண்டு செல்ல வேண்டும். இதனால் பிள்ளைகளிற்கும் பாதிப்பு ஏற்படும். சில பிள்ளைகளுக்கு வருத்தங்களும் இருக்கின்றன. பனி, மழை காலத்தில் இன்னும் பிரச்சனை கூடும். ஆனாலும் பிள்ளைகளுக்கு படிப்பு முக்கியம் தான். அதுக்காக பிள்ளைகள் பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.



**தவராசா சதீஸ்**
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை

எம் பிள்ளைகளுக்கு கல்வி முக்கிய மானது. அந்தக் கல்வியை சிறந்த முறையில் வழங்க வேண்டுமே தவிர அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்து விடக் கூடாது. இந்த நடைமுறை சிலருக்கு சரியானதாக இருந்தாலும் பெரும் பாலானோருக்கு தவறாகவே தெரி கின்றது.



# பேச்சு பல்லக்கு.. தம்பி பொடி நடை!

அன்ரனி பாலசிங்கம்

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூல சர்ச்சை மேலெழுந்ததில், புதிய அரசியலமைப்பு பற்றிய பேச்சுக்கள் பின்தள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டின் இறுதியும், புதிய ஆண்டின் தொடக்கமும் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் தொடர்பான வாதப்பிரதிவாதங்களுடனேயே கழியப் போகிறது.

அரசு உத்தேசித்துள்ள அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் எல்லா மாகாண சபைகளிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதனை பெரும்பாலான மாகாண சபைகள் நிராகரித்துள்ளன. இந்த பத்தி எழுதப்படும்வரையில் ஊவா, தென், வட, மத்திய, வடமேல், சப்ரகமுவ மாகாண சபைகள் தெளிவாக நிராகரித்துவிட்டன. சில மாகாணசபைகள் இன்னும் இந்த சட்டமூலம் பற்றிய விவாதத்தை ஆரம்பிக்கவில்லை. கிழக்கு மாகாணசபை மதில் மேல் பூனை நிலைப்பாட்டை எடுத்துள்ளது போல் தெரிகிறது.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் பல மாகாணசபைகளில் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதில் கவனிக்கத்தக்க விடயம், ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு இல்லாத மாகாணசபைகள்தான் இதனை நிராகரித்துள்ளன. இந்த மாகாணசபைகளில் நடந்த வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு

**மாகாணசபைகளை கடந்து மத்திய அரசு நேரடியாகவே வேலைத்திட்டங்களை செய்ய இயலுமாக உள்ளது. புதிய திருத்தம் அந்த பாதையை இன்னும் அகலமாக்கி கொடுக்கிறது. அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இலகுபடுத்தல் என்ற வியாக்கியானத்தை பிரதமர் கொடுத்துள்ளார்.**

ஆதரவாக ஐதேக உறுப்பினர்களும், எதிராக ஐமசுகூ உறுப்பினர்களும்வாக்களித்துள்ளனர்.

இந்த சட்டமூலம் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுள்ளது. அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் அதனை அங்கீகரித்துள்ளனர். அதன் பின்னர்தான் மாகாணசபைகளிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் சுதந்திரக் கட்சியின் செல்வாக்குள்ள மாகாணசபைகள் இதனை நிராகரித்து விட்டன.

இது இரண்டு கேள்விகளை எழுப்புவதாக உள்ளது. முதலாவது, தேசிய அரசின் தேனிலவு காலம் முடிகிறதா என்ற பகிரங்க கேள்வியை எழுப்பியுள்ளது.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் ஐதேக குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கதான் ஆர்வமாக இருந்தார் என்பதுதான் மாகாண சபைகளிற்குள் ஒலித்த குரல். ஐதேகவின் தனியான நிகழ்ச்சி நிரல் சூழ்ச்சிகரமானது, மாகாணங்களுடனான உறவை சீர்குலைக்கும் விதத்திலானது, புதிய சட்டமூலம் மாகாணசபைகளின் சொற்ப அதிகாரத்தையும் இல்லாமல் செய்துவிடப்போகிறதென எல்லா மாகாணசபைகளிலிருந்தும் ஒரேவிதமான குரல்கள் வருகிறது.

இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது என சு.க முக்கியஸ்தர் எஸ்.பி.திசாநாயக்கா கூற, ஐதேக முக்கியஸ்தர் மலிக் சமரவிக்கிரம கூறுகிறார் பெப்ரவரியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமெனை.

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தை முன்வைத்து இரண்டு பிரதான கட்சிகளின் இணக்க அரசு முரண்படவில்லை. இரண்டு கட்சிகளிற்கிடையிலான தெளிவான இடைவெளியை இந்த சட்டமூலம் காண்பிக்கிறதென்பதே உண்மை.

சட்டமூலத்தை மாகாணசபைகள் தோற்கடித்தது எழுப்பும் இரண்டாவது கேள்வி சு.க ஒரே குடையின் கீழ் இல்லையா என்பது. அமைச்சரவையில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட போது சு.க அமைச்சர்களின் அங்கீகாரம் அதற்கு கிடைத்துள்ளது. எனினும், சு.கவின் மாகாணசபை உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

சு.கவின் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் பெரும்பாலானவர்கள் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள். பிரதேசசபை, நகரசபை தலைவர்கள், உறுப்பினர்கள்தான் மகிந்த ராஜபக்சவின் தற்போதைய அரசியல் முதலீடு. மாகாணசபையின் பெரும்பாலான உறுப்பினர்களின் நாடி பிடித்துப்பார்க்கும் சந்தர்ப்பம் இன்னும் கிடைக்கவில்லை.

இந்த சட்டமூலம் மாகாணசபைகளிற்கு அனுப்பப்படும் போது ஜனாதிபதி மைத்திரியின் கையெழுத்துடன்தான் அனுப்பப்பட்டுள்ளது. ஆனாலும் சு.கவினர் எதிர்த்துள்ளனர்.

அமைச்சர்களாக உள்ள சு.கவினர் மைத்திரி தரப்புடனும், மாகாணசபை உறுப்பினர்கள் வேறு திசையிலும் உள்ளார்களா என்ற கேள்வியையும் இது எழுப்பியுள்ளது.

எவ்வாறெனிலும், இந்த சட்டமூலம் ஆரோக்கியமானதல்ல. மாகாணசபைகளை மேலும் வலுப்படுத்துவதன் மூலமே இலங்கையின் ஜனநாயக கட்டமைப்பை வலுப்படுத்தலாம், அதிகார பகிர்வுதான் இலங்கையின் நீடித்த பிரச்சனைக்கு தீர்வு என்ற பட்டறிவை பெரும் விலைகொடுத்து பெற்றதன் பின்னர், மாகாணசபைகளிற்கு பொறி வைக்கும் காரியங்களில் அரசு ஈடுபட கூடாது. மாகாணசபைகளின் கருத்தையும் மீறி விடாப்பிடியாக இதில் ஈடுபாடு காட்டினால், இந்த அரசின் சமாதான தீர்வு முயற்சிகளையும் எச்சரிக்கையுடன்தான் அணுக வேண்டும்.

தற்போதைய பொறிமுறையில், மாகாண சபைகளை கடந்து மத்திய அரசு நேரடியாகவே வேலைத்திட்டங்களை செய்ய இயலுமாக உள்ளது. புதிய திருத்தம் அந்த பாதையை இன்னும் அகலமாக்கி கொடுக்கிறது. அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இலகுபடுத்தல் என்ற வியாக்கியானத்தை பிரதமர் கொடுத்துள்ளார். என்றாலும், அது நம்பத்தகுந்த பேச்சல்ல.


இந்த சட்டமூலம் நிறைவேறினால் சக்திவாய்ந்த அமைச்சர் நியமனமொன்றும் நிகழும். அது, தற்போதைய இலங்கையின் அரைகுறை அதிகார பகிர்விற்கு வேட்டுவைப்பதாகவே அமையும்.

தற்போதைய ஆட்சியாளர்கள் வாய் திறக்கும் போதெல்லாம் தீர்வு முயற்சிகள் பற்றித்தான் பேசுகிறார்கள். அதிகார பகிர்வை முழுமையாக்கி பிராந்தியங்களை பலப்படுத்துவதன் மூலம், அனைவரையும் ஆட்சியின் பங்காளிகளாக்குவதே சிறந்த திட்டம் என்கிறார்கள். ஆனால் யதார்த்தம் என்னவோ நேர் எதிராகத்தான் உள்ளது.

இதைதான் நம் முன்னோர்கள் சொன்னார்கள் பேச்சு பல்லக்கு. தம்பி பொடி நடை என.







தடங்கன்புளியடி முருகன் ஆலயம்

# விரைவு நகரம் நெல்லியடி

நிலவன்

யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவின் மத்திய நகரமாக பரபரப்பிற்குக் குறைவில்லாமல் காட்சியளிக்கின்றது நெல்லியடி நகரம். கரணவாய், அல்வாய், வதிரி, கொற்றாவத்தை, நவிண்டில், துன்னாலை, கரவெட்டி போன்ற ஊர்களை அருகாக கொண்டது இந்த நகரம். நெல்லியடி என்ற பெயரில் காணப்படும் அழகை ஊர் முழுதும் காணக் கூடியதாக இருப்பது இவ் பிரதேசத்தின் சிறப்பு. பருத்தித்துறை, கொடிகாமம், யாழ்ப்பாணம் செல்லும் வீதிகள் சந்திக்கும் இடமாக நெல்லியடி அமைவது இதன் முக்கியத்துவத்துக்கான காரணமாகின்றது. யாழ்ப்பாணத்தில் துரித கதியில் வளர்ச்சியடையும் நகரம் இது.

### கோவில்கள்

நெல்லியடியிலும் அதைச் சுற்றியும் பற்பல இந்துக் கோவில்களின் தரிசனம் கிடைக்க கூடியதாக உள்ளது. தட்டக்களரிப் பிள்ளையார் ஆலயம், தடங்கன் புளியடி முருக மூர்த்தி, அரசடி வைரவர், ஸ்ரீ முருக மூர்த்தி காளி அம்மாள், வெல்லனைப் பிள்ளையார், உச்சில் அம்மன், தச்சன்தோப்பு பிள்ளையார், கிழவி தோட்ட பிள்ளையார் என்று கோவில்களுக்கு குறைவில்லாத நகரம் இது. கிறிஸ்தவர்களும் நெல்லியடியை சூழ ஓரளவு கணிசமாக வாழ்கிறார்கள். புனித அந்தோனியார் ஆலயம், மாதா ஆலயம் என இரண்டு தேவாலயங்கள் நெல்லியடிக்கு நெருக்கமாக உள்ளன.


பொதுச்சந்தை


மாதா ஆலயம்

### வியாபாரம்

1960-களில் தற்போதைய பஸ் தரிப்பு நிலையம் இருந்த இடத்தில் நெல்லி மரம் ஒன்றும், அரச மரம் ஒன்றும் காணப்பட்டது. அப்போதைய பட்டினசபையால் இவ் இரு மரங்களும் அழிக்கப்பட்டு அவ்விடத்திலேயே பஸ் தரிப்பு நிலையம் உருவானது. (1960களில் கிராமசபை அமைப்பு, பட்டினசபையாக மாற்றம் பெற்றது குறிப்பிடத்தக்கது.) எஸ்.வி. முருகேசு கடை, நடன முருகன் மருந்துக் கடை, சிதம்ரப்பிள்ளை புத்தகசாலை, ஆசைப் பிள்ளை கடை உள்ளிட்ட ஒரு சில கடைகளே அந்தக் காலத்தில் நகரில் பிரபலமான கடைகளாகக் காணப்பட்டன.

ஏல்லா இடங்களையும் போலவே அப்போது நெல்லியடி நகரிலும் சாதிய ஏற்றத்தாழ்வு பேணப்பட்டது. கடைகளில் சாதிய ஏற்றத் தாழ்வுக்கு அமைவாகவே கவனிப்புக்களும் இருந்தன. ஆதிக்க சாதிகளிற்கு போத்தல்களிலும், ஒடுக்கப்பட்டவர்களிற்கு மூக்குப் பேணியிலும் குடிபானங்கள் வழங்கப்பட்டன. எனினும் தற்போதைய நிலைமை அவ்வாறு இல்லை என்பது மகிழ்வான விடயம்.

### சந்தை

'சேனா சந்தை' என்றே நெல்லியடிச் சந்தை ஆரம்பத்தில் அழைக்கப்பட்டது. கொடிகாமம், சாவகச்சேரி, கரவெட்டி போன்ற இடங்களில் இருந்து இங்கே வியாபாரிகள் கூடுவார்கள். (முற்காலத்தில் இந்தியர்களின் வணிகமும் இந்த நகரத்தில் சிறியளவில் காணப்பட்டது.) பழைய சந்தை நெல்லியடி மத்தியில் இருந்தாலும் இட நெருக்கடி காரணமாகசிலவருடங்களின் முன்னர் சந்தை இடமாற்றப்பட்டது. பொலிஸ்நிலையத்திற்கு அண்மையாக புதிய சந்தை உள்ளது. மரக்கறி, பழம், மீன் மற்றும் இறைச்சி விற்பனை போன்றவற்றிற்கென்று தனித்தனியாக கட்டிடங்கள் இங்கே காணப்படுகின்றன. மீன் சந்தைக்காக காணப்படும் கட்டடம் திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது. (இதனை விட அண்மைய நகரங்களான கரவெட்டி, உடுப்பிட்டி போன்ற பகுதிகளிலும் சிறிய சிறிய சந்தைகள் உள்ளன).

### கல்வி

1960களின் முன்னர் நெல்லியடியில் சமூகரீதியிலான கல்வி முறையே காணப்பட்டது. ஒவ்வொரு சமூகத்திற்கும் தனித்தனி பாடசாலைகள் இருந்தன. (இப் பாடசாலைகளின் பயிற்றப்பட்ட, பயிற்றப்படாத ஆசிரியர்களும் அதே சமூகத்தைச் சார்ந்தவர்களாகவே காணப்பட்டனர்) எனினும், இந்த ஏற்றத்தாழ்வுகள் எதுவும் தற்போது கிடையாது. கல்வியில் குறிப்பிடத்தக்க பிரதேசமாக நெல்லியடி உருப்பெற்றுள்ளது. கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, திரு இருதயக் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி போன்றவை இங்கு காணப்படுகின்றன.

தனியார் கல்வி நிலையங்களும் இங்கே அதிகம். சயன்ஸ் சென்ரர், மற்ஸ் சென்ரர், வீக்கென் கல்விநிலையம், கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம், ஐங்கரன் கல்வி நிலையம் என ஏகப்பட்ட கல்வி நிலையங்கள் உருவாகியிருக்கின்றன. தனியார் கல்வி நிலையத்திலேயே நூலகம், ஆய்வுக் கூடங்கள், கணினி நிலையம் என நவீன வசதிகளுடன் இயங்குகின்றது கேம்பிரிட்ஜ் கல்வி நிலையம். இந்த நிலையத்திற்கென தனியான சீருடை உள்ளது. மாணவர்களின் போக்குவரத்திற்காக இந்த நிலையம் போக்குவரத்து சேவைகளும் செய்கிறது. இதனால் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் இந்த நிலையத்திற்கு செல்கிறார்கள்.

### தொழில்கள்

நெல்லியடியை சூழ பெருமளவு விவசாய நிலங்கள் உள்ளன. பல்வேறுவகையான பயிர்கள் பயிரடப்பட்டாலும், புகையிலை, வெங்காயம் போன்ற பணப்பயிர்களை பயிரிடுபவர்கள்தான் அதிகம். நெல்லியடியை சேர்ந்தவர்களிற்கு கணிசமான நெல்வயல்கள் வடமராட்சியின் பல இடங்களிலும் உண்டு. வெங்காயம், புகையிலை ஏற்ற வெளியிடங்களிலிருந்து பெருமளவு லொறிகள் இங்கு முன்னர் வந்தன. எனினும், தற்போது இவற்றை பயிரிடுபவர்கள் குறைந்துவிட்டனர். ஆனாலும், திக்கம், மண்டான் பகுதிகளின் வெங்காயத்திற்கு இன்றும் மவுசு உள்ளது.

இப்பொழுது நெல்லியடி பெருமளவு வர்த்தக நகரமாகிவிட்டது. அரச தொழிலை நாடுபவர்கள்தான் இப்போது அதிகமாக உள்ளனர். எனினும், தற்போது சுமார் 37.82% ஆனவர்கள் முழு நேர விவசாயிகளாகவும், 12.5% ஆனோர் பகுதி நேர விவசாயிகளாகவும் இந்தப்பகுதியில் உள்ளனர்.

இதுதவிர, சமூகங்கள் சார்ந்த தொழில் இந்த பிரதேசத்தில் உள்ளது. கள் இறக்குதல், விவசாயகூலிகள், மூட்டை தூக்குதல் முதலான சிறு தொழில்களை செய்பவர்களும் உள்ளனர்.

தென்னாசியாவிலேயே மிகப்பெரிய பனங்கள் வடிசாலையான திக்கம் வடிசாலை நெல்லியடி நகரிற்கு அருகில் உள்ளது. எனினும், நிர்வாக குழறுபடிகளால் தற்போது இழுத்துமூடப்பட்டுள்ளது பெரும் துயரமே.

### வாழ்வியல் முறைமை

ஆரம்ப காலங்களில் இப் பகுதி மக்கள் ஓலைகளால் மேயப்பட்ட மண் வீடுகளிலேயே வாழந்த வந்தனர். இப்போதெல்லாம் எங்கு பார்த்தாலும் சீமெந்து வீடுகளையே காணமுடிகின்றது. அத்துடன் திருமண மண்டபங்களும் இங்கே அதிகம்.

முன்பெல்லாம் வீடுகளில் மண்ணாலான பாத்திரங்களே புழக்கத்தில் இருந்தன. கொண்டாட்டங்களின் போது மண் பாத்திரங்களே பயன்பட்டு வந்தன. "புதிர்" எடுத்து உண்ணும் பழக்கமும் இம் மக்களிடம் இருந்து வந்தது. அதே போன்று முற்காலங்களில் எல்லாம் உணவுக் கடைகளில் இரவு உணவே ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டது. வேலை முடிந்து வரும் மக்கள் இரவு உணவைக் கடைகளிலேயே முடித்து விடுவது வழக்கம். ஏற்றாற் போல் அந்தக் காலத்தில் அல்லங்காடிகளும் இருந்தன... (நெல்லியடியில் இருந்து தொலைவில்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...


கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி


அந்தோனியார் தேவாலயம்


நெல்லியடி ம.ம.வித்தியாலயம்

இருக்கும் மாலு சந்தியானது மாலை சந்தை என்பது மருவியே ஏற்பட்டது). அதுபோல கோவில்சந்தை என்ற மாலைச் சந்தையும் சில வருடங்களின் முன்னர்வரை வெகு பிரபலம். அங்கு உள்ளூர் நீர்நிலைகளில் பிடிக்கப் படும் சுவையான சிறு மீன்கள் மற்றும் கடல்மீன்கள் விற்பனையாகும். இப்போது மாலைச்சந்தைகள் காணாமல் போய்விட்டன.

### போக்குவரத்து

1960க்கு முன் இங்கே மாட்டு வண்டில் பயணம்தான் இங்கே இருந்தது. 1960களில் சைக்கிள் பயணம் ஆரம்பித்தது. தட்டிவான் போக்குவரத்தும் இங்கு வெகுகாலம் நீடித்தது. நெல்லியடி கொடிகாமம் மார்க்கத்தில் நீண்டகாலமாக தட்டிவான்கள்தான் சேவை யீடுபட்டன. 'தென்மதுரை வைகை நதி தினம்பாடும்' என்ற சினிமா பாடலை மாற்றி, 'நெல்லியடி தேங்காய் லொறி தினம்போகும் கொடிகாமம்' என மாற்றிப்பாடுவது இங்கு பிரபலமாக இருந்தது. பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் போகும் மார்க்கம், பருத்தித் துறையிலிருந்து கொடிகாமம் போகும் மார்க் கங்களில் நெல்லியடி நகரம் அமைந்துள்ளது. தற்போது பத்து நிமிடத்திற்கு ஒரு பேரூந்து நெல்லியடி பேரூந்து தரிப்பிடத்திற்கு வந்து செல்கிறது.

### பொழுதுபோக்கு

மகாத்மா தியேட்டர், லக்ஷ்மி தியேட்டர்கள் முன்னர் பிரபலமாக இருந்தன. 50 சதத்திற்கு ரிக்கெட் எடுத்து படம் பார்த்த ரசிகர்கள் சிலரையும் சந்தித்தோம். எனினும், பின்னர் அவை செயலிழந்தன. 1990 வரை மகாத்மா தியேட்டர் இயங்கி, போதிய வருமானமில் லாமல் மூடப்பட்டது. பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டு காலத்தில் 1995 வரை இயங்கியது. லக்ஷ்மி தியேட்டர் இருந்த தடயமே மறைந்து, இப்போது இலங்கை வங்கியின் புதிய கட்டிடம் உருவாகிவிட்டது.

### வைத்தியம், வங்கி

முன்னர் பட்டினசபையால் ஆயுள் வேத


நகர மையத்திலுள்ள
அமரர் சிவசிதம்பரம் சிலை

வைத்திய நிலையங்கள் ஒழுங்கமைத்து மேற் கொள்ளப்பட்டன. தற்போது அரச வைத்திய சாலை மற்றும் தனியார் வைத்தியசாலைகள் பெருகிவிட்டதால் ஆயுள் வேத வைத்தி யத்தின் வரவேற்பு குறைந்து வருகின்றது. தற்போது நெல்லியடிக்கு அருகில் மந்திகை ஆதார வைத்தியசாலை உள்ளது. அதுதவிர, அம்பம் பிரதேசவைத்தியசாலையும் உள்ளது.

நெல்லியடி நகரத்தில் தனியார் வைத்திய சாலை, சிகிச்சை நிலையங்கள் பெருகி விட்டன. நெல்லியடி வதிரி வீதியில் தனியார் சிகிச்சை நிலையங்கள் குவிந்துள்ளன.

வங்கிகள், நிதி நிறுவனங்களும் நெல்லி யடியை முற்றுகையிட்டுள்ளன. நெல்லியடி நகரத்தில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வங்கி இலங்கை வங்கி. 1965இல் ஆரம்பிக் கப்பட்டது. பின்னர் பல்வேறு வங்கிகளின் கிளைகள் திறக்கப்பட்டு,

### இன்ன பிற

நெல்லியடியில் பிரதேச நூலகங்களையும் ஆங்காங்கே காணக் கூடியதாக உள்ளது. முற்காலங்களில் பட்டினசபையால் பரா மரிக்கப்பட்ட நூலகங்களில் 'வாசகர் வட்டம்' அமைத்து வாசகர்களுக்கு தேவை யான நூல்கள் மாதா மாதம் வாங்கிக் கொடுக்கப்பட்டன. இப்போதும் நூலக பயன்பாட்டாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவில் இங்கே காணப்படு கின்றது. நெல்லியடி பேரூந்து நிலையத் தில் தினசரி பத்திரிகைகள் வைக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

### அரசியலும் கலையும்

நெல்லியடி நகரம் பிரபலங்களுக்கே பிரபல மானது என்றால் மிகையில்லை. எக்கச்சக்க மான கலைஞர்களைத் தன் வசம் வைத்திருக் கின்றது நெல்லியடி. நெல்லை க. பேரன், வைமன் கதிரவேற்பிள்ளை, சிரித்திரன் சுந்தர், பண்டிதர் வீரகக்தி, செ.கதிர்காமநாதன் என்று பலர் நெல்லியடியைச் சுற்றிலும் வாழந்திருக்கின்றனர். தற்போது தெணியான், குப்பிளான் ஐ.சண்முகன் போன்ற மூத்த எழுத் தாளர்கள் நெல்லியடி நகரிற்கு அருகில் வாழ்கின்றனர்.

நெல்லியடியின் வளர்ச்சிக்கும் அபிவிருத் திக்கும் பல உதவிகளைச் செய்தவர்களுள் கந்தையா (கம்யூனிஸ்ட் கட்சி) சிவசிதம்பரம் (அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்) போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய மானவர்கள். சிவ சிதம்பரத்தின் நினைவுச் சிலையை இன்றும் நெல்லியடிச் சந்தியில் காணக் கூடியதாக உள்ளது.

நெல்லியடி, கரவெட்டி பிரதேசங்கள் இடதுசாரிகளின் கோட்டையாக இருந்தது. பிரபல இடதுசாரித்தலைவர் சண்முகதாசன் இந்த பகுதியில் வாழ்ந்துள்ளார்.

### வரலாறு

நெல்லியடி என்றதும் நினைவுக்கு வருவது முதலாவது கரும்புலி தாக்குதல். ஒப்ரேசன் லிபரேசன் மூலம் வடமராட்சியை இலங்கைப்படைகள் கைப்பற்றினர். 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நிலைகொண்டிருந்த படையினர் மீது, கப்டன் மில்லர் கரும்புலி தாக்குதல் நடத்தினார். லொறியொன்றில் வெடிமருந்து நிரப்பி, பாடசாலை கட்டிடத்தில் மோதினார். இந்த தாக்குதலால் அந்த முகாம் படையினர் மட்டுமல்ல, அரசே நிலைகுலைந்தது. இதனை தொடர்ந்துதான் இந்திய இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகியது.

### தேவைகள்

நெல்லியடி நகரத்திற்கு அவசரமாக என்ன தேவையென யாரிடமாவது கேட்டால், 'அவசரத்திற்கு போவதற்கு வசதி' என்றுதான் சொல்வார்கள். இவ்வளவு வசதியிருந்தும் நெல்லியடி நகரத்திற்கு வருபவர்கள் அவசரத் திற்கு ஒதுங்க, மலசலகூடம் இல்லாதது பெருங்குறையே!





# விந்தையான உலகில் விலங்குகளின் விசித்திரங்கள்

## விலங்குகளின் நுண்ணறிவும், உளவியலும்

நமக்குப் பசியெடுத்தால் சமைத்து சாப்பிடுகிறோம். ஆனால் விலங்குகள்? ஒன்றையொன்று சார்ந்து வாழ்கிற வாழ்க்கைதான் விலங்குகளுக்கு. இரையாவதும், இரையாகாமல் தப்பிப்பதுமே அவற்றின் வாழ்க்கைமுறை. சில விலங்குகள் தங்களிடம் இருக்கும் சில சிறப்பு அம்சங்களை வைத்தே, இரையாகாமல் தப்பித்துக்கொள்ளும். பச்சோந்தி, மரப்பல்லி, பாலைவன பாம்பு போன்ற விலங்கினங்கள் சுற்றியிருக்கும் சூழலுக்கு ஏற்ப தங்களுடைய நிறத்தை மாற்றிக்கொள்ளும்.

மான், கங்காரு போன்ற விலங்குகளுக்கு கால்களே கேடயம். எதிரிகள் வருவதைப் பார்த்துவிட்டால் போதும், இவை ஓட்டமெடுத்துவிடும். முயலும் இந்த வகையைச் சேர்ந்ததுதான். அதுவும் நேராக ஓடாமல் இடமும் வலமும் மாறி மாறி ஓடும். இந்தத் திசை மாற்றம், துரத்தும் எதிரியைக் குழப்பும். துரத்தும் விலங்கு ஓயும்வரை, முயல்கள் ஓடுவதை நிறுத்தாது.

அணில்கள் மரமேறுவதில் மட்டுமல்ல, ஒளிந்துகொள்வதிலும் தேர்ச்சிபெற்றவை. எதிரியைப் பார்த்துவிட்டால் போதும். உச்சாணி கிளைக்குத் தாவிவிடும். நிச்சயம் அதுவரை மற்ற விலங்குகள் வரமுடியாது என்று அவற்றுக்குத் தெரியும்.போஸம் எனப்படும் மரங்களில் வாழும் அமெரிக்க உயிரினம், தந்திரத்தால் தப்பித்துவிடும். சில விலங்குகள், இறந்த விலங்குகளைச் சாப்பிடாது. அதனால் எதிரியைப் பார்த்ததும் போஸம், இறந்ததுபோல சுருண்டு படுத்துவிடும். கண்கள் நிலைகுத்தி, நாக்கு வெளியே தள்ளி தத்ஷரூபமாக நடிக்கும். அதைப் பார்க்கும் வேட்டையாடும் விலங்குகள், அது இறந்துவிட்டதாக நினைத்து விலகிச் சென்றுவிடும்.

தப்பித்து ஓடுவதைவிட எதிரியை ஒரு கணம் ஸ்தம்பிக்க வைப்பதில் தேர்ச்சி பெற்றவை சில வகை தேரைகள். தன் முன்னால் எதிரி வந்ததுமே நுனிக்கால்களில் நின்றுகொள்ளும். முடிந்தவரை காற்றை உள்ளிழுத்து, உடம்பைப் பெரிதாக்கும். பார்த்துக்கொண்டிருக்கும்போதே மூன்று மடங்கு பெரியதாக மாறிய தேரையைப் பார்த்து எதிரி பயந்து ஓடிவிடும்.

இதேபோல ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு வகையில் தன்னைத் தற்காத்துக் கொள்வதோடு சில விந்தையான திறமைகளையும் கொண்டுள்ளன. உதாரணமாக சிறுத்தையால் சிங்கத்தைப் போல் கர்ஜிக்க முடியாது. பூனையைப் போல மியாவ்



என்ற ஓசையைத்தான் எழுப்பும். ஓர் ஒட்டகத்தை விடவும் அதிக நாட்களுக்குத் தண்ணீரின்றி எலியால் தாக்குப் பிடிக்க முடியும். ஒட்டகப் பறவை என்று நெருப்புக் கோழி அழைக்கப்படுகிறது. இது ஒட்டகத்தைப் போல பல நாட்கள் தண்ணீர் குடிக்காமலேயே வாழக் கூடியது என்பதால் அதற்கு இந்த பெயர்.

ஒரு மரங்கொத்தியால் ஒரு நொடிக்கு 20 முறை மரத்தைக் கொத்தித் தள்ள முடியும். காகம் ஒரு மணிக்கு 45 மைல்கள் வேகத்தில் பறக்கும். ஒரு சாதாரண பசு அதன் வாழ்நாளில் 2 லட்சம் குவளை பால் கொடுக்கும். டொல்பின்கள் ஒரு கண்ணை மட்டும் மூடிக் கொண்டு தூங்கும். நீலத் திமிங்கலம் எழுப்பும் ஒரு வித விசில் ஒலி, விலங்குகள் எழுப்பும் ஒலிகளிலேயே மிகவும் பலமானதாகும். அதன் அளவு 188 டெசிபல்கள். ஜெல்லி மீனில் 95 சதவீதம் தண்ணீர் தான் உள்ளது. மனிதனுக்கு அடுத்தபடியாக சிந்திக்கும் திறன் உள்ள பிராணி சிம்பன்ஸி குரங்குதான்.

விலங்கு காட்சி சாலையில் புலி இளைஞரைக் கடித்தது, கிராமத்தில் வளர்க்கப்பட்ட பயிர்சேனைகளை பன்றிகள் நாசப்படுத்தி விட்டன..., தொண்டமனாறு பகுதியில் முதலைகள் குடிமனைக்குள்..., தோட்டத்தில் புகுந்த யானைகள் காட்டுக்குத் திரும்பவில்லை.., சிங்கராஜா அருகே சிறுத்தை நடமாட்டம்... இப்படிப்பட்ட செய்திகளில் ஏதாவது ஒன்றைத் தினசரிக் கேள்விப்படுகிறோம்.

இந்தச் சம்பவங்கள் மூலம் விலங்குகள் நமக்கு உணர்த்துவது என்ன? தேவையில்லாத வீண் பிரச்சினைகள், எப்போதும் பயம், நம்மை இயல்பாக வாழவிடுவதில்லை என்பதா? நிச்சயமாக இல்லை. இந்தச் சம்பவங்கள் அனைத்துக்கும் முழு காரணம் சம்பந்தப்பட்ட விலங்குகள்தான் என்று நாம் நம்புகிறோம். ஆனால், அதுவா உண்மை?

### பிரதனமாக இயல்பு மாற்றம்

மனித நடவடிக்கைகளால் விலங்குகளின் இயல்பு எவ்வாறு மாறுபடுகிறது என்பதைப் பற்றி விலங்குகளின் நடத்தையை ஆராயும் ஆய்வாளரும், பத்திரிகையாளருமான ஜெஃப்ரி மொசெஃப் மேஸான் எழுதிய 'பீஸ்ட்ஸ்' புத்தகம், நமது புரிதலுக்குப் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சும்.விலங்குகள், மனிதர்களிடத்தில் பகை உணர்வைக் காட்டுவதற்கு அவற்றின் உணவு மற்றும் வாழிடம் அழிக்கப்படுவதுதான் முதன்மைக் காரணம். இப்போது "கனிபலிஸம்" (Canibalism) எனப்படும் தன் இனத்தைத் தானே கொல்லும் இயல்புடையதாக சில விலங்குகள் மாறியிருக்கின்றன. மனிதர்களிடத்தில் காணப்படும் இந்தக் குணம், இதற்கு முன்பு விலங்குகளிடம் காணப்பட்டதில்லை. அதற்கு, நாம்தான் காரணம்.

### அடுத்ததாக உணவு அழிப்பு

பொதுவாகவே புலியோ, சிங்கமோ அல்லது முதலையோ மனிதர்களைக் கொன்றுவிட்டால், உடனே அவற்றுக்கு "மனித ரத்த வாடை பிடித்துவிட்டது. அதனால் மனிதனை உணவாக்கிக் கொண்டுவிட்டது" என்றுபலரும்பிதற்ற ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், அது உண்மையல்ல. உயிர்ச் சூழலில் உணவுச் சங்கிலி மிக முக்கியமானது. உலகைக் கட்டுப்படுத்தும் திறனைப் பெற்றிருப்பதால், உணவுச் சங்கிலியில் மனிதன் உச்சத்தில் இருக்கிறான். அதனால் தனக்குக் கீழே இருக்கும் உயிரினங்களை மனிதன் உணவாக உட்கொள்வானே தவிர, அந்த உயிரினங்களுக்கு எப்போதும் அவன் உணவாவதில்லை.

### அடுத்து வளர்ப்பும் அத்துமீறலும்

விவசாயம் தோன்றுவதற்கு முன்பு மனித இனம், விலங்குகளை வேட்டையாடி உண்டது. அப்போது நாய், மாடு, குதிரை உள்ளிட்ட விலங்குகள் வளர்ப்பு விலங்காக மாறியிருக்கவில்லை. விவசாயம் தோன்றிய பிறகு, தேவைக்கேற்ப விலங்குகளைப் பழக்கப்படுத்தி வளர்க்கும் கலாசாரமும் தோன்றியது. ஒருகட்டத்தில் மனிதன் தன்னுடைய உணவுப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்காக, மற்ற உயிரினங்களின் உணவை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தான். தனது தேவைகளுக்காக அவற்றைப் பழக்கப்படுத்தினான். இதனால் மற்ற இரைகொல்லிகளுக்கு உணவு கிடைக்காத பிரச்சினை தோன்றியது.

இதைத் தொடர்ந்து அந்த இரைகொல்லி விலங்குகள், மனிதர்களின் வாழிடங்களுக்குள் நுழைய ஆரம்பித்தன. அவற்றை மனிதன் வேட்டையாடினான். ஒரு கட்டத்தில் இந்த வேட்டை குறிப்பிட்ட சில உயிரினங்களை அழிக்கும் நிலைக்கே இட்டுச் சென்றது. இதற்கு உதாரணமாக வடஅமெரிக்காவில் ஓநாய்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டதை சொல்லலாம். எப்படி என்றால், அங்கே ஒரு ஓநாய்கூட இல்லை என துடைத்தழிக்கப்படும் அளவுக்கு! அதேபோல

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

ஒரு காலத்தில் அமெரிக்காவில் 36 கோடி இருந்த அமெரிக்கக் காட்டெருமைகள், தற்போது 15,000 மட்டுமே இருக்கின்றன.

### அடுத்தது போலி போட்டி

மனிதர்கள் செய்யும் இன்னொரு மிகப்பெரிய தவறு, விலங்குகளுக்கு உணவளிப்பது. சிம்பன்ஸி குரங்குகளைப் பற்றி பல வருடங்களாக ஆய்வு செய்துவரும் பிரபல ஆராய்ச்சியாளர் ஜேன் குடால் தனது அனுபவங்களைக் குறிப்பிட்டபோது, 'ஆய்வுக்காகச் சில சிம்பன்ஸிகள் கூட்டமாகக் கூண்டில் அடைக்கப்பட்டிருந்தன. அவை காடுகளில் இருந்தவரை சுயமாக உணவு தேடிக்கொண்டன. ஆனால், இங்கே மனிதர்கள் உணவு வழங்க ஆரம்பித்ததில் இருந்து, அந்த உணவுக்காகச் சிம்பன்ஸிகள் போட்டி போட்டு அடித்துக் கொண்டன' என்கிறார். விலங்குகளின் இயல்பு வலுக்கட்டாயமாகத் திரிக்கப்படுவதை, இதில் புரிந்துகொள்ளலாம்.

### இறுதியாக வாழிட அழிப்பு


வாழிட அழிப்பாலும் விலங்குகளின் குணாதிசயங்கள் அதிகளவில் மாறுகின்றன. உதாரணத்துக்கு, "போலார் பீர்"(Polar Bear) எனப்படும் பனிக் கரடியை எடுத்துக் கொள்வோம். இது புலியைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிக இறைச்சியை உணவாக உட்கொள்ளும். பூமியில் மிக அதிகளவு இறைச்சியை உட்கொள்ளும் உயிரினம் இது. ஆனால், சமீப காலமாகத் தீவிரமடைந்து வரும் பருவநிலை மாற்றத்தால் (Climate change) அதற்கான உணவு முழுமையாகக் கிடைப்பதில்லை. எனவே, இவை மனித வாழிடங்களுக்குள் நுழைகின்றன.

இப்போது கனடாவில் உள்ள ஹட்சன் பே, பனிக் கரடிகளின் தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது. காரணம், பனிக் கரடிகளின் வரவு அந்த அளவுக்கு அதிகரித்து விட்டதுதான். ஊருக்குள் வரும் பனிக் கரடிகளைப் பிடிப்பதற்காகவே அங்கு 'பியர் போலீஸ்' என்ற படை உருவாக்கப்பட்டுள்ளது. ஊருக்குள் வரும் கரடிகளைப் பிடித்த பின்னர் விலங்கு காட்சிசாலையில் விட்டுவிடுகிறார்கள். ஒரு நாளைக்குச் சுமார் 80 கி.மீ. தொலைவு சுற்றக்கூடிய இயல்பு கொண்டவை பனிக் கரடிகள். இவற்றைக் குறுகிய விலங்கு காட்சி சாலை அறைக்குள் பூட்டி வைத்தால், அவை என்ன செய்யும்? அறையில் இருக்கும் மற்றொரு பனிக் கரடியைக் கொன்றுவிடும் சம்பவங்கள் தான் நடைபெறும். ஆக, அவற்றின் இயல்பான வாழிடங்களுக்கு மாறாகப் புதிய இடத்தில் அடைக்கப்படும்போது, அவற்றின் இயல்பு மாறுவது தெளிவாகிறது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது, விலங்குகளுடன் மனிதர்கள் இணக்கமாகவாழவே முடியாதா என்ற கேள்வி எழுகிறது. ஏன் முடியாது? வட ஆப்பிரிக்கப் பகுதியான மொரியானாவில் நைல் முதலை வகை கிட்டத்தட்ட அழிந்துவிட்டது என்று இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) 1992ம் ஆண்டு கருதியது. ஆனால், இன்றைக்கு அங்கு அவை அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. அதற்குக் காரணம், அப்பகுதி மக்கள் அவற்றை வேட்டையாடுவதில்லை. 'வேட்டையாடினால் தங்கள் குடும்பத்துக்கு ஆகாது' என்று அவர்கள் நம்புகிறார்கள். அதேபோல, கானா நாட்டிலும் முதலைகள் கொல்லப்படுவதில்லை. முதலைகள் இருக்கும் அதே நீர்நிலையில் மக்கள் குளிக்கிறார்கள். அதன் கரையிலேயே மண்பாண்டம் செய்கிறார்கள். இதன் மூலம் முதலைகள் மனிதர்களிடம் மறைமுகமாகக் கூற விரும்பும் செய்தி இதுதான் நீ வாழு, எங்களையும் வாழவிடு

விலங்குகள் நடந்துகொள்ளும் விதம் குறித்து ஆராய்ந்து வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தியவர் அமெரிக்க உளவியல் நிபுணர் பர்ஹஸ் ஃபிரெடரிக் ஸ்கின்னர். விலங்குகளின் சரியான நடத்தை முறை உத்தியைப் பயன்படுத்தி, மனிதர்கள் நடந்துகொள்ளும் முறையை மேம்படுத்த முடியும் என்று நம்பினார். விளைவுகளைப் பொறுத்தே உயிரினங்களின் நடத்தை முறைகள், எதிர்வினைகள் அமைகின்றன என்பதைக் கண்டுபிடித்தார். உயிரினங்களின் நடத்தையைப் பகுப்பாய்வு செய்து அறிய ஆபரன்ட் கண்டினிங் கூண்டு ஒன்றை உருவாக்கினார். இது 'ஸ்கின்னர் பாக்ஸ்' என்றழைக்கப்படுகிறது. எலிகள், புறாக்கள் ஆகியவை, தாங்கள் வாழும் சூழலுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதை இதன் உதவியுடன் ஆராய்ந்து வந்தார் ஸ்கின்னர். சூழலுக்கு ஏற்ப அவை தங்களது நடத்தை முறைகளை எவ்வாறு மாற்றிக்கொள்கின்றன என்பதையும் கண்டறிந்தார். இப்படிக் கண்டறிந்தவற்றைத் தொகுத்து 'தி பிஹேவியர் ஒஃப் ஓர்கானிசம்ஸ்' என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார்.

"குழந்தைகளுக்குப் பொருத்தமான பரிசுகள், தண்டனைகளை வழங்கி அவர்களது பழக்க வழக்கங்களை திருத்திக்கொள்ள உதவுங்கள். அதன் மூலம், அவர்களை நல்ல குடிமக்களாக மாற்ற முடியும்" என்று இந்த நாவலில் கூறியுள்ளார். குழந்தைகள் கற்றுக் கொள்ளும் முறை குறித்து ஆராய்ந்தார். 'தி டெக்னாலஜி ஆஃப் டீச்சிங்' என்ற நூலை கூட எழுதியுள்ளார்.



பழங்குடியினர் விலங்குகள், பிராணிகளின் நடவடிக்கைகளைக் கொண்டு சில இயற்கை அனர்த்தங்களை முன்கூடியே அறிந்து கொண்டர். எடுத்துக்காட்டாக, எதிர்பாராத மழை வெள்ளத்தை விலங்குகள், பிராணிகளின் நடவடிக்கைகளைக் கொண்டு அசாம் பழங்குடியினர் கணிப்பதாக ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது. லூதியானாவைச் சேர்ந்த, மத்திய அறுவடைக்குப் பிந்தைய பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவன விஞ்ஞானி அர்மான் யு முஸாட்டாடி இதுதொடர்பாக ஆய்வு செய்துள்ளார். திடீர் பருவநிலை மாற்றம் குறிப்பாக கன மழையால் ஏற்படும் வெள்ளத்துக்கு முன்பாக வெட்டுக்கிளிகள் தங்களது மறைவிடத்தை விட்டு வெளியேவந்து, தாறுமாறாக பறக்கும், வீடுகளுக்குள் புகுந்து விடும். அதேபோன்று எறும்புகள் குழியிலிருந்து முட்டை, உணவுகளுடன் மேட்டுப்பாங்கான இடத்துக்கு நகரும். இது வெள்ளம் வருவதை உணர்த்தும் அறிகுறி. உயரமான இடத்திலிருந்து நரி நெடுநேரமாக ஊளையிட்டால் அது நீண்ட வறண்ட காலத்தையும், தாழ்வான பகுதியிலிருந்து நெடுநேரம் ஊளையிட்டால் அது அதிக வெள்ளம் வரப்போவதற்கான வாய்ப்பையும் குறிக்கும்.

புறாக்களின் அழுகையும் பருவநிலையைக் கணிக்கும் ஒன்றுதான். கனமழை, பெருவெள்ளம் வருவதற்கு முன்பு தவளை, தேரைகள் தொடர்ந்து சத்தமிடும். அசாம் மாநிலத்தில் தேமாஜி மாவட்டத்தில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படும். இங்கு வாழும் மிங், போடோ, ரபா பழங்குடியினர் மற்றும் மீனவர்கள் இயற்கை அறிகுறிகளை வைத்தே தங்களைப் பாதுகாத்துக் கொள்கின்றனர். பல நூறு ஆண்டுகளாக இயற்கைப் பேரிடர்களைச் சந்தித்து வரும் இம்மக்கள் தங்களின் அனுபவம், கிரகிக்கும் தன்மை ஆகியவற்றின் மூலம் வெள;ள அபாயத்தை சமாளிக்கின்றனர்.

நிறைவாக முன்னோர்கள் சொல்வதை போல எறும்புகளிடமிருந்து சுறுசுறுப்பையும், தேனிகளிடமிருந்து கடின உழைப்பையும், காகங்களிடமிருந்து ஒற்றுமையையும், நாய்களிடமிருந்து நன்றியுணர்வையும், சிலந்தியிடமிருந்து விடாமுயற்சியையும், யானையிடமிருந்து தலைமைத்துவத்தையும் கற்றுக்கொள்வதோடு அவற்றை தொந்தரவு செய்யாமலும் இருக்க வேண்டும். மனிதனில் உருவாகும் தீய எண்ணங்களை "மிருக குணம்" என்று வருணிப்பதை நிறுத்திக்கொண்டு, இப் பூமியின் உன்னதத்தை அனுபவித்து வாழுங்கள். முடியவில்லையா... வாழ பழகிக்கொள்ளுங்கள். வேண்டும். யாரும் யாவர்க்கும் சமமே....!

**காலிங்கராசா ஹரிச்சந்திரா**
**தொழிநுட்ப அலுவலர்,**
**மீன்பிடியியல் விஞ்ஞானதுறை,**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**



# அந்தநாள் நினைவு

### போக்கிரி ராஜாவில் நடிக்க மறுத்த ரஜினி

ரஜினி, ராதிகா, ஸ்ரீதேவி, முத்துராமன் நடித்து 1982ம் ஆண்டு வெளிவந்து மிகப்பெரிய வெற்றி பெற்ற படம் போக்கிரி ராஜா. ஆனால் இந்தப் படத்தில் நடிக்க ரஜினி முதலில் மறுத்தார்.

போக்கிரி ராஜா அப்போது தெலுங்கில் வெளிவந்த சுட்டாலு உன்னாத ஜாக்கிரதா என்ற தெலுங்கு படத்தின் ரீமேக். இந்த படத்தை தயாரிக்க முடிவு செய்ததும் ரஜினியை அதில் நடிக்க வைக்க முடிவு செய்தது ஏவிஎம் நிறுவனம். ஆனால் ரஜனி "அந்தப் படத்தை நான் பார்த்திருக்கிறேன். நான் இப்போது ஜானி, காளி மாதிரி தரமான படங்களில் நடித்து வருகிறேன். இது மாதிரி படத்தில் நடித்தால் என் இமேஜ் போய்விடும்" என்று மறுத்தார். என்றாலும் ஏவிஎம் மிகப்பெரிய நிறுவனம் என்பதால் அவர்கள் வற்புறுத்தலுக்காக நடிக்க சம்மதித்தார்.

பஞ்சு அருணாசலம் சில மாற்றங்களை செய்து தமிழில் வசனம் எழுத எஸ்.பி.முத்துராமன் இயக்கினார். எடுத்த வரையில் போட்டுப் பார்த்ததில் ரஜினிக்கு படம் முழு திருப்தியாக இல்லை. தயாரிப்பாளருக்கும் திருப்தியாக இல்லை. "இந்த படம் எனக்கு செட் ஆகாதுன்னு அப்பவே நான் சொன்னேனே" என்ற வருத்தப்பட்டார்.

அப்போது விசுவை அழைத்து படத்தை போட்டுக் காட்டினார்கள். அவர் ராதிகாவின் கேரக்டரை இன்னும் பெரியது படுத்தவும், இன்னொரு புதிய கேரக்டரை சேர்க்கும்படியும் கூறினார். அதன்படி மாற்றம் செய்து மீண்டும் படப்பிடிப்பு நடத்தப்பட்டது. போக்கிரி ராஜாவும் மிகப்பெரிய வெற்றி பெற்றது. மாற்றம் செய்யப்பட்ட போக்கிரி ராஜாவின் தெலுங்கு உரிமத்தை ஒரிஜினல் சுட்டாலு உன்னாத ஜாக்கிரதா தயாரிப்பாளர் வாங்கினார் என்பது இன்னுமொரு சுவாரஸ்ய தகவல்.

# ஆயிரம் சூரியன் ஆயிரம் சந்திரன் ஒரே ஒரு பூமி

ம.செந்தமிழன்

ஆசான் திருமூலர் உரைத்துச் சென்ற மந்திரங்களில் முதன்மையானது அண்டத்தில் உள்ளதுதான் பிண்டத்தில் உள்ளது என்பது. இந்த உலகில் எவை எல்லாம் உள்ளனவோ அவை எல்லாம் உடலிலும் உள்ளன. பூமியில் முக்கால் பங்கு நீர் உள்ளது. நம் உடலிலும் முக்கால் பங்கு நீர் உள்ளது, உப்பு நீர் தான் பூமியில் அதிகம். உடலிலும் உப்பு நீர் தான் அதிகம். பூமியில் உள்ள நச்சுகாற்றை உப்பு நீர்தான் அதிக அளவில் தூய்மையாக்குகின்றது. நம் உடலிலும் உப்பு நீர்தான் நச்சுக்களை அகற்றுகின்றன. உப்புநீர் பூமியில் மிகுந்தால் உயிரினங்களின் வாழ்க்கை சிதையும். உடலிலும் உப்புநீர் மிகுந்தால் உயிர் சிதையும்.

பூமியில் காற்று என்ன செய்கிறது எனப் பாருங்கள். காற்று என்பது ஆற்றல் கடத்தும் பூதம். ஓர் இடத்தில் உள்ள ஆற்றலை மற்ற இடங்களுக்கு எடுத்து செல்வதுதான் காற்று. புயல் எனும் காற்றுதான் மேகத்திரளை இழுத்துவருகிறது. தென்றல் எனும் காற்று தான் மலைக்காடுகளின் குளிர்ச்சியை அழைத்து வருகின்றது. காற்றின் செயல் பாடுகள் வழியாகத்தான் மழை பொழிகின்றது.



உடலில் காற்றுதான் உயிராற்றலை எல்லா செல்களுக்கும் அளிக்கின்றது. காற்று மண்டலம் நன்றாக இயங்கும் உடலின் எல்லா செல்களும் புத்துணர்ச்சியுடன் வாழ்கின்றன. காற்று மண்டலம் சீர்கெட்டால் நுரையீரல் பாதிப்படைகின்றது. பின்னர் ஒவ்வோர் உறுப்பாக பாதிப்பு நீள்கின்றது.

பூமியில் வெப்பம் மிகுதியாக இருக்கும் இடங்களில் உயிர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாக உள்ளது. பாலை நிலங்களை பாருங்கள். அங்கு எல்லாம் உயிர்களின் எண்ணிக்கையும் வகைகளும் குறைவு. வெப்பம் மிகவும் குறைவாக உள்ள இடங் களிலும் மிகவும் குறைவாக உள்ள இடங் களிலும் உயிரினங்கள் மிகக் குறைந்த அளவில் தான் வாழ்கின்றன. பூமியின் வட தென் முனைகளில் உள்ள பனிக்காடுகளை பாருங்கள். இமையம் போன்ற மலைப் பகுதிகளை பாருங்கள். இங்கு எல்லாம் உயிரினங்களின் வகைகளும் எண்ணிக்கையும் குறைவு! குளிர் நாடுகளில் மக்கள் தொகையும் குறைவுதான்.

மித வெப்பம் நிலவும் ஆசியப் பகுதிகள் ஆபிரிக்காவின் சில பகுதிகள் தென் அமெரிக்கப் பகுதிகளில் கணக்கில் அடங்காத உயிரினங்கள் வாழ்கின்றன. பூமியில் வாழும் உயிரினங்களில் பெரும்பாலானவை இவ்வாறான மிதவெப்ப மண்டலத்தில்தான் இருக்கின்றன.

உடலிலும் இதே நிலைதான். வெப்பம் அதிகமான உடலில் செல்கள் உயிரிவாழ்வது இல்லை. வெப்பம் மிகவும் குறைந்த உடல் களில் செல்கள் உறைந்து விடுகின்றன. மித வெப்பம் உள்ள உடல்தான் எப்போதும் துடிப்புடன் இயங்குகின்றது. உடலின் உள்ளுறுப்புகளான கல்லீரல், சிறுநீரகம் ஆகிய இரண்டையும் இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்ப்போம்.

கல்லீரல் குளிர்ச்சியாக இருக்க வேண்டிய உறுப்பு. இது அதிகமாக வெப்பமடைந்தால் காமாலை, பித்தம், சிறு கட்டிகள், வீக்கம் போன்ற நோய்கள் தாக்கும். கல்லீரல் அதிகமாக குளிர்ச்சியை அடைந்தால் உடலில் கொழுப்பு தேக்கம் உருவாகும். ஏனெனில் கல்லீரல் சுரக்கும் மிதவெப்ப சுரப்புகள் உடலின் கொழுப்புக்களைச் செரிப்பதற்கு முக்கிய பங்காற்றுகின்றன.

**நமது உடலை காயம் என்றும் உணவுப் பொருட்களில் ஒரு வகையை காய்கறி எனவும் அழைத்தனர். வெப்பம் எனும் பூதம்தான் உடல்களை உருவாக்குகின்றது. இந்த வெப்பம் மிகுந்தாலும் குறைந்தாலும் உடல்கள் சிதையும்.**

சிறுநீரகம் மிதவெப்பத்தில் இருக்க வேண்டிய உறுப்பு. இது அதிக வெப்பமடைந்தால் சிறுநீரக மண்டலமே பாதிப்படையும். குளிர்ந்தால் சிறுநீர் தேக்கம், கட்டிகள் போன்ற தொல்லைகள் உருவாகி நாளடைவில் நச்சு வெளியேற்றும் பணியில் முடக்கம் உருவாகிவிடும்.

பூமி சிறப்பாக இயங்க வேண்டுமானால் படைப்பின் விதிகளில் சீரழிவு உருவாகக் கூடாது.வடதென் முனைகளில்ஒருவாகியுள்ள கூடுதலான வெப்பம்தான் இப்போது பூமி எங்கும் உயிர்ச் சூழலைச் சிதைத்து வருகின்றது. பூமி வெப்பமயமாதல் என இந்த சூழலை அழைக்கிறது நவீன சமூகம். இதே நிலைதான் உடல்களிலும் உருவாகின்றது. பூமியில் ஒரு மாற்றம் ஏற்பட்டால் அந்த மாற்றம் உடலிலும் ஏற்பட்டே தீரும். ஏனெனில் நாம் அனைவரும் பூமி என்ற பெரிய உடலினுள் வாழ்கின்றோம். நாம் வாழும் பேருடலில் உருவாகும் மாற்றங்கள் அனைத்தும் நமது உடலிலும் இருக்கத்தான் செய்யும்.

நம் உடலில் உள்ள செல்கள் யாவும் நமது செயல்பாடுகளால் மாற்றமடைகின்றன. அதேபோல் பூமியின் செயல்பாடுகளால் இங்கு வாழும் அனைத்து உயிர்களும் மாற்ற மடைகின்றன. நம் உடலில் உள்ள செல்களுக்கு ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் அது நமது ஒட்டுமொத்த உடல் இயக்கங் களையும் பாதிக்கின்றது. அதேபோல் மனி தர்கள் உள்ளிட்ட உயிரினங்களின் செயல் பாடுகளால் உருவாகும் பாதிப்புகள் பூமியின் இயக்கத்திலும் பாதிப்பை உருவாக்கும்.

உணவுப் பழக்கங்களில் ஐம்பூதக் கொள்கைகளை விளங்கிக் கொள்ளும் போது இந்த அடிப்படையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் மருத்துவம் என்பது மனிதர்களுக்கு மட்டுமேயான தனித் துவமான துறையல்ல. நாம் இந்த அண்டத் தின் உறுப்பினர்கள். இந்த அண்டத்தின் இயக்க விதிகள்தான் நமக்குமான விதிகள். ஆண்டத்தின் விதிகளைப் புரிந்துகொள் ளாமல் உடலின் விதிகளைப் புரிந்துகொள் ளவே முடியாது. அவ்வாறு முன்வைக்கப்படும் மருத்துவக் கொள்கைகளால் உடல் நோய் களைத் தீர்க்க முடியாது.

இதனால்தான் மருத்துவத்துக்கான நாடிகளையும் வாதம் (காற்று நிலம்) பித்தம் (நீர் வெப்பம்) கபம் (நீர் காற்று) ஆகிய பூதங்களின் சேர்க்கையில் வகுத்தனர் நம் முன்னோர்கள். மருத்துவம் என்பது வாழ்க்கை முறையை கற்று தரும் மெய்யறிவு. நிச்சயமாக அது உடலைப் பற்றிய பாடங்களைக் கொண்ட அறிவுத் துறை அல்ல.

வாழ்வியலை புரிந்து கொண்டு கடைப் பிடிக்காமல் நோயற்ற வாழ்க்கையை அடைய முடியாது. பூமியைப் பற்றிய நவீன அறிவுத் துறைகளால் பூமியில் உருவாகும் பேரழிவு களைத் தடுக்க முடியவில்லை என்பதை இந்த காலத்தில் பார்க்கின்றோம். அதேபோலதான் உடலில் உருவாகும் எந்த நோயையும் வெறும் உடல் குறித்த அறிவைகொண்டு தடுக்கவோ தீர்க்கவோ முடியாது.

வாழ்வியல் கொள்கைகளைதான் நம் மரபு முதன்மையாக வலியுறுத்தியுள்ளது. உணவுப் பழக்கங்கள், வீடு கட்டும் முறை, வேளாண் முறைகள், தேவைக்கு அதிகமாக ஆசைப்படாத மனம் ஆகியற்றைதான் நம் முன்னோர் அறிவுறுத்தினர். இவை எல்லாம் இணைந்த கலவைதான் மருத்துவம். வாழ் வியலை ஒழுங்கு செய்யாமல் நோய்களுக்கு மருந்து தேடினால் ஒருகாலத்திலும் கிடைக்காது.

இந்த அடித்தளத்தில்தான் எனது கருத்துக் களை உங்களுடன் பகிரிந்து கொள்கின்றோம். உணவுப் பழக்கத்தை வகுத்துகொள்ளும் முன் உணவுப் பொருட்களில் உள்ள ஐம்பூதக் கலவையை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

காய் என்றால் வெப்பத்தில் இருத்தல் என்று பொருள். வெயிலில் காயவைத்தல் என்கின்றோம் அல்லவா! காயம் என்பது உடலைக் குறிக்கும். தமிழில் 'அம்' என்பது பன்மையைக் குறிக்கும் சொல். ஏதேனும் ஒரு பொருள் பல பொருட்களாக பெருகுவதை இவ்வாறு 'அம்' எனும் ஒட்டுச்சொல்லுடன் குறிப்பது நம் இலக்கணம். 'ஆ' எனும் சொல் உயிர் என்று பொருள் கொண்டது. இந்த 'ஆ'வுடன் 'அம்' இணைவது அம்மா (அம்+ஆ உயிர்கள் பல்கிப்பெருகும் நிலையை உருவாக்குபவர் அம்மா.

'காய்' எனும்வெப்பத்துக்கானசொல்லுடன் 'அம்' இணைந்து உருவானதுதான் காயம் எனும் சொல். வெப்பம் எனும் ஒரு பூதத்தின் விரிவாக்கமும் பெருக்கமும் தான் 'காயம்'. வெப்பம் எனும் பூதம்தான் உயிர்களுக்கு உடல் தரும். குறி என்பது 'கடித்து தின்னும் பொருள்' எனலாம். எவற்றை எல்லாம் கடித்து உண்கின்றோமோ அவற்றையே 'கறி' எனறு அழைக்கின்றோம்.

நமது உடலை காயம் என்றும் உணவுப் பொருட்களில் ஒரு வகையை காய்கறி எனவும் அழைத்தனர். வெப்பம் எனும் பூதம்தான் உடல்களை உருவாக்குகின்றது. இந்த வெப்பம் மிகுந்தாலும் குறைந்தாலும் உடல்கள் சிதையும்.

உணவு வகைகளை தேர்ந்தெடுக்கும் பொழுது மேற்கண்ட புரிதல்களை மனதில் நிறுத்தி கொள்ளுங்கள். காய்கறிகளில் எவை எல்லாம் நன்மை தரக்கூடியவை என்றால் எவற்றில் எல்லாம் வெப்பத்தின் அளவு சீராக உள்ளதோ அவை எல்லாம் சிறப்பானவைதான்.

சில காய்களை பட்டியலிட்டு அவற்றின் ஐம்பூதத் தன்மைகள் அடிப்படையில் பிரிப்போம்.

மிதவெப்பம் கத்தரி, வெண்டை, கொத்த வரை, அவரை, முருங்கை, சுண்டை, பாகல் நீர் பீர்க்கன், சுரை, புடலை, பரங்கி,

தொடர்ச்சி அடுத்த பக்கம்...



# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா

நாங்கள் நீண்ட தூரம் நடந்ததன் பின்பாக இரண்டு பெண்கள் தூரத்தில் நடந்து வருவது தெரிந்தது. "ஆஹா நல்லது! அங்கே வருபவர்களில் ஒருத்தி உனது அம்மா" என எனது பஸ் நண்பர் சத்தமிட்டார். நான் அதிர்ந்து போய் வந்த வழியே திரும்பி ஓடிவிடலாமா என நினைத்தேன். அந்தப் பெண்கள் எங்கள் பக்கத்தில் வந்துவிட்டார்கள். எனது நண்பர் அவர்களில் ஒரு பெண்ணிடம் என்னைக் காண்பித்து நான் அவரைத்தான் தேடி வந்திருப்பதாகச் சொன்னார்.

நானும் அந்தப் பெண்ணும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டோம். அவரின் பார்வையில் நான் உறைந்து போனேன். பற்றீசியா படத்தில் காட்டிய பெண்ணிற்கும் இவருக்கும் சம்பந்தமே இல்லாத வித்தியாசமான தோற்றம். வயது வேறு அதிகமாயிருந்தது. உனது அப்பாவின் பெயர் என்ன? உனது சகோதரர்களின் பெயர்கள் என்ன? என அவர் கேள்விகளை அடுக்கினார். எனது மறுமொழிகளுக்கு ஒவ்வொரு முறையும் அவர் தனது புருவங்களை தூக்கினாரே தவிர வேறொன்றும் சொல்லவில்லை. என்னுடன் வந்தவரை அவர் அனுப்பிவிட எத்தனிக்க எனக்குப் பயம் பிடித்துக்கொண்டது.

நான் அந்த மனிதருடனேயே திரும்பிப் போய்விடலாமா என யோசித்துக் கொண்டு நிற்கச் சிரித்தபடியே அந்தப் பெண் எனது கைகளைப் பிடித்துக்கொண்டார். தனது பெண் குழந்தைகளில் தனக்கு முன்னால் நின்று கொண்டிருப்பவள் எந்தக் குழந்தையென அவருக்கு நிச்சயமாகவே தெரிந்திருக்கவில்லை. அவரின் முகத்தில் அணு அணுவாய் மகிழ்ச்சி தொற்றி அது அவர் முகமெங்கும் பூரணமாய்ப் படர்ந்தது. அவர் எனது கையை வாஞ்சையுடன் பிடித்துக்கொண்டே நடக்கத் தொடங்கினார்.

"அந்த நாய் எனது குழந்தைகளை ஒருமுறை தன்னும் பார்க்க என்னை அனுமதிக்கவில்லை என்னால் உன்னை அடையாளமேகண்டுகொள்ள முடியவில்லை மகளே" அப்பாவைக் குற்றம் சாட்டியவாறே அவர் வேகமாக நடந்தார். நான் அமைதியாக அவருடன் நடந்தேன். இவர் எனது தாய். நான் உண்மையாகவே எனது அம்மாவைக் கண்டுபிடித்துவிட்டேன்.

மலர்களும் நிழல் தரும் மரங்களும் நிறைந்த பெரிய தோட்டத்தின் மத்தியிலிருந்த பெரிய வீடொன்றிற்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். அம்மா வேலையாட்களைக் கூப்பிட்டுக் கன்றொன்றை வெட்டி விருந்து சமைக்குமாறு உத்தரவிட்டார். அதன் பின்பு என்னைத் தனியாக விட்டுவிட்டு வந்த வழியிலேயே அம்மா திரும்பிச் சென்றார். வீட்டினுள் நுழைவதற்கு முன்பாக வீட்டை ஒருமுறை சுற்றி வந்தேன். வீட்டினுள் நுழைந்து அம்மாவின் கணவர் இருக்கின்றாரா என ஒவ்வொரு அறையாக எட்டிப் பார்த்தேன். வீட்டினுள் யாருமே இருக்கவில்லை. ஒரு அறையினுள் சென்றபோது மேசை மேல் பணம் கிடப்பதைப் பார்த்தேன். சில நிமிடங்கள் பணத்தைப் பார்த்துக்கொண்டே நின்றேன். திரும்பிப்போக எத்தனிக்கையில் 'ஏதாவது பிரச்சனைகள் வந்தால் பணம் உதவி செய்யும்' என எனது உள்மனம் சொல்லியது. கொஞ்சம் பணத்தினை எடுத்து வைத்துக்கொண்டேன்.

சிறிது நேரத்தில் அம்மா ஆண்களும் பெண்களுமாக ஒரு கூட்டத்தையே அழைத்து வந்தார். பெண்கள் பானைகளுடன் தங்கள் வேலையை ஆரம்பிக்க ஆண்கள் நெருப்பை மூட்டத் தொடங்கினர். அம்மா என நம்பப்பட்ட அந்தப் பெண் கூட்டத்தினரிடையே செல்வதும் ஓடி ஓடிக் கதைப்பதுமாகயிருந்தார். அந்தக் கூட்டத்தினிடையே என் பெயர் பலமாக அடிபட்டது.மெதுவாக இருள் பரவத் தொடங்கியது. விருந்தினர்களில் சிலர் மேசையில் உட்கார்ந்தனர். எஞ்சியவர்கள் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தனர். எல்லோருமே என்னைப் பார்த்துச் சிநேகிதமாகச் சிரித்தனர். ஆனாலும் அச்சம் என்னைவிட்டு அகன்றதாகயில்லை. இவர்கள் என்னைப் பார்த்து மகிழ்கின்றார்களா? அல்லது என்னையே தின்றுவிடப் போகிறார்களா? குழந்தைகளைச் சாப்பிடும் மனிதர்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.மறுபுறத்தில் பார்தால் மேசை மீது இருக்கும் உணவை அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. எல்லோருக்கும் போதுமான அளவு உணவு வகைகள் மேசையில் குவிந்து கிடப்பதால் தற்சமயத்துக்குக் கவலையில்லை.

விருந்து முடிவடைந்து எல்லோரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல இரவு வெகு நேரமாயிற்று. இப்போது இந்தப் பெண்ணுடன் நான் தனிமையில் விடப்பட்டுள்ளேன். இவர் தான் எனது அம்மா என உறுதியாகவே நம்பலாம். அம்மா என்னைப் படுக்கைக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டுத் தனது படுக்கை அறைக்குச் சென்றார். படுக்கையில் படுத்துக்கொண்டே விருந்துக்கு வந்திருந்த மனிதர்களைப் பற்றியும் அவர்கள் திரும்பி வந்து என்னைச் தின்பார்களோ என்றும் சிந்தித்தவாறே படுக்கையில் புரண்டுகொண்டிருந்தேன். வீட்டில் கேட்கும் சிறிய சத்தங்களை எல்லாம் கூர்ந்து கவனித்தேன். யாரோ கத்தியைத் தீட்டுவது போலல்லவா சத்தம் கேட்கிறது? தோட்டத்தில் காலடிச் சத்தமா கேட்கிறது? எல்லாச் சத்தங்களும் அடங்கியும் என் பதற்றம் குறையவில்லை. அது வரவரக் கூடிக்கொண்டே போயிற்று. ஒரு கணத்தில் சத்தம் போடாமல் எழுந்து மெதுவாகத் தோட்டத்தினுள் சென்றேன். பிறகு விறுவிறுவென வெளியே நடக்கத் தொடங்கினேன். **தொடரும்...**

---

பூசணி, முள்ளங்கி, பாகல்

காற்று அவரை, பீன்ஸ், மொச்சைகாய், காராமணி, தட்டைப்பயறு.

நில்ம் கருணை, சேனை உள்ளிட்ட கிழங்குகள்.

அவரை, பாகல் ஆகிய இரண்டும் மிதவெப்பம் மற்றும் நீர் ஆகிய இரு பட்டியல்களிலும் இடம்பெறுகின்றன. இதுதான் அவற்றின் குணம். மிதவெப்பம், நீர்த்தன்மை ஆகிய குணங்கள் கொண்ட காய்கறிகளில் மிதவெப்பத்திற்கு முன்னுரிமை அளிக்கலாம். நீர்த்தன்மை கொண்டவற்றுக்கு அடுத்த இடம் தரலாம்.

ஏதேனும் ஓர் உணவுப்பழக்கத்தை தெரிந்து கொண்டால் அதை அப்படியே கண்மூடித்தனமாகப் பின்பற்றுவோர் இப்போது இருக்கின்றார்கள். மனப்பாட கல்வி முறையால் உருவான சிக்கல்தான் இது என நினைக்கின்றேன். எனது விளக்கங்களையும் அதேபோல் மாற்றி கொள்ளாதீர்கள். உணவுப் பொருட்களின் தன்மைகளை அறிமுகம் செய்கின்றேன். இதன் அடிப்படையை நன்றாக புரிந்து கொண்டு சூழலுக்கு ஏற்றபோல் முடிவு செய்யுங்கள்.

மிதவெப்பம் கொண்ட காய்கள் பொதுவாக எல்லா காலங்களுக்கும் உகந்தவை. நீர்த்தன்மை கொண்டவையும் இவற்றோடு சேர்ந்தால்தான் அது சீரான உணவாக இருக்கும். அதேவேளை நீர்த்தன்மை உணவுகளை கூடுதலாக்கினாலோ தவிர்த்தாலோ உடலில் உள்ள நீரின் அளவு சீர்கெடும். உயிர்களின் உடல் வடிவம் வெப்பத்தினால் அமைக்கப்படுகின்றது என்பதால் மிதவெப்ப காய்கள் முதன்மையானவை. அவ்வளவுதானே தவிர நீர்க்காய்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பொருள் அல்ல.

**குளிர்ந்த உடல் இருக்கும்போது நீர்க்காய்களை குறைக்கலாம். ஒருவேளை உடல் வெப்பம் கூடுதலாக இருந்தால் மிதவெப்ப காய்களைக் குறைத்துவிட்டு நீர்க்காய்களை அதிகரித்துகொள்ளலாம்.**

ஏற்கனவே குளிர்ந்த உடல் இருக்கும்போது நீர்க்காய்களை குறைக்கலாம். ஒருவேளை உடல் வெப்பம் கூடுதலாக இருந்தால் மிதவெப்ப காய்களைக் குறைத்துவிட்டு நீர்க்காய்களை அதிகரித்துகொள்ளலாம். இதுபோல சூழலுக்கு ஏற்ப காய்கறி வகைகளைத் தெரிவுசெய்யுங்கள்.

கிழங்குகள் அனைத்தும் நிலத்தின் தன்மை கொண்ட காய்கள். ஐம்பூதங்களில் இறுதிநிலை உள்ளது நிலம். மற்ற நான்கு பூதங்களும் முழுமையான வடிவம் எடுத்தால் அதுதான் நிலம். இதற்கு மேல் மாறுவதற்கு வடிவம் எடுத்தால் அதுதான் நிலம். இதற்கு மேல் மாறுவதற்கு வடிவம் இல்லை. காற்று வெப்பமாக மாறும். வெப்ப நீரை உருவாக்கும். நீரில் நிலம் தோன்றும். ஆனால் நிலத்தில் இருந்து வேறு எதுவும் தோன்றாது. மாறாக நிலம் மீண்டும் நீராக, காற்றாக, வெப்பமாக திரும்பிச் செல்லும். இதுதான் படைப்பின் ஐம்பூதவிதி.

ஆக்வே நிலத்தின் தன்மை கொண்டவை அனைத்தும் செரிவானவை. அதாவது அதிகமான ஆற்றல்களைத்தம்முள் வைத்திருப்பவை. நிலத்தின் உள்ளே காற்று, வெப்பம், நீர் ஆகிய அனைத்தும் மிகுதியாகவே இருக்கும். பழங்குடிகள் கிழக்கு வேட்டையாடுவதை பார்த்திருக்கிறீர்களா?

ஏதேனும் ஒரு கிழங்கை அகழ்ந்து எடுத்துவிட்டால் அந்தக் கிழங்கை மட்டுமே சாப்பிட்டு ஒருநாள் முழுவதும் ஆற்றலோடு இயங்குவார்கள். இதுதான் கிழங்கின் தனித்தன்மை. உடல் உழைப்பு குறைவாக உள்ளவர்களுக்குக் கிழங்குகள் செரிமானச் சிக்கலை உருவாக்காதவை. அதேவேளை கிழங்குகளில் பொதிந்துள்ள ஆற்றல்களை தவிர்ப்பது மிகவும் தவறானது. ஆகவே கிழங்குகளை அவ்வப்போது உணவில் சேர்த்துகொள்ள வேண்டும்.

சமையல் முறைகளில் கிழங்குகளை அவித்துச் சமைக்கும் வழக்கம் கூடுதல் நன்மை தரும். அவிக்கும்போது நிலத்தின் தன்மை நீரால் சிதைக்கப்படுகிறது. நீர் சிதைத்த பிறகு இந்த நிலம் எளிதில் செரிக்கப்படும். நமது உடலுக்கும் பூமிக்கும் இது பொருந்தும். சிந்தித்துபாருங்கள்!



## அஜித் சாதனை

தமிழ் சினிமாவின் பாக்ஸ் ஆபிஸ் கிங் என்றால் அஜித் தான். படம் நன்றாக இருக்கின்றதோ, இல்லையோ ஓப்பனிங் வசூலில் அஜித் மிரட்டிவிடுவார். அந்த வகையில் இவரின் வேதாளம் தமிழகத்தில் ரூ 33 கோடிக்கு விற்கப்பட்டது, அப்படம் ரூ 75 கோடிகளுக்கு மேல் வசூல் செய்து சாதனை படைத்தது. தற்போது தல57 தமிழகத்தில் ரூ 40 கோடிகளுக்கு வியாபாரம் ஆகியுள்ளதாக கிசுகிசுக்கப்படுகின்றது, அதிலும் வேதாளம் படத்தை வாங்கிய ஒரு அரசியல் சார்ந்த சினிமா நிறுவனமே இந்த படத்தையும் வாங்கியுள்ளதாக கூறப்படுகின்றது.

## விக்ரம் ஜோடியான "பிரேமம்" நாயகி

இருமுகன் படத்தைத் தொடர்ந்து விக்ரம் வாலு பட இயக்குநர் விஜய் சந்தர் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இப் படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ள நிலையில் இப் படத்தின் கதாநாயகி வேட்டை தீவிரமாக நடந்து வந்தது. இந்நிலையில் படத்தின் நாயகியாக "பிரேமம்" பட நாயகி சாய் பல்லவி ஒப்பந்தமாகியுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன. இப் படம் முழக்க முழக்க வட சென்னையை மையப்படுத்தி கேங்ஸ்டர் படமாக உருவாகவுள்ளதாம். "பீமா" படத்தைத் தொடர்ந்து விக்ரம் நடிக்கவுள்ள கேங்ஸ்டர் படம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சல்மான் முதலிடம்

போப்ஸ் இந்தியா பத்திரிகை 2015 அக்டோபர் முதல் 2016 செப்டெம்பர் வரையிலான காலப்பகுதியில் கிடைத்த வருமானம் மற்றும் புகழ் அடிப்படையில் 100 இந்திய பிரபலங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் வருவாய் அடிப்படையில் பிரபல நடிகர் சல்மான் கான் முதலிடத்துக்கு முன்னேறி உள்ளார். இவரது வருவாய் ரூ270 கோடி ஆகும். இதனையடுத்து முதலிடத்திலிருந்த ஷாருக்கான் இரண்டாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளார். இவரது வருவாய் ரூ222 கோடி ஆகும். புகழ் அடிப்படையில் விராட் கோஹ்லி, சல்மான் கான், ஷாருக்கான் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் பிடித்துள்ளனர்.

## நல்ல ஐடியா

நடிகை சமந்தா தமிழ், தெலுங்கு என மாறி மாறி படங்களில் நடித்து வருகிறார். இடையில் காதலிலும் கமிட்டானதால் மிக பிசியாக இருக்கிறார். தெலுங்கு நடிகர் நாக சைதன்யாவுடன் இவரது திருமணம் மிகவும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் அவர் தான் வைத்திருந்த விலை உயர்ந்த மோதிரத்தை தொலைத்து விட்டாராம். அதை அவர் தன் காரில் தான் வைத்திருந்தாராம். அதனால் வீட்டில் வேலை செய்யும் உதவியாளர்களில் யாரோ ஒருவர் தான் எடுத்திருக்க வேண்டும் என சந்தேகித்தார். எப்போதும் தனது உதவியாளர்களை தன் குடும்பத்தார் போல நடத்தும் சமந்தா எப்படி எல்லோரையும் விசாரித்து கண்டுபிடிப்பது. ஒரு வேலை தவறாய் போனால் தவறு செய்யாதவர் மனம் பாதிக்கப்படும் என யோசித்தாராம். இதனால் ஒரேடியாக உதவியாளர்கள் அனைவரையுமே வேலையிலிருந்து நிறுத்திவிட்டாராம். தற்போது இந்த தகவல் பரவிவருகிறது.

## அஜித்துக்கு ஜோடியாக நடிக்க மாட்டேன்

நடிகர் அஜித் இப்போது சிறுத்தை சிவா இயக்கத்தில் தல 57 படத்தில் நடித்து வருகிறார். இவருக்கு இப்போது ரசிகர்கள் செல்வாக்கு மிகவும் அதிகம். இவருடன் நடிக்க பலரும் ஆர்வம் காட்டிவருகின்றனர். இதில் நடிகைகளை பற்றி சொல்ல வேண்டியதில்லை. எப்போது அந்த சான்ஸ் வரும் என காத்திருக்கிறார்கள். இது ஒரு புறமிருக்க அஜித்தின் மனைவி ஷாலினியுடைய சகோதரி ஷாமிலி அஜித்துக்கு ஜோடியாக நடிக்க மாட்டேன் என பேசினார். அவர் எனக்கு அண்னண் மாதிரி. அதனால் அவருடன் முக்கிய வேடங்கள் கிடைத்தால் நடிப்பேன் அஜித் வீட்டில் அமைதியாக இருப்பார். அவருடைய படதில் எனக்கு வாலி, வில்லன், காட்ஃபாதர், பில்லா ஆகிய படங்கள் பிடிக்கும் என ஷாமிலி கூறினார்.

## வில்லியான அம்மா

தமிழ் சினிமாவில் அம்மா கதாபாத்திரம் என்றால் அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது சரண்யா பொன்வண்ணன் தான். முன்னணி இளம் நடிகர்கள் அனைவருக்குமே அம்மாவாக நடித்துள்ளார். இவர் தற்போது அச்சமின்றி என்ற படத்தில் நெகட்டிவான கதாபாத்திரத்தில் முதன்முறையாக நடித்துள்ளாராம். "என்னமோ நடக்குது" படத்தை எடுத்த ராஜபாண்டி இயக்கும் இப்படத்தில் விஜய் வசந்த் நாயகனாக நடிக்கிறார். இதுபற்றி சரண்யா கூறுகையில், கதையை கேட்கும்போதே பயந்தேன், நெகட்டிவ் கதாபாத்திரம் எனக்கு பொருந்தாது என்றேன், படப்பிடிப்புக்கு முதல்நாள் கூட இயக்குனருக்கு போன் செய்து நடிக்கலை என்றேன். அவர் என்னை நம்பிக்கையோடு நடிக்க வைத்தார் என்று கூறியுள்ளார். பாசக்கார அம்மாவாக நடித்த இவருக்கு வில்லித்தனம் எடுபடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


2017
விளம்பரதாரர்கள் மற்றும்
வாசகர்களுக்கு
தீபத்தின் இனிய
புது வருட நல்வாழ்த்துக்கள்
Subash
BAKERY
அனைத்து கேக் வகைகள் மற்றும் தரமிக்க
உடனடி உணவுப் பொருட்களிற்கு
வடமராட்சி மக்களின் மனங்கவர்ந்த
ஒரேயொரு தன்னிகரில்லாத வெதுப்பகம்
Main Street, Nelliyadi, Jaffna.
Tel: 021 226 2447
உலக தமிழர்களுக்கு ஓர் ஊடகம்

புதுவருட வாழ்த்துக்கள்



SALON MANGALYAS
Rethink your lash look

MRS. JESICA VERJINNA

RETHINK YOUR LASH LOOK

BRIDAL MAKE UP AND DRESSING
FACIALS WHITENING TREATMENT
PIMPLE TREATMENT HAIR PERMING
REBONDING STRAIGHTENING HAIR COLORING
HAIR HIGHLIGHTS
HAIRLRONING MEHENDI
NAIL ART
PEDICURE
MANICURE UNDER EYE TREATMENT
HAIR CUT
SCULP MASSAGE
DANDRUFF TREATMENT
CURLY DRY
BLOW DRY WARTS REMOVER
CONDITIONING TREATMENT HENNA TREATMENT
SAREE DRAPING

அழகுக்கலை பயில்வதற்கான ஒரு அரிய வாய்ப்பு

15 வருட கால அனுபவத்தினை கொண்ட அழகுக்கலை நிபுணர் MRS. JESICA VERJINNA அவர்களால் January மாதம் புதிய கற்கைநெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

Bharathi lane, Atchuveli, Jaffna.

T.P : 075 038 5781 / 076 902 0797
E-Mail : salonmangalyas@gmail.com



புதுவருட வாழ்த்துக்கள்

Lady Ratha
A HOUSE OF LADIES FASHION



அச்சுவேலி பிரதேசத்தில் மகளிர்க்கான தரமான ஆடைகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரேயொரு இடம்





புதுவருட வாழ்த்துக்கள்

தரம் என்றும் நிரந்தரம்

New v.m.k jewelry

Proper Owner V.M.K Pulendran
scence 1955

No. 15, New Marcket, Chavakachcheri. T.P : 021 227 0038




புதுவருட வாழ்த்துக்கள்

RAJ
GRAPHICS
Digital Printing



email :- shiva_sivaraj@yahoo.com
vsrajdmx@gmail.com

எமது சேவைகள்
- ★ டிஜிற்றல் பனர் பிறின்டிங்
- ★ டிஜிற்றல் ஸ்ரிக்கர் பிறின்டிங்
- ★ டிஜிற்றல் விளம்பர பெயர் பலகை
- ★ ஒளிரும் விளம்பர பெயர் பலகை
- ★ பிளாஸ்ரிக் விளம்பர பெயர் பலகை
- ★ கப் பிறின்டிங்
- ★ ரீசேட் பிறின்டிங்



077 59 53 346, 077 48 38 514



புதுவருட வாழ்த்துக்கள்
மணி ஜுவல்லரி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி,
யாழ்ப்பாணம்.
ஈசன் ஜுவெல்லரி,
பிரதான வீதி, சங்கானை.
077 658 9687




Mahaa's Digital
புதுவருட வாழ்த்துக்கள்
பனர்
ஸ்ரிக்கர்
நேம் போட்
லைட் போட்
கலர் பிரிண்டிங்
No. 64, Soosaipillaiyarkulam, Vavuniya. Tel : 0244545035 / 0779906581
E-mail : mahaasdigital@gmail.com




LINKES CREAM HOUSE
AND COOL BAR
KANDY ROAD, CHAVAKACHCHERI
Tp-0773126534
LINKES
CREAM HOUSE
புதுவருட வாழ்த்துக்கள்
லிங்கேஸ்
சுவை உலகின் ராஜ கிரீடம்




கனன் போட்டோ கொப்பி மற்றும் புத்தகசாலை
புதுவருட வாழ்த்துக்கள்
இல. 165 பிரதான வீதி, பருத்தித்துறை
T.P: 021 226 3236




Sale
Car& Van for Rent
T.Kiri
புதுவருட வாழ்த்துக்கள்
K.A.K. Sale Centre
Kodikamam Road, Nelliyadi.
Karaveddy.
T.P: 021 226 1996, 077 594 5678
E-Mail: Kiritharan 72@yahoo.com




எவகிறீன் அச்சகம்
EVERGREEN PRINTERS
(offset Printers, Publishers & Book Binders)
அனைத்து வேலைகளையும் தரமாகவும் நேர்த்தியாகவும் மிக விரைவாகவும்
செய்து கொடுக்கும் வடக்கு, கிழக்கின் அச்சக முன்னோடிகள்
Bill Books — பில் புத்தகங்கள்
Letter Heads — கடிதத் தலைப்புக்கள்
Wedding Invitation — திருமண அழைப்பிதழ்கள்
Hand Bills — சுவரொட்டிகள்
Posters — துண்டுப் பிரசுரங்கள்
Diaries — டையறிகள்
Calenders — கலண்டர்கள்
Certificates — சான்றிதழ்கள்
And Many More — இன்னும் பல...
No. 693, K.K.S Road Jaffna.
T.P :- 021 221 9893
No. 185A, Trinco Road, Batticaloa.
T.p :- 065 222 2607 & 22 242 69
E-mail :- evergreenjaffna@gmail.com




புதுவருட வாழ்த்துக்கள்
DOLLAR MULTI CENTER
LED வல்ப் வகை 50/= தொடக்கம், Pannal
LED வல்ப்புகள் 340/= ல் இருந்து, ஸ்ரேசனறி
பொருட்கள் யாவும், மின்சாதனப் பொருட்கள்
மற்றும் பாதணிகள், மின்
உபகரணங்கள் என்பவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 11, ஸ்ரான்லி வீதி,
யாழ்பாணம்.
0770632559




மின்னிலா மின்னியல்
சகல விதமான மின்னியல், இலத்திரனியல், S-lon, PVC பைப் வகைகளை
மலிவான விலையில் பெற்றிட இன்றே வாருங்கள்...
புதுவருட வாழ்த்துக்கள்
KEVILTON
Power to Innovate
S-lon
சகலவிதமான வீட்டு, நிறுவனங்களுக்குமான மின்னிணைப்பு, நீர்க்குழாய் இணைப்பு வேலைகள்
அரச அங்கீகாரம் பெற்ற மின் தொழில்நுட்பவியளாளர்களால் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.
No : 5, டிப்போ வீதி, கிளிநொச்சி.
T.P :- 077 839 2107

HAPPY 2017 NEW YEAR

கண்கவர் காட்சியமைப்புக்களுடன் எண்ணற்ற பல வடிவங்களுடன்
சகல மங்களகரமான நிகழ்வுகளிலும் தனக்கென தனி இடம் பிடித்து
61/1 பழைய பூங்கா வீதி (சிறுவர் நீதிமன்றம் முன்பாக)
புதுப்பொலிவுடன் காட்சிதரும் உங்கள் குடும்ப நண்பனாம்

# ரோய் டிஜிற்றல்

அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவரிற்கும்
தனது புதுவருட நல் வாழ்த்துக்கள் கூறுவதில் பெருமையடைகிறது.

Blu-ray Disc

Full HD 1080

## Wedding & Reception Packages


silver,Gold,platinum, VIP,
couples wedding packages

## Birthday packages

Silver , Gold

## Puberty Ceremony packages

Silver,Gold,Platinum



# ROY DIGITAL
## PHOTO & VIDEO


TP :- 0777285794 0779591023

E-mail : roydigital5@gmail.com facebook: roy digital jaffna

No 61/1 or (16/1) Old park Road, jaffna


MA Holidays & Travels
Ticketing/Hotel/Holiday/Visa/Insurance
அனைவருக்கும்
புதுவருட வாழ்த்துக்கள்
All Countries Air Ticketing
261, Power House Road,
Jaffna.
021 300 3888
077 0066656
Maholidaysmayu@gmail.com
www.maholiday.com
Hotline: 0773965052
B.Mayuran
Managing Director


கோசலா லேணர்ஸ்
Koshala Driving School
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
பதிவு இல: DS.591
T.P: 0775356979
Kandy Road. Chavakacheri.
T.P: 0217903422,
Main Road, Chankani.
0777048585
No.215, 2 nd Cross Street, Jaffna.
T.P: 0217903351


கமலா புத்தகசாலை
Kamala Book Depot
Dealers in
Book, Fancy, Goods a Stationaries With best Compliments of
Main Street, Pointpedro.


prop:
P.jeyatheepan
94 77 6541501
Jeyasri Printers
021 221 9129, 077150 9001
34, Brown Road, Jaffna.
jeyarsriprinters 82@gmail.com


N Mobile
Dealers in Wholesale & Retail Mobile Phone,
Accessories & Repairing
No.11, (UP, Stars) New Market,
Hospital Road, Jaffna. Tel: 021 2220 875



ஸ்ரீ முருகன் கபே
சைவ உணவகம்
வடைக் கடை
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.


மொடேன் ஸ்டோர்ஸ்
பஸ் நிலையம் - நெல்லியடி
கரவெட்டி.
தொ.பே: 0214901519


மலாயன் கபே
வடை என்றால் அது மலாயன் மாத்திரமே
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சிற்றுண்டி
வகைகள் மற்றும் விசேட வைபவங்களுக்கு
தேவையான சிற்றுண்டி வகைகளை ஓடர் செய்து
தரமாகவும் சுவையாகவும் பெற்றுக்கொள்ள
யாழ்.நகரில் சிறந்த இடம்
A first Class Vegetarian Hotel
Malayan Cafe
36-38, Grand Bazaar, Jaffna, Tel: 021 222 2373


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
அருண் ரெக்ஸ்
அன் ப.:ன்சி பாலஸ்
சுப நிகழ்வுகளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட
சிறுவர்கள், பெரியவர்களுக்கான
அனைத்துவகையான ரெடிமெட் ஆடை
வகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
பிரதான வீதி, நெல்லியடி, யாழ்ப்பாணம்.
தொ. பே : 021 226 2857


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
HI Tech
Electronics & Phone Shop
Repairs can be done on all brands of phone
Phone Sale & Repairing
Phone Unlocking
Reload & Recherche card
No: 53, K.K.S. ROAD, CHUNNAKAM
T.P: 021 561 7181


அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
NORTHERN FITNESS
GYM & FITNESS CENTER
யாழ் நகரில் முதன் முதையாக NVQ Level 4 உடற்பயிற்சி
கற்கை நெறி பயின்ற பயிற்றுவிப்பாளரினால் நடாத்தப்படும்
உடற்பயிற்சி நிலையம்
யாழ் மாவட்டத்தில் முதன் முறையாக அதி நவீன வசதிகளுடன்
கூடிய இரு கிளைகளைக் கொண்ட ஒரே ஒரு பயிற்சி நிலையம்
இல: 73, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்
இல: 18, பண்டிதர் மாணிக்க தியாகராஜர் வீதி, சுன்னாகம்
077 025 0339


ABM
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
சுவாமிப் படங்கள், சீனறிப் படங்கள், பொக்ஸ் பிறேம்,
டிறொப் பிறேம், கிறிஸ்ரல் பிறேம் மற்றும் கிவ்ற் பிறேம்,
போட்டோ பிறேம்கள்...
அன்னை படமாடம்
கோப்பாய் வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய்
T.P: 0777 989 145


அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
EYE CARE OPTICAL
கணினி மூலம் பரிசோதிக்கப்பட்டு
மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும்...
#55, Bus Stand, Kandy Road.
#49, Bus Stand Complex, Vavuniya.
T.P: 0244905334, 0775717676


10 ஆண்டுகள் யாழ் நகரில் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் மனங்கவர்ந்த
தங்குமிட வசதி கொண்ட ஹோட்டல்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
BRIGHT INN
பிறையிட் இன் ஹோட்டல்
உணவுகள்
தங்குமிடம்
திருமண மண்டபம்
அங்கீகாரம் பெற்ற அனுபவம்
வாய்ந்த சமையல் கலை
நிபுணர்கள், தரமான சேவையாளர்கள்
பணியாற்றும் ஹோட்டல்....
51, Sivan Road, Thirunelveli, Jaffna
Tel: 021 222 1889 Email: brightinnjaffna@yahoo.com


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
கண் வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யும்
மூக்குக்கண்ணாடிகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ளவும்
நவீனரக (Frame) களையும் தரமான Lenses களையும்
பெற்றுக்கொள்ள அன்றும் இன்றும் என்றும் மூக்குக்கண்ணாடிக்கு
பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2486
கிளைகள்:
105, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். 021 224 0255
91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில். 021 222 5233


அனைவருக்கும் இனிய புது வருட வாழ்த்துக்கள்
Technology at the Speed of life
Arun
Software Developers
Cctv Cameras
Bar Code
Finger Print
Inter com
Mobile Accessories
No: 273, Hospital Road, Jaffna
T.P: 021 221 5828,Mob: 0777 123 313


அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
Green Grass
Hotel
Rooms
Wedding Hall
Swimming Pool
Green Grass Hotel & Restaurant (PVT) Ltd.
No 33, Aseervatham Lane,
Hospital Road,
Jaffna,
Sri Lanka..
Tel:-+94 21 222 4385 / +94 21 222 1686
Fax:- +94 21 222 4999.
Mobile :- 0777 803 210
Email:- greengrassjaffna@gmail.com


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய புது வருட வாழ்த்துக்கள்
வைஷ்ணவி
நகைப் பூங்கா
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 021 226 4519


வேல் றில்லேஸ்
VEL DRILLERS
நவீன உலகத்திற்கு ஏற்ப சில மணித்தியாலங்களில்
உங்கள் இல்லத்தில் அழகிய முறையில் குழாய்கிணறு
தோண்டி கைப்பம்பி பொருத்திட.....
Deep Well Drilling | Hand Pump Fitting | Hand Pump Repairing
Deep Well Repairing | Pipe Fitting
இயந்திரத்தால் குழாய்க்கிணறு தோண்டுதல்,
கைப்பம் பொருத்துதல், கைப்பம் திருத்துதல்,
நீர்க்குழாய் பொருத்துதல்.
SPECIALIST IN WELL DRILLING TECHNOLOGY
Thekka Watta, Vavuniya. Tel : 0779006867, 078885925


WALAWWA REST
A/C,
NON A/C
ROOMS
FOODS
&
BEVERAGE
No. 64,
Hospital Road,
Vavuniya.
Tel / Fax : 0242224877
Mobile : 0777865616


அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
THURAI BUILDERS
வடமராட்சி மண்ணின் அதி நவீன கட்டட
வடிவமைப்பிற்கு நாடவேண்டிய ஒரே இடம்...
Point Pedro Road, Nelliady, Jaffna
Tel: 077 833 0008, 077 841 4215


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
த சசிகா லேணர்ஸ்
The Sasika Learners
அரச அங்கீகாரம்
பெற்ற சாரதி
பயிற்சி பாடசாலை
கிளைகள்,
மல்லாகம் சந்தி, மல்லாகம் 021 224 3393,070 301 3014
ஓடக்கரை வீதி, சங்கானை. 021 225 1664, 070 301 3016
வங்களாவடிச் சந்தி, வேலணை 021 221 5472, 070 301 3012
இல: 57, வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 0777 226 247, 0212 217 678, 0776 140 361


அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
ஈடன் சேவிஸ் நிலையம்
அங்கிகரிக்கப்பட்ட
YAMAHA
சேவை மையம்
இப்பொழுது
உங்கள் வசதியான
புதிய இடத்தில்
அனைத்துவகையான
கார், வான், முச்சக்கரவண்டி
மற்றும் மோட்டார் சைக்கிள்கள்
சுத்திகரிப்பு செய்யப்படும்.
உங்கள் நேரத்தை முற்பதிவு செய்துகொள்ள இன்றே அழையுங்கள் 077 9413457
கொன்வென்ட் ஒழுங்கை, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
077 3775070



யாழ் சதீஸ் எலைக்ட்ரானிக் & வோட்ச் வேக்ஸ்
மணிக்கூட்டுத் தேவையின் தனிப்பட்ட இடம்...
"இயங்காததை இயக்குபவர்"
புதுவருட வாழ்த்துக்கள்
இல. 55 - 57, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 077 613 6007




TOURS (WHOLE ISLAND COVERAGE) & AIRPORT TRAVELS
For an excellent, comfortable and
nice tours
HAPPY NEW YEAR
MOBILE 0777296751
89/G/8, Seysapura, Moratuwa, / Sri Lanka. Tel : 0112736603 /




T - MOBILE
HAPPY NEW YEAR
Sales & Repairing
No. 186, Ramanathan Road,
Jaffna.
T.P : 075 041 4400




St. Anthony's Farm
kovilkulam, vavuniya.
புதுவருட வாழ்த்துக்கள்
Free Home Delivery
0729643643




ஸ்ரீலங்கா புத்தகசாலை
புதுவருட வாழ்த்துக்கள்
பாடசாலை புத்தகங்கள்,
பாடசாலை உபகரண பொருட்கள்,
காகித தாள்கள் என்பன இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
T.P : 021 222 2573




Ranjan Enterprises
Home & Office Free Delivery
TEL : 0778585348
NO. 262, MAIN STREET, JAFFNA, SRILANKA.




M.TEL
DISTISTRIBUTORS PVT LTD.
HAPPY NEW YEAR
Phones
Phones Accessories
Computer Accessories
Electronice & Etc...
Whole Sale & Retail
Payment by Credit,
Debet Card Now Accepted
VISA
MasterCard
No. 976, point pedro Rd,
Kalviyankadu, Jaffna.
T.P :- 077 767 7750, 021 205 4199




Yogis Beauty
Institute of beauty the rapy
hair dressing & home sceience (PVT) LTD
25 வருடங்களுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த நிபுணரின் கைவண்ணம்
இந்தியாவின் அதி நவீன அழகுக்கலை நுட்பங்களின் வெளிப்பாடு
யாழ்ப்பாணத்திலும் மணப்பெண் அலங்காரத்தின் நவீன பரிமாணங்கள்.
Our Services
Skin Care
Advanced Facial Treatments
Skin Whitening treatment
Makeup hair care
Etc.....
Our Corse
Advanced beauty culture & Hair dressing diploma course
Advanced cosmetology (diploma course)
Advanced bridal make - up with airbrush makeup & hair styles
Cakedecoration classes
Diffrent types of saree draping
More...
புதுவருட
வாழ்த்துக்கள்
Be come an qualified beautician from and experienced trainer
No 75 amman road, mallur, Jaffna.
Email - yogisbeauty@gmail.com
Web - www.yogisbeauty.com
T.P :- 0094212222796
0094777164923
0212222796
0777164923



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
துனுஷா நகைத்தொழிலகம்
எண்ணம் போல் தங்க ஆபரணங்களை செய்து பெற்றுக்கொள்ள ஒரே இடம்
பஸ் நிலையம் அருகாமை சுன்னாகம். T.P:077 3026407




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
Susila Gold House
சுசிலா கோல்ட் ஹவுஸ்
Specialist in 22ct Gold Jewellery
No: 59.3/5, City Center (Inside)
Sea Street, Colombo - 15
Branch: Point Pedro, Jaffna
Tel : 011 243 9090
Mob :072 764 1333




சூரியன்
திருமண சேவை
பிறக்கும் மங்களகரமான புது வருடத்தில் அனைவருக்கும் சுபம் உண்டாகட்டும்
இல: 561, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 470 1430




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
சனா ஹோட்டல்
சைவ, அசைவ உணவகம்
SANA HOTEL
ஏ-9 வீதி, கைதடி தெற்கு, கைதடி.
தொ. பே: 077 668 8337




வாடிக்கையாளர்களுக்கு இனிய புது வருட வாழ்த்துக்கள்
REGIT
Beauty Care
All Kinds of Facial
Bridal Makeup (3D)
Mehndi with New Design
Threading & Waxing
Hair Cutting
Manicure & Pedicure
Cake Icing
Women Accessories
பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்
077 3602014
wedding & other function bridal
முற்பதிவு செய்யும் முதல் 20 வாடிக்கையாளர்களுக்கு 40% தள்ளுபடி
இச்சலுகை ஜனவரி 15 முதல் பெப்ரவரி 15 வரை மட்டுமே
#401, Clock tower Road, Jaffna




வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்
கோகுலறஞ்சன்
ஸ்ரோர்ஸ்
பாடசாலை உபகரணங்கள்,
அப்பியாசக் கொப்பிகள், பேனாக்கள் என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
கே.கே.எஸ். வீதி, இணுவில்
T.P: 021 222 6718




கண்ணன் புத்தகசாலை
ஆரம்பிக்கும் 2017 ஆம் ஆண்டு வருடம் அனைவருக்கும் புதியதோர் ஆரம்பமாக தொடரட்டும்.
வாடிக்கையாளர்கள் அருைக்கும் புதுவருட வாழ்த்துக்கள்





அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
New INPALA HOTEL
Taste for hunger....
Air conditioned & Normal Service Available...
Orders are undertaken......
Halal Food
#259, K.K.S. Road, Jaffna
Our Branch: #10/1, 1st Cross Street, Vavuvniya.
Contact: 0777770689
0767846663




விக்கி லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
Vikki Learners
Hot Line :
077 8308360, 021 7223201
இல.136/1, பலாலி வீதி, பரமேஸ்வரா வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.




Pb
Mobile Phone Shop
All Phone Accessories
No.381/1,
K.K.S Road,
Chunnakam.
Banu724@gmail.com
0776636619,
0214545135
Proprietor: Banu

For Our Service - Hard of Town
A/C Rooms/ Family Room /Swit Room
A/C Room For Get Together B.B.Free
Single Room (Normal With B.B)
LOUNCH ON DINNER
FOR YOU REQUEST
GER- CEY
Guest House
120 1/1,Hospital Road, Jaffna.
021 221 7844, 0777317020

Winny's Lucky
Indian Beauty Parlour
S.Karthihayini T.P: 0770540935




GLOBAL
RENT A CAR
Office : 021 221 7424
Mobile: 077 071 2317
E.Mail : globalrent25@gmail.com
Prof: Hamal

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

**Abeishan Construction**

குறித்த கால எல்லையில் உங்கள்
அலுவலகங்கள், வீடுகள் அனைத்தையும்
நிர்மாணித்துக்கொள்ள முடியும்

T.P: 0779773322/0213210683

Neervely South, Neervely.
Email: abeishanconstruction@gmail.com

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

அனைத்து விதமான மோட்டார் சைக்கிள்களுக்கான
உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான
உதிரிப்பாகங்களை கிளிநொச்சியில் ஒரே இடத்தில் பெற்றிட..

**A.K.R MOTORS**

No: 133, A9 Road Kilinochchi T.P: 021 228 5375

அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

மரக்கறி வகைகள், அமெரிக்கன் குடிநீர்
அப்பியாசக்கொப்பிகள், பலசரக்குப் பொருட்கள்
மற்றும் செல் ஹாஸ்

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி

அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்

**சிவானந்தா கபே**

சிற்றுண்டி வகைகள், மதிய உணவுகள்
என்பவற்றை பெற்றுக்கொள்ளலாம். மற்றும்
ஓடர் செய்தும் பெற்றுக்கொள்ளலாம்

648, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 077 6925 819

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புது வருட வாழ்த்துக்கள்

**SKY ROSE** CHIDAMBARAM COVERING

ஸ்கை ரோஸ் சிதம்பரம் கவரிங்

அனைத்து வோரண்டிங் கவரிங் நகைகளை
இங்கே பெற்றுக்கொள்ளலாம்

No: 1 Hospital Road, Jaffna. Call: 0771536914

**IECE**

*INSTITUTE OF ENGLISH & COMPUTER EDUCATION*

*121/1(219/A) Arasady Road,*
*Kantharmadam, Jaffna. Srilanka.*
*012 221 9140/ 021 5674133/0773780390*

*E-mail: info.iecejaffna@gmail.com*

*IELTS Academic*
*Level and General Training*

*IELTS Life Skills*
*Level A1 & B1*

R.Ramanathasan
*Managing Director*


**யாழ்.புத்தகசாலை**


22, கன்னாதிட்டி வீதி, (சிவன்கோயில் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 4927568
(சண்முகம் உணவத்தில் இருந்து 7 ஆவது நிலையம்)

கிளை: கனகபுரம் விளையாட்டுக் கழக சந்தி,
கனகபுரம் வீதி, கனகபுரம். கிளிநொச்சி.

T.P: 0214927625


கட்டடம் வாடகைக்கு விடப்படும்
அச்சுவேலி பேருந்து நிலையத்துக்கு முன்பாக
புதுவருட வாழ்த்துக்கள்
2400 சதுர அடி கொண்ட கட்டிடம்
200 சதுர அடி வாகனத்தரிபிடத்தை அமையப்பெற்றது
அனைத்து அடிப்படை தேவைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது
குறிப்பு
நீண்ட கால குத்தகை அடிப்படையில் கட்டிடத்தை பெறவிரும்புபவர்களுக்கு
வாடகை சலுகைகள் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு இன்றே அழையுங்கள்
076 6622634 | 0049 17657650626


ஐயப்பன் கைத்தொழிலகம்
புதுவருட வாழ்த்துக்கள்
கொப்பராய் அரைத்தல்
எள்ளு அரைத்தல்
இலுப்பை விதை அரைத்தல்
வேப்பம் விதை அரைத்தல்
விளக்குமாறு, தும்புத்தடி,
தும்புவகை உற்பத்திகள்
சிரட்டை ஈக்கில் என்பன கொள்வனவு செய்யப்படும்
தொடர்புகளுக்கு : 0774821455
மன்னார் வீதி,
வேப்பங்குளம்,
வவுனியா.
Mannar Road,
veppankulam,
Vavuniya.


HAPPY NEW YEAR
ADSAYA BOMBAI SWEETS
No. 25, Kannathiddi,
(near the cargills foodcity)
Jaffna
S.I.SURESH
TEL - 077 175 1495


VANNI BABY NEEDS & BOOKSHOP
வன்னி பேபி நீட்ஸ் & புத்தக நிலையம்
புதுவருட வாழ்த்துக்கள்
அழகு சாதனப் பொருட்கள், பாடசாலை மாணவர்களுக்கான
அப்பியாச புத்தகங்கள் போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றிட
மற்றும் தரமான முறையில் போட்டோ கொப்பி செய்திடவும் நாடுங்கள்...
155A. மன்னார் வீதி, குருமன் காடு, வவுனியா.
தொ.பே : 077 944 6293

HAPPY NEW YEAR

A member of the IDOL family

UV Water Solution
water science technologies

# UV Water Solution

water science technologies

**Right solution for water issues**

## கழிவு நீர், குடி நீர், சுத்திகரிப்பு தொடர்பான பிரச்சனைகளுக்காக தீர்வுகளும் வழங்கப்படும்.


### எமது சேவைகள்

வீடுகள் உணவகங்கள் மற்றும் அலுவலகங்கள் பாடசாலைகள் போன்றவற்றுக்கு தேவையான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் [Domestic RO plant]

உங்கள் வீட்டு கிணற்று நீர்பரிசோதிக்கப்பட்டு அதற்கு ஏற்ற வகையில் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுத் தரப்படும் 22000.00 இருந்து தவணைமுறை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளலாம்


நிர்மானிக்கபட்ட சில பொது இடங்கள்

SOS children village
சாவகச்சேரி நகராட்சி மன்றம்
Jaffna DS office
Kodikamam thirunavukarasu central college
Mullaitivu kachcheri
முல்லைத்தீவு கல்விவலயம்
Meesali weerasingam central college
Hartly college





மஞ்சள் நிறத்தில் காணப்படும் நீரை தூய நீராகமாற்றிக் கொள்வதற்கு





கல்சியம் வடிகட்டிகள் [water softener plant ]

இவ் உபகரணம் மூலம் வடிகட்டும் போது நீரில் உள்ள கல்சியம் அகற்றப்படுவதால் வீட்டுக் குளியலறைகளில் கல்சியம் படிவது தடுக்கப்படும்

கழிவுநீர் சுத்திகரிப்பு [waste water treatment plant]

விடுதிகள், உணவகங்கள் வாகன சுத்திகரிப்பு நிலையங்கள். தொழிற்சாலைலகள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்ட நீரை சூழலுக்கு பாதகமற்ற நிலையில் வெளியேற்றுவதற்கு ஏற்றவகையில் சுத்திகரித்து தரப்படும்.

எம்மால் நிர்மானிக்கப்பட்டு கண்ணாணிக்கப்படும் இடங்கள்
KMK sea Food
Green Grass Hotel
Tilko Jaffna city Hotel

நீச்சல்தடாகக் கட்டுமானம்

நீரியல் தொடர்பான இரசாயனங்கள்
Hcl
RO Antiscalent
Chlorine 90% and 70%

# 277, Kachcheri Nallur Road, Nallur, Jaffna, Sri Lanka. Email - uvwatersolution@yahoo.com
Tel. - 021 4900671, Fax - 021 4900671, Hot Line - 071 7273686, 071 7273698.


துர்க்கா பொத்தகச் சோலை
பஸ் நிலையம் சுண்ணாகம்.
தரமான பாடசாலை உபகரணங்கள்
வண்ணமிகு வாழ்த்து மடல்கள்
கலண்டர்கள் -டயறிகள்
காகிதாகிகள்
இலங்கை - இந்திய சஞ்சிகைகள் புதினத்தாள்கள்
என்பவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
இராசலட்சுமி ஸ்ரோர்ஸ்
நெல்லியடி பஸ் நிலையம், கரவெட்டி
The PIZZA
Family Restaurant
1 LARGE PIZZA = SMALL PIZZA FREE
Catering Service
Hotline:
0776120333, 0777120300
85(229), Palaly Road, Kantharmadam, Jaffna. Tel: 021 222 0330
8/1, Kandy Road (A9) Kilinochchi, Tel: 021 228 3330
82,Point Pedro Road, Nelliady, Karaveddy, Tel: 021 222 61330
355, Main Street, Madathay Junction,Trincomalee. Tel: 026 206 0330
FREE DELIVERY
Jaffna : 021 222 0330
Nelliady: 021 226 1330
Kilinochchi: 021 228 3330
Trincomallee: 026 206 0330
Dine - inn
Take Away
PRINCE HOTEL
SINCE 1981
Classic Veg Taste
பிறின்ஸ் ஹோட்டல்
No.169, Powerhouse Road, Jaffna.
0777406300/0212215414
யாழ்.போன் சொப்
இல.09, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை, வெளிப்புறம், யாழ்ப்பாணம்.
Yarl Phone Shop
Phone Sale & Repair
Tel: 021 222 3817/ 021 2227125/ 021 221 5455/0773611282
Talk Mobile
All Kinds of mobile phones, sales & repairing, unlocking, laptop repairing, CCTV Home Security Camers installations & Maintaining
No.7, New Market 1st, Floor, Jaffna.
talkmobiles 542@gamil.com
0213003102
0771583683
அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
AD Mobiles
Your mobile is here.....
We repair Mobile Phones
077 80 63 654
அனைவருக்கும் புது வருட வாழ்த்துக்கள்
DAYANA Recycling & Manufutring
சிறுவர்களுக்கான உள்ளக, வெளியக விளையாட்டு உபகர்ணங்கள்.
வைபர் கிளாஸ் உற்பத்திகள்.
வைபர் கிளாஸ் மோல்ட்.
பிளாஸ்டிக் உற்பத்திகள்.
றப்பர் மோல்ட் என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
மற்றும் அனைத்து வகையான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்டிக் 1,2,3 வருடகால உத்தரவாதத்துடன் பொருத்தி கொடுக்கப்படும்.
108 பலாலி வீதி யாழ்ப்பாணம்
T.P: 021 222 8680 / 077 592 5088



# ரீங் டாக்கீஸ்

## பொலிஸ் வேடம்போடும் கார்த்தி

சிறுத்தை படத்திற்கு பின்னர் கார்த்தி பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் படம் "தீரன் அதிகாரம் ஒன்று". சதுரங்க வேட்டை வினோத், கதை திரைக்கதை எழுதி இயக்குகிறார். இந்த மாதம் சென்னையில் படப்பிடிப்பு நடக்கிறது. கார்த்தியின் ஜோடி ரகுல் பிரீத் சிங். அதிகம் பொலிஸ் வேடம் போட்டிருக்காத கார்த்தியை இந்தப்படத்தில் அனைவருக்கும் பிடித்த பொலிஸ் அதிகாரியாக காட்ட இயக்குனர் முயற்சிக்கப் போகிறாராம்.

## சொப்பனசுந்தரிக்கு டும்டும்

வழக்கு எண் 18/9 படத்தில் அறிமுகமானவர் மனிஷா யாதவ். ஆதலால் காதல் செய்வீர், யன்னல் ஓரம், திரிஷா இல்லனா நயன்தாரா படங்களிலும் நடித்தார். எதிர்பார்த்தளவு நாயகி வேடங்கள் கிடைக்கவில்லை. சும்மா வீட்டில் உட்கார்ந்திருக்க முடியாதென சென்னை 28 இரண்டாம் பாகத்தில் சொப்பன சுந்தரி பாடலில் கவர்ச்சி நடனம் ஆடினார். எதிர்பார்த்த நாயகி வேடங்கள் கிடைக்காததாலேயே கவர்ச்சி வேடங்களில் நடிக்கிறேன், கவர்ச்சி நாயகியென்ற பெயரை வாங்க விரும்பவில்லையென ருவிற்றரிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் இன்னொரு தகவலும் பரவ ஆரம்பித்துள்ளது. மனிஷாவிற்கும் தொழில் அதிபர் ஒருவருக்கும் காதலாம். இந்த வருட ஆரம்பத்தில் திருமணம் செய்து கொள்ளவுள்ளனராம்.


## இவர்கள்தான் கெத்து!

கடந்த 2016 இல் வெளியான மொத்தப்படங்கள் 210. இதில் நன்தாரா போன்ற முன்னணி நாயகிகளை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை பிடித்துள்ளார்கள் ஐஸ்வர்யாவும், ஶ்ரீ திவ்யாவும். அதிக படங்கள் நடித்தவர்கள் பட்டியலில் இவர்கள் இருவரும்தான் முதலிடத்தில் உள்ளனர். இதுநம்ம ஆளு, இருமுகன், திருநாள், காஷ்மோரா ஆகிய நான்கு படங்களில் நயன்தாரா நடித்தார். ஹன்சிகா நான்கு படங்களில் நடித்தார். இந்தப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார் ஐஸ்வர்யா ராஜேஷ். எட்டுப்படங்களில் நடித்துள்ளார். அடுத்ததாக ஶ்ரீ திவ்யா உள்ளார். அவரது கணக்கில் ஆறு படங்கள். இவர்கள்தான் கடந்த வருடத்தில் அதிக படங்கள் நடித்த நடிகைகள். வேறு முன்னணி நடிகைகளிற்கு கடந்த வருடம் சரியாக அமையவில்லை.

# திரைப் பார்வை

# பாட்ஷா

நிலவன்



எந்தவொரு சூப்பர் ஹிட்டான படத்தையும் பார்க்கும் போது "நான் இந்தப் படத்தில், இந்த ரோலில் நடித்தால் நன்றாய் இருக்குமே" என்று சக நடிகர்கள் நினைப்பது வழக்கம். ஆனால் யாருமே "நான் இந்தப் படத்தில் நடித்தால் எப்படி இருக்கும்?" என்று கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத படங்களில் ஒன்று தான் "பாட்ஷா". 1995ஆம் ஆண்டு ரஜினியின் நடிப்பில் வெளிவந்து சக்கை போடு போட்ட திரைப்படம் தான் இந்த "பாட்ஷா". சுரேஷ் கிருஷ்ணா இயக்கிய இந்தப் படத்தில் ரஜினியோடு இணைந்து நக்மா, ரகுவரன், யுவராணி, ஜனகராஜ், ஆனந்தராஜ் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர். தேவா இந்தப் படத்திற்கு இசை வழங்கியிருந்தார். இன்றும் ரஜினியின் படங்களில் தனக்கென்று தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டு இருக்கின்றது இத் திரைப்படம்.

1995க்கு முன் ரஜினியின் நடிப்பிற்குச் சான்றாக "முள்ளும் மலரும்", "ஆறிலிருந்து அறுபது வரை", "நெற்றிக்கண்", "தளபதி" போன்ற படங்களே ரசிகர்களால் கொண்டாடப்பட்டன. ஆனால் "பாட்ஷா" படம் அந்தப் புகழ் அனைத்தையும் தன் பக்கம் இழுத்துக் கொண்டது. ரஜினிகாந்த் இந்தப் படத்திற்கு அவ்வளவு கச்சிதமாகப் பொருந்தியிருந்தார். மாணிக்கம் என்ற ஆட்டோக்காரராக வாழ்ந்ததிலும் சரி, பாட்ஷா என்ற தாதாவாக மிரட்டியதிலும் சரி இரண்டு கதாபாத்திரங்களுக்கு இடையிலும் அற்புதமாக வேறுபாடு காட்டி நடித்திருந்தார் ரஜினிகாந்த். இந்த ரீதியிலான நடிப்பே ரஜினியை மாஸ் ஹீரோவாக இப் படத்தில் உயர்த்தி வைத்தது.

படத்தின் ஹீரொயினாக நக்மா நடித்திருந்தார். அன்றைய இளைஞர்களின் கனவுக் கன்னியாகத் திகழ்ந்தவர் இவர். (இப்போதும் "பாட்ஷா" படம் பார்ப்பவர்களுக்கு இவர் கனவுக் கன்னி தான்). இப் படத்தைப் பொறுத்த வரைக்கும் இவருக்கு நடிப்பதற்குப் பெரிதான, கனமான பாத்திரம் இல்லாவிட்டாலும் தனக்குக் கொடுக்கப்பட்டதைச் சிறப்பாகச் செய்திருந்தார். ஆட்டோவில் ரஜினியுடன் அறிமுகமாவது, ரஜினியைத் துரத்தித் துரத்திக் காதலிப்பது என்று கலகலப்பாகப் படம் முழுவதும் வந்து போயிருந்தார் நக்மா. ரஜினி, நக்மா தவிர ரகுவரன், ஜனகராஜ், தங்கையாக வரும் யுவராணி, தந்தையாக வரும் விஜயகுமார், தாய் சாரதாப் பிரியா, தாதாவாக வரும் ஆனந்தராஜ், எனப் பல கதாபாத்திரங்கள் இருந்தும் அனைவரும் மனதில் பதிவதே படத்தின் பெரும்பலம்.

ரகுவரனைத் தவிர்த்து "பாட்ஷா" படம் பற்றிப் பேசவே முடியாது. ரஜினி தவிர வேறு யாராலும் எப்படி பாட்ஷா கேரக்டருக்கும், மாணிக்கம் கேரக்டருக்கும் உயிர் கொடுத்திருக்க முடியாதோ அதே போலவே தான் ஆன்டனி கேரக்டருக்கும் ரகுவரனைத் தவிர்த்து வேறு யாராலும் உயிர் கொடுத்திருக்க முடியாது. ரஜினியை "குழந்தை", "சின்னப் பொடியன்" என்றெல்லாம் அழைக்க ரகுவரனால் மட்டுமே முடியும். ஒவ்வொரு காட்சியில் தோன்றும் போதும் முகத்தில் அதேயளவு வில்லத்தனத்தைத் தேக்கி வைத்திருப்பார் ரகுவரன். அதுதான் ரகுவரனின் வில்லத்தனத்திற்கு மிகப் பெரிய ப்ளஸ். ரகுவரனின் இழப்பு உண்மையிலேயே ஈடு செய்யப்பட முடியாத ஒன்று தான் என்பதை அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கின்றது "பாட்ஷா" திரைப்படம்.

தேவாவின் இசை படத்திற்கு மிகப் பெரும் பக்க பலம். படத்திற்கு எல்லா விதத்திலும் ஏற்ற மாதிரியான பின்னணி இசையினை வழங்கியிருந்தார். பாடல்களிலும் அவர் குறை வைத்து விடவில்லை. "நான் ஆட்டோக் காரன்", "நீ நடந்தால் நடை அழகு", "தங்க மகன் இன்று", "பாட்ஷா பாரு", "ஸ்டைலு ஸ்டைலு தான்", "ரா ராரா ராமைய்யா" என்று எல்லா பாடல்களிலும் தூள் கிளப்பியிருந்தார் தேனிசைத் தென்றல் தேவா. வைரமுத்துவும் தன் பங்கைச் சரியாகவே செய்திருந்தார். (விளக்கம் தேவையா என்ன?).

படத்தின் இன்னுமொரு பலம் படத்தின் வசன அமைப்பு. பாலகுமாரன் வசனங்களைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. தேவாவின் இசைக்கு இணையாக வசனங்களால் படத்தைத் துலீக்கி நிறுத்தியிருந்தார் பாலகுமாரன். இந்தப் படத்தில் ரஜினியின் பஞ்ச் வசனங்கள் மிகவும் பிரபலம் பெற்றவை. அதே போல் ஒளிப்பதிவு, படத் தொகுப்பு, கலை என்று எல்லா விடயத்திலும் ரசிகர்களைத் திருப்திப்படுத்தி இருந்தது "பாட்ஷா" டீம். ரஜினியின் மாஸ் இமேஜை சரியான முறையில் இந்தப் படத்தில் பயன்படுத்தி இருந்தது இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணாவின் நுட்பம். படத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட ப்ளாஷ்பேக்குகள் இருந்தாலும் ஒன்றோடு ஒன்றைச் சேர்த்துக் குழப்பிக் கொள்ளாமல், கதையிலும் தொய்வை ஏற்படுத்தாமல் கதையினை நகர்த்தியிருந்தார் இயக்குநர் சுரேஷ் கிருஷ்ணா.


பாட்ஷா திரைப்படம் ரஜினிகாந்தின் சினிமா வாழ்க்கையில் திருப்பு முனைப் படங்களில் ஒன்று. விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் இப் படம் பெரு வெற்றி பெற்றது. 1989இல் வெளியான "அபூர்வ சகோதரர்கள்" படத்தின் வசூலை இது முறியடித்தது. மொத்தத்தில் "பாட்ஷா" இன்றைக்கல்ல, என்றைக்குமே தமிழ் சினிமாவின் உச்ச கமர்ஷியல் மாஸ் மசாலா.

...பார்வை தொடரும்

---

**ஓடி ஓடிப் படிக்கணும்னு சொல்வார்கள். அதில் உள்ள சந்தோசமே தனி. அனுபவிக்க ரெடியானவர்கள் இல.1க்கு பார்வையைத் திருப்புங்கள்.**

நிலவன்




**1.**
பிரதமருக்கு ஒரே ஒரு ஆண்டு பதவிக் காலம் கொண்ட நாடு எது? சுவிஸ்லாந்து எனின் 11க்கும், டென்மார்க் எனின் 16க்கும், பிரேஸில் எனின் 19க்கும் வாருங்கள்.

**2.**
பேடன் பவுலால் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது 1922இல் அல்ல. சரியான பதில் 17இல் உள்ளது.

**3.**
சரியான பதில். கார்ல் மார்க்ஸ் மிகச் சிறந்த ஒரு தத்துவ மேதை என்பது பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. இப்போது நீங்கள் செல்ல வேண்டியது 20க்கு.

**4.**
"நிம்மதி", "ஏராளம்", "பண்டிகை" இம் மூன்றில் தெலுங்கு மொழிச் சொல் எது? "நிம்மதி" எனின் 6க்கும், "ஏராளம்" எனின் 9க்கும், பண்டிகை" எனின் 12க்கும் வரலாம்.

**5.**
"பிரேம புஸ்தகம்" தான் அஜித் இன் முதல் படம். அடுத்த கேள்வி 4 இல்.

**6.**
வாவ். சரியான பதில். அடுத்த பயணம் அடுத்த வாரம். (எதற்கும் 9ற்கு ஒரு முறை செல்வது நல்லது).

**7.**
தவறான பதில். தத்துவம் தான் அவர் பிரபலமடைந்த துறை. இப்போது 20க்குச் சென்று அடுத்த கேள்வியைப் படியுங்கள்.

**8.**
தவறு. "கின்னார தும்பிகள்" ஷகீலா நடித்த திரைப் படம். சரியான விடை 5இல்.

**9.**
ஒன்று தெரியுமா? இந்த மூன்று சொற்களும் தெலுங்குச் சொற்கள் தான். புது வருடத்தில் ஒரு புது சந்தோஷத்துடன் சென்று வாருங்கள். அடுத்த வாரம் சந்திப்போம்.

**10.**
சாரணர் இயக்கம் எத்தனையாம் ஆண்டு தோற்றம் பெற்றது? 1912 எனின் 2க்கும், 1910 என்றால் 17க்கும், 1921 எனின் 14க்கும் வரலாமே.

**11.**
அடடே சரியான பதில் தான். அடுத்த கேள்வி 10 இல்.

**12.**
அடடா... சரியான சொல்லதை தான் கண்டுபிடித்திருக்கிறீர்கள் வாழ்த்துக்கள். அப்படியே 9ற்கு வாருங்கள் பார்க்கலாம்.

**13.**
தவறு. அஜித்தின் முதல் தமிழ் படம் இது தான். ஆனால் அவர் அறிமுகமானது தமிழ் அல்ல. விடை அறிய 5க்க வாருங்கள்.

**14.**
நீங்கள் ரொம்ப தூரம் போய்விட்டீர்கள். விடை அறிய 17க்குச் செல்லுங்கள்.

**15.**
"கார்ல் மார்க்ஸ்" எந்த துறையில் பிரபலம் பெற்றவர்? தத்துவம் எனின் 03க்கும், அறிவியல் எனின் 7க்கும், ஊடகம் எனின் 18க்கும் விரையுங்கள்.

**16.**
முதல் கேள்வியிலேயே நீங்கள் அவுட். சரியான பதில் 11 இல்.

**17.**
ம்ம்... 1910 தான் சரியான பதில். அடுத்த கேள்வி 15இல்.

**18.**
தவறான பதில். 3இல் உள்ளதே சரியான பதில்.

**19.**
உங்கள் பதில் தவறு. விடை அறிய 11க்கு வாருங்கள்.

**20.**
நடிகர் அஜித்தின் முதல் திரைப் படம் எது? "கின்னார தம்பிகள்" என்பவர்கள் 08க்கும், "அமராவதி" என்பவர்கள் 13க்கும், "பிரேம புஸ்தகம்" என்பவர்கள் 5க்கும் செல்லுங்கள்.

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** ஆத்திகரா? நாத்திகரா? இந்தக் கேள்வி குறித்து அந்தக் காலத்தில் திண்ணைகளில் பட்டிமன்றமே நடக்கும். கடவுள் நம்பிக்கை என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விஷயம் என்றாலும் லட்சக்கணக் கானோர் பின்பற்றக் கூடிய ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கை விவாதிக்கப்படுவது இயல்புதான். அதுவும் எம்.ஜி.ஆர் திமுகவில் இருந்தவர் என்னும்போது இந்தக் கேள்வியின் வீரியம் கூடியது.


திமுக ஒரு 'நாத்திகக் கட்சி' என்று அந்தக் காலத்தில் மட்டுமல்ல; இப்போதும் கூட தவறான கருத்து சிலரிடம் இருக்கிறது. பேரறிஞர் அண்ணாவைப் பொறுத்தவரை தனிப்பட்ட முறையில் அவர் நாத்திகர். ஆனால், அவர் தொடங்கிய திமுக 'நாத்திகக் கட்சி' என்று அவர் அறிவித்தது இல்லை. 1953ல் தந்தை பெரியார் 'பிள்ளையார்

# எம்.ஜி.ஆர். ஆத்திகரா? நாத்திகரா?

சிலை உடைப்பு போராட்டம்' அறிவித்தார். அப்போது, அந்தப் போராட்டம் குறித்து அண்ணாவிடம் கேட்கப்பட்டது. அவர் அதற்கு "நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம். பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம்" என்று பதிலளித்தார்.

எம்.ஜி.ஆர் ஆரம்பத்தில் காங்கிரஸ் ஆதரவாளராக இருந்தபோது கழுத்தில் மணிமாலையுடன் நெற்றியில் திருநீறு அணிந்து இருப்பார். அண்ணாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு திமுகவில் சேர்ந்த பிறகு மதச் சின்னங்களை அணிவதில்லை. மேலும், திமுகவில் சேர்ந்த பிறகு புராண, பக்திப் படங்களில் நடிப்பதை தவிர்த்தார். இதனால், தேடி வந்த பல பட வாய்ப்புகளை நிராகரித்தார்

ஆண்டவனின் பெயரால் மூடநம்பிக் கையைப் பரப்புவதும் மக்களை ஏமாற்றுவது மான காரியங்கள் கூடாது என்றுதான் எம்.ஜி.ஆர் கருதினாரே தவிர, கடவுள் மறுப்பு கொள்கையை அவர் பிரச்சாரம் செய்தது இல்லை. 'கோயில் கூடாது என்பது அல்ல; கோயில் கொடியவர்களின் கூடாரமாக மாறிவிடக் கூடாது' என்பதுதானே திராவிட இயக்கத்தின் நோக்கம்.


சிவன் வேடத்தில் எம்.ஜி.ஆர். காட்சியளிப்பது 'உழைக்கும் கரங்கள்' படத்துக்காக.


எம்.ஜி.ஆர். நடிப்பதாக இருந்த 'ஏசுநாதர்' படம் வெளிவரவில்லை. அந்தப் படத்தில் ஏசுபிரான் வேடத்தில் எம்.ஜி.ஆர். தோன்றுகிறார்.


வெளிவராத 'வெள்ளிக்கிழமை' படத்தில் எம்.ஜி.ஆர்.

எந்த மதத்தினரின் நம்பிக்கைகளை யும் எம்.ஜி.ஆர் புண்படுத்தியதும் இல்லை. தனக்கு கடவுள் நம்பிக்கை உண்டு என்பதை அவர் மறுத்ததும் இல்லை. நாடகக் கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தபோது திருப்பதி சென்று வெங்கடாஜலபதியை தரிசித்திருக்கிறார். 'மர்மயோகி' படம் வெளியானபோது இரண்டாவது முறையாக திருப்பதி போய்வந்ததை எம்.ஜி.ஆரே கூறியிருக்கிறார்.

துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்குப் பின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது, அவரது நண்பரும் தீவிர முருக பக்தருமான சாண்டோ சின்னப்பா தேவர், தினமும் கோயிலில் எம்.ஜி.ஆர் பெயருக்கு அர்ச்சனை செய்து மருத்துவமனை சென்று பிரசாதம் கொடுப்பார்.

பின்னர், குணமாகி 'விவசாயி' படப் பிடிப்பின்போது மருதமலை சென்று முருகன் கோயிலில் சின்னப்பா தேவரால் அமைக்கப்பட்டிருந்த மின் விளக்கு வசதியையும் எம்.ஜி.ஆர் தொடங்கி வைத்தார். 'தனிப்பிறவி' படத்தில் ஜெயலலிதா பாடும் பாடல் காட்சியில் எம்.ஜி.ஆர் முருகன் வேடத்தில் தோன்றுவார். அது ஜெயலலிதா காணும் கனவுக் காட்சி. 'உழைக்கும் கரங்கள்' படத்தில் சிலை திருட்டை தடுப்பதற்காக சிவன் போல வேடம் அணிந்து வந்து வில்லன்களை விரட்டுவார்.

'பொம்மை' இதழின் இரண்டாவது ஆண்டு மலருக்காக, எம்.ஜி.ஆரை ஜெயலலிதா பேட்டி கண்டார். அந்தப் பேட்டியில் "உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?" என்ற ஜெயலலிதா வின் கேள்விக்கு கொஞ் சமும் தயங்காமல் "நிச்சயமாக உண்டு" என்று எம்.ஜி.ஆர் பதி லளித்தார். தனது கடவுள் நம்பிக்கையை அவர் மூடி மறைத்ததே இல்லை. அதற்காக, பரிவாரங்கள் புடைசூழ, சகல மரியாதைகளுடன் ஆர்ப்பாட்டமாக அவர் கோயிலுக்குச் சென்றதில்லை.

பின்னாளில், படப்பிடிப்புக்காக கர்நாடகா சென்றிருந்த போது, இயக்குநர் சங்கர் அவரை கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அதன் பிறகு பலமுறை மூகாம்பிகை கோயிலுக்குப் போய் தரிசித்திருக்கிறார். "மூகாம்பிகை வடிவில் என் தாயை பார்க்கிறேன்" என்று எம்.ஜி.ஆர் கூறியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர் நடித்த 'நம்நாடு' படத்துக்காக 'ஆனந்த விகடன்' இதழில் அவரது சிறப்பு பேட்டி வெளியானது. அந்தப் பேட்டியில் எம்.ஜி.ஆரின் கருத்துகள் கடவுள் நம்பிக்கை பற்றிய அவரது தெளிவான சிந்தனையைக் காட்டியது.

> தனது தலைவரான அண்ணாவுக்கு தலைவராக விளங்கிய தந்தை பெரியார் மீது எம்.ஜி.ஆருக்கு மிகுந்த மதிப்பு உண்டு. 197879ல் எம்.ஜி.ஆர் ஆட்சியில் பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பெரியார் நினைவுத் தூண் எழுப்பப்பட்டது.
>
> பெரியாரின் பொன்மொழிகள் நூல் வடிவில் கொண்டுவரப்பட்டன. அவரது வாழ்க்கை வரலாறு மாவட்ட தலைநகரங்களில் ஒளிஒலி காட்சியாக நடத்தப்பட்டது. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை எம்.ஜி.ஆர் அமல்படுத்தினார். 1979ம் ஆண்டு பெரியார் பிறந்த நாளில் ஈரோட்டை தலைநகராகக் கொண்டு பெரியார் மாவட்டத்தை உருவாக்கினார். இருவருக்குமே டிசம்பர் 24ம் திகதிதான் நினைவு நாள்!

**"ஒரு நல்ல துறவியை, பற்றில்லாத மனத்தினரை, பிறருக்காக வாழ்வதே மாந்தர் கடமை என்ற தத்துவத்தின் ஒட்டுமொத்த உருவமாக காட்சி யளித்த ஒரு பெரியவரை நான் கண்டேன்"**

அந்தப் பேட்டியில், "பக்தி பரிசுத்தமானது. பக்தன் பரிசுத்தமானவன். முன்பெல்லாம் மக்கள் கடவுளை தங்கள் மனதில் வைத்திருந்தார்கள். இப்போதோ, கடவுள் கோயில்களில் இருப்பதாகத்தான் நினைக்கி றார்கள். இதனால்தான் பிரச்சினைகளே வந்தன" என்று எம்.ஜி.ஆர் கூறியிருந்தார்.

1977ம் ஆண்டு எம்.ஜி.ஆர் முதல்வரானதும் வித்தியாசமான முறையில், 'பொம்மை' இதழுக்காக அவரை நடிகை லதா பேட்டி கண்டார். "காஞ்சிப் பெரியவரை சமீபத்தில் தரிசித்துப் பேசினீர்களா?" என்று லதா ஒரு கேள்வி கேட்டார்.

அதற்கு பதிலளித்த எம்.ஜி.ஆர், "ஒரு நல்ல துறவியை, பற்றில்லாத மனத்தினரை, பிறருக்காக வாழ்வதே மாந்தர் கடமை என்ற தத்துவத்தின் ஒட்டுமொத்த உருவமாக காட்சி யளித்த ஒரு பெரியவரை நான் கண்டேன்" என்று பரமாச்சாரியாரைப் பற்றி கூறினார்.

எம்.ஜி.ஆர் ஒருபோதும் தன்னை நாத்திகராகக் காட்டிக் கொண்டது இல்லை.

எல்லோரையும் தனது சொந்தங்களாகக் கருதிய எம்.ஜி.ஆர் நடித்த 'தொழிலாளி' படத்தில் அவர் பாடி நடித்த அருமையான பாடல் இது...

'ஆண்டவன் உலகத்தின் முதலாளி
அவனுக்கு நானொரு தொழிலாளி
அன்னை உலகின் மடியின் மேலே
அனைவரும் எனது கூட்டாளி...'


தந்தை பெரியாருடன் எம்.ஜி.ஆர்.

தொடரும்...




# சத்தமின்றி மோசடி செய்யப்படுகின்றதா கிராம சங்கங்களின் நிதி

வன்னிமது

இலங்கையில் உள்நாட்டு போரின் போதும் அதன் பின்னரும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் இடம்பெயர்ந்த மக்களிற்காக வீட்டுத்திட்டம், கிராமிய அமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்தல் செயற்பாடுகளும் சுழற்சி முறை கடன் திட்டம் என பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்திருந்தது. இருந்த போதும் கிராம அபிவிருத்தி சங்கங்கள், பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் மூலம் சுழற்சி முறைக்கடன் திட்டச்செயற்பாடுகள் கிராமம், மக்களின் வளர்ச்சிக்கு உதவாமல் அந்நிதி சிலரினால் கையாடல் செய்யப்பட்டு போகின்ற நிலையே பெரும்பாலும் ஏற்படுகின்றது. இது போன்ற செயற்பாடே வவுனியா மரைக்காரம்பளை கிராம சேவகர் பிரிவின் கீழ் உள்ள கணேசபுரம் மேற்கு பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கத்தில் இடம்பெற்றுள்ளது.

பொதுவாக கடன் என்பது எல்லோரின் வாழ்விலும் பின்னி பிணைந்துள்ளது குறிப்பாக நிதி நிறுவனங்களில் 12 வீதம், 14 வீதம் என அதிகமான வட்டிக்கு கிழமை கடன், மாத கடன் என கடன்களை பெற்று திருப்பி செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் கூட இடம்பெறுகின்றது. குறிப்பாக புளியங்குளத்தில் நிதி நிறுவனம் ஒன்றின் கடன்கட்ட முடியாமல் குடும்ப பெண், பிள்ளை இருவரும் கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டனர். இப்படி இருக்கும் போது அதிக மக்களை கொண்ட கணேசபுரம் கிராமம் நியாப் திட்டத்தின் போது கடந்த 2007ம் ஆண்டு இரண்டாக பிரிக்கப்பட்டு வவுனியா பிரதேச செயலகத்தின் கீழ் பதியப்பட்டது. அதன் அடிப்படையில் நியாப் திட்டத்தின் மூலம் கணேசபுரம் பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்களிற்கு நிதி வழங்கப்பட்டது. இதில் கணேசபுரம் மேற்கு பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கத்திற்கு 797,000 ரூபாய் பணம் வழங்கப்பட்டது.

இந்நிதியினை கொண்டு 30 தொடக்கம் 40 அங்கத்தவர்களை கொண்ட இச்சங்கத்தின் மூலம் 10,000 தொடக்கம் 30,000 வரையான ஒரு வீத குறைந்து செல்லும் மாத வட்டியின் அடிப்படையில் கடன் வழங்கப்பட்டது. இவ்வாறான தொடர் செயற்பாட்டின் மூலம் முதல் மற்றும் வட்டி, அங்கத்துவ பணம் (120 ரூபாய்) உட்பட 1,500,000 ரூபாய் வரையில் பணம் சேர்ந்துள்ளது. (முறையான கணக்காய்வு நடக்காதபடியால் தொகையை அறுதியிட முடியவில்லை. 10-15 இலட்சத்திற்கு இடையில் சரியான தொகை இருக்கலாமென கூறப்படுகிறது) இவ்வாறு சேர்ந்த பணத்தினை பொருளாளர் கையாடி விட்டார் என்பதே இப்போதைய சர்ச்சை.

இதில் பல பிரச்சனைகள் உள்ளது முக்கியமாக குறிப்பிட்ட 08 வருடங்களில் இவ்வளவு பணம் இச்சங்கத்திற்கு சேர்ந்ததா, சங்கம் சார் செலவுகள் நடைபெற்றதா, இவ்வளவு நிதி கையாடப்பட்டிருந்தால் குறித்த சங்க நிர்வாக உறுப்பினர்கள், இச்சங்கங்களை கண்காணிக்கும் கிராமிய அபிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர் என்ன செய்தனர் என்ற கேள்வி எழுகின்றது.

இப்பிரச்சனை எழ முக்கிய காரணமாக அதிகளவான காலங்கள் ஒருவரே இச்சங்கத்திற்கு பொருளாளராக இருந்ததே. 2007ம் ஆண்டு சங்கம் ஆரம்பிக்கும் போது இருந்த பொருளாளரின் பின் குறித்த பொருளாளர் மூன்று வருடங்கள் செயற்பட்ட பின்னர் சங்க கணக்குகளில் எதுவித வழுக்களும் இன்றி புதிதாக தெரிவு செய்யப்பட்ட பொருளாளருக்கு கையளித்துள்ளார். அதன் பின்னர் சில காலங்களின் பின்னர் மீண்டும் இவ் மோசடி பிரச்சனை வரும் வரை குறித்த பொருளாளரே இச்சங்கத்தின் பொருளாளராக செயற்பட்டுள்ளார்.

சங்கங்களின் கூட்டத்தின் போது தான் கணக்கறிக்கை வாசிக்கப்பட்டு திருத்தங்கள் திருத்தப்படும். ஆனால் இங்கு கடன் வழங்குவதற்கு மட்டுமே கூட்டங்கள் வைக்கப்பட்டன என்பது இங்கே முக்கியமாக கவனிக்கபட வேண்டிய விடயமாகும். அத்துடன் கடந்த மூன்று வருடங்களாக இச்சங்க கணக்கு வழக்குகள் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் சரிவர ஆராய்படாமல் இருந்ததும், நிர்வாக மற்றும் கிராம சேவையாளரின் அசமந்த போக்குகளும், நீண்ட காலமாக ஒருவரே பொருளாளராக இருந்தமையும் இந்நிலைமைக்கு முக்கியமாகியுள்ளது.

அத்துடன் இவ்வளவு காலத்தின் பின்னர் தற்போது இப்பிரச்சனை வருவதற்கு தற்போதைய தலைவர் மற்றும் பொருளாளர்களிடையே உள்ள தனிப்பட்ட பிரச்சனைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதன் அடிப்படையில் இவ் நிதி இழப்பு காரணமாக குறித்த பொருளாளரினால் 50,000 ரூபாய் பணம் பிரதேச செயலாளரின் முன் சங்கத்திற்கு கட்டியதுடன் மாதம் 10,000 ரூபாய் படி கட்டுவதாகவும் எழுத்து மூலமாக வழங்கியுள்ளார்.

மேலும் வவுனியா பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 42 கிராம சேவையாளர் பிரிவில் 163 கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் 130 பெண்கள் கிராமிய அபிவிருத்தி சங்கங்களும் உள்ளன இவற்றினை கண்காணிப்பதற்கு ஒரே ஒரு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் மாத்திரமே உள்ளார். என்பது இங்கே கவனிக்க வேண்டிய விடயமாகும். முறையான கண்காணிப்பு வசதியை ஏற்படுத்துவதன் மூலமே பணம் துஸ்பிரயோகம் செய்யப்படுவதை தவிர்க்க முடியும்.

குறித்த 1,500,000 பணம் இழக்கப்பட்டமையானது நிதி கையாளல் தொடர்பான சரியான கல்வியறிவின்மையும் மக்கள் சங்கங்கள் தொடர்பான விழிப்புனர்வு இல்லாமையுமே ஆகும்.

---



# உங்கள் போனையும் கொம்ப்யூட்டர் ஆக்கலாம்!

ஒரு செய்தியை பார்த்துவிட்டு நண்பனிடம் சொல்லலாம் என்று நாம் நினைக்கும்போதே, சில நொடிகளிலேயே அது ஊரே அறிந்த பழைய செய்தியாகி விடுகிறது. டிஜிட்டல் பாய்ச்சல் அப்படி. போன் கேபிள், கொம்ப்யூட்டர் கேபிள் என தனித்தனியாக இணைத்து ஒரு விஷயத்தை இணையத்தில் ஏற்றுவதற்குள் உலகம் எங்கேயோ போய்விடுகிறது.

அந்த துயரை துடைக்கிறது இந்த ஓல் இன் ஓல் 1 கேபிள்ஸ். அமெரிக்காவின் கலிஃபோர்னியாவிலுள்ள Itiwant என்ற நிறுவனம், 1கேபிள்ஸ் என்ற சூப்பர் கேபிளை கண்டுபிடித்துள்ளனர். இதில் உள்ள ஸ்பெஷல், இதன் மூலம் உங்கள் ஸ்மார்ட் போன்களை பவர்பாங்கிலிருந்து, கொம்ப்யூட்டர் கீபோர்ட், கமரா, கேமிங் ஜோய்ஸ்டிக், பிரிண்டர் உட்பட பல பொருட்களோடு இணைத்து விஷயங்களை உடனே பகிரலாம். சுருக்கமாக உங்கள் போன்தான் இனி உங்களது புதிய கொம்ப்யூட்டர்.

1கேபிள்ஸ் இன் சிறப்பே இதன் கனெக்டர்கள்தான். இதனை மேல் நோக்கி நகர்த்தினால் யுஎஸ்பி போர்ட் மூலம் பொருட்களை இணைக்கலாம். இதனை பின்னால் உள்தள்ளிய வகையிலும் பல பொருட்களினை இணைக்க முடிவது இதன் அமர்க்கள பிளஸ் பொயிண்ட். டிஎஸ்எல்ஆர் கமராக்களில் ரசனையோடு கிளிக் செய்த அத்தனை படங்களையும் போனோடு 5 நிமிடங்களில் இணைத்து பேஸ்புக்கில் போட்டு ஒளி ஓவியர் என புகழோடு லைக்ஸ் வாங்குவதும் இனி ஈஸிதான்.

ரப்லட் வைத்திருக்கிறீர்கள், அதுவே மினி கொம்ப்யூட்டர் என்பதால் அதில் டைப் செய்ய கீபோர்டையும் எளிதாக 1கேபிள்ஸ் மூலம் இணைத்து ஒன் த வேயில் வேலை பார்த்து "ஐஆம் பிஸி" என நிஜம் சொல்லலாம். அதுபோலவே போனிலிருந்து படங்களை நொடியில் பிரிண்டர்களுக்கு அனுப்பி நமக்குள்ளிருக்கும் அட்டகாச கலைஞனை தண்ணீர் தெளித்து எழுப்பலாம்.

இதில் ஏ1 டைப் சி மொபைல்போன்களுக்கும், மக் கொம்ப்யூட்டர்களுக்கும், ஏ2 கனெக்டர்கள் ஐபாட், ஐபோன்களை இணைக்கவும், ஏ3 மைக்ரோ யூஎஸ்பி கனெக்டர்களில் அப்பிள் நிறுவன கருவிகளையும், பிறவற்றையும் எளிதில் இணைத்து மகிழலாம். நைலோன் வயர்கள் என்பதால் எதையும் தாங்கும் வலிமையுடன் டேட்டாவை அனுப்பும்போதும் சிறுத்தை பாய்ச்சல் காட்டுகிறது. இதில் உள்ள கேபிள்களில் உங்களிடம் உள்ள கருவிகளுக்கு ஏற்ப கனெக்டர்களை வாங்கி பயன்பெறலாம்.

1கேபிள்ஸ் கனெக்டர்களை தனியாக வாங்கினால் அண்ணளவாக 2500 ரூபாய் வரலாம். மூன்று கனெக்டர்களையும் சேர்த்து வாங்கினால் 6000 ரூபாய் ஆகலாம்.

## புத்தாண்டு ராசிபலன் - 2017

கை நிறைய காசு
பை நிறைய நோட்டு



**மேஷம்**
( அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் )

60 / 100

செவ்வாயை ஆட்சி நாயகனாக கொண்ட
மேஷ ராசி அன்பர்களே!

## புத்தாண்டு ராசிபலன் - 2017

குருபகவான் பார்க்கிறார்
குறையனைத்தும் தீர்க்கிறார்



**ரிஷபம்**
( கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 )

65 / 100

அறிவு பூர்வமாக செயல்பட்டு வெற்றி காணும்
ரிஷப ராசி அன்பர்களே!

# உங்கள் புத்தாண்டு பலன் எப்படி?

**செவ்வாயை ஆட்சி நாயகனாக கொண்ட மேஷ ராசி அன்பர்களே!**

ராசிநாதன் செவ்வாய் சாதகமாக உள்ள நிலையில் புதிய ஆண்டு மலர்கிறது. இந்த ஆண்டு ஜன.16ல் குருபகவான் 7ம் இடத்திற்கு அதிச்சாரமாக செல்வது சிறப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சுபநிகழ்ச்சி திட்டமிட்டபடி நிறைவேறும். செல்வாக்கு மேம்படும். கை நிறைய காசு... பை நிறைய நோட்டு என்ற நிலையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தேவை பூர்த்தியாகும். ராகு பகவான் 5ம் இடமான சிம்மத்தில் இருக்கிறார். ஜூலை 26ல் இடம் பெயர்ந்து கடகத்திற்கு வருகிறார். இதுவும் சிறப்பான இடம் அல்ல. குடும்ப பிரச்னைகளால் மனக்குழப்பம் ஏற்படலாம். கேது தற்போது 11ம் இடமான கும்பத்தில் உள்ளார். பொருளாதார வளம் மேம்படும். ஜூலை 26ல் அவர் 10ம் இடமான மகரத்திற்கு செல்கிறார். இதன் பின் நன்மை உண்டாகாது. சனி இப்போது 8ல் இருக்கிறார். இதனால் சிலருக்கு ஊர் விட்டு ஊர் செல்லும் நிலை உருவாகலாம். சனி ஏப்.10 முதல் ஓக.6 வரை வக்கிரம் அடைவதால் கெடுபலன் உண்டாகாது. டிச.18ல் தனுசு ராசிக்கு மாறுவதால் முயற்சிகளில் தடை குறுக்கிடலாம். மேற்கண்ட நிலையில் இருந்து ஆண்டுக்கான விரிவான பலனைக் காண்போம்.

குடும்பத்தில் இருந்த பின்தங்கிய நிலை மறையும். கணவன், மனைவி இடையே அன்பு மேம்படும். புதிய உறவினர்களால் நன்மை ஏற்படும். புதிய வீடு, சொத்து வாங்க யோகம்உண்டாகும். புதுமணத் தம்பதிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

தொழில்,வியாபாரம்:தொழிலதிபர்களுக்கு லாபம் அதிகரிக்கும். புதிய வியாபாரத்தில் ஈடுபட வாய்ப்புண்டாகும். வியாபாரத்தை விரிவுப்படுத்த ஏப்.10க்கு பிறகு நல்ல காலம். மறைமுகப் போட்டி குறுக்கிட்டாலும் வளர்ச்சிக்கு குறைவிருக்காது.

**பணியாளர்கள்:** கடந்த காலத்தில் இருந்த மந்த நிலை மறையும். படித்து முடித்தவர்களுக்கு அதிக சம்பளத்தில் வேலை கிடைக்கும். மார்ச்10க்கு பிறகு சிலர் விரும்பிய பணி, இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். ஓக.31க்கு பிறகு தனியார் துறையில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்கள்.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு வருமானம் காண்பர். ரசிகர் மத்தியில் புகழ், பாராட்டு வரும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை சற்று பொறுமை காக்கவும். அதன் பிறகு எதிர்பார்ப்பு விரைவில் நிறைவேறும்.

**அரசியல்வாதிகள்:** தொண்டர் ஆதரவுடன் முன்னேற்றம் காண்பர். அரசியல் ரீதியாக அடிக்கடி பயணம் மேற்கொள்வர். பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணி தொழில் புரிவோர் சிறந்த நிலை பெறுவர்.

**மாணவர்கள்:** மாணவர்களுக்கு வெற்றி கிட்டும். பரீட்சையில் நல்ல பெறுபேறு பெறுவர். சிலர் வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்பை பெறுவர்.

**விவசாயிகள்:** எதிர்பார்த்ததை விட விளைச்சல் அதிகரிக்கும். சிலர் நவீன கருவிகளைப் பயன்படுத்தி முன்னேற்றம் காண்பர். கால்நடை வளர்ப்பின் மூலம் வருமானம் பெருகும். புதிய சொத்து வாங்க யோகமுண்டாகும். ஜூலை 26க்கு பிறகு அதிகமாக உழைக்க வேண்டியதிருக்கும்.

**பெண்கள்:** பிள்ளைகளின் செயல்பாடு பெருமை கிடைக்கும். பிறந்த வீட்டிலிருந்து பொன், பொருள் வந்து சேரும். வேலை செய்யும் பெண்கள் வளர்ச்சிநிலை காண்பர். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை அதிகமாக உழைக்க வேண்டியது இருக்கும். ஆனாலும் திறமைக்கு ஏற்ற கௌரவம் கிடைக்கும்.

**பரிகாரம்:** சனிக்கிழமையில் பெருமாள் கோவிலுக்கு செல்லுங்கள். சனிபகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றுங்கள். அனுமனுக்கு துளசிமாலை சாத்தி வழிபடுங்கள். ராகு காலத்தில் பைரவர் பூஜை செய்யலாம். துர்க்கை அம்மனுக்கு எலுமிச்சை பழ தீபமேற்றி வழிபடுங்கள்.

**அறிவு பூர்வமாக செயல்பட்டு வெற்றி காணும் ரிஷப ராசி அன்பர்களே!**

குரு பகவான் சாதகமாக இருக்கும் நிலையில் புதிய ஆண்டு தொடங்குகிறது. குடும்பம், தொழிலில் நல்ல வளர்ச்சியை அடைந்திருப்பீர்கள். ஆனால், ஜன.16ல் குரு பகவான் உங்கள் ராசிக்கு 5ல் இருந்து 6ம் இடத்திற்கு அதிசாரமாக செல்கிறார். இதனால் உடல்நலக்குறைவு, குடும்ப பிரச்னை ஏற்படலாம். ஆனாலும் குருவின் சுப பார்வை பலத்தால் குறையனைத்தும் வந்த வேகத்தில் மறைந்துவிடும்.

மார்ச் 10 முதல் ஓக.31 வரை வக்ரம் அடைவதால் நன்மை மேலோங்கும். ராகு 4ம் இடமான சிம்மத்தில் இருப்பதால் உறவினருடன் கருத்துவேறுபாடு ஏற்படலாம். ஆனால், ஜூலை 26ல் ராகு 3ம் இடமான கடகத்திற்கு வந்து நன்மை தர உள்ளார். பொருளாதார வளம் மேம்படும். கேது 10ம் இடமான கும்பத்தில் உள்ளதால் உடல்நலக் குறைவை தந்திருப்பார். அவர் ஜூலை26ல் 9ம் இடமான மகரத்திற்கு சென்றபின் உடல்நிலை குணம் அடையும். அதே நேரம் முயற்சியில் தடை குறுக்கிடலாம். சனி பகவான் 7ம் இடமான விருச்சிகத்தில் இருப்பதால் வீண் அலைச்சல், மனக்கலக்கம் ஏற்படலாம். ஏப்.10 முதல் ஓக.6 வரை சனி வக்ரம் அடைவதால் கெடுபலன் தரமாட்டார். அவர் டிச.18ல் விருச்சிகத்தில் இருந்து தனுசு ராசிக்கு மாறுகிறார். இதுவும் சிறப்பான இடம் அல்ல. அஷ்டமத்து சனி காலம் என்பதால் முயற்சியில் தடைகள் உருவாகலாம். மேற்கண்ட நிலையில் இருந்து விரிவான பலனைக் காணலாம்.

ஜூலை 26க்கு பிறகு ராகுவின் பலத்தால் பொருளாதார வளம் சிறக்கும். கணவன், மனைவி இடையே அன்பு நீடிக்கும். வீடு, மனை வாங்கும் முயற்சி தள்ளிப் போகலாம். தடைப்பட்ட திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் மார்ச் 10க்குப் பிறகு கைகூட வாய்ப்புண்டாகும்.

**தொழில், வியாபாரம்:** முயற்சிக்கேற்ப முன்னேற்றம் உண்டாகும். கேதுவால் போட்டியாளர்களின் இடையூறு அவ்வப்போது தலை தூக்கலாம். ஜூலை26க்கு பிறகு லாபம் படிப்படியாக உயரும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். ராகு பலமாக இருப்பதால் பண விஷயத்தில் சிரமம் உண்டாகாது.

**பணியாளர்கள்:** பொறுப்புகளை யாரையும் நம்பி ஒப்படைக்க வேண்டாம். கோரிக்கைகளை அதிக முயற்சி எடுத்தே நிறைவேற்ற வேண்டியதிருக்கும். மார்ச் மாதத்தில் இருந்து நிலைமை சீராகும்.

**கலைஞர்கள்:** வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். மார்ச் 10 முதல் ஓக.31 வரை புதிய ஒப்பந்தம் தங்கு தடையின்றி கிடைக்கும். திறமைக்கு ஏற்ப அங்கீகாரம் கிடைக்கும்.

**அரசியல்வாதிகள்:** எதிர்பார்த்த பதவி கிடைக்க சற்று முயற்சி எடுக்க வேண்டியதிருக்கும். ஆனால் பணப்புழக்கத்தில் குறை இருக்காது.


**மாணவர்கள்:** ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்று நடப்பது நல்லது. மார்ச் முதல் ஓகஸ்ட் வரை கல்வி வளர்ச்சி சிறப்பானதாக அமையும். போட்டியில் பங்கேற்று வெற்றி கிடைக்கப் பெறலாம்.

**விவசாயிகள்:** புதிய சொத்து வாங்குவதில் தாமதம் ஏற்படலாம். ஜூலை26க்கு பிறகு நவீன வேளாண்மையை கையாண்டு நல்ல வருவாய் காணலாம்.

**பெண்கள்:** வாழ்வில் நல்ல முன்னேற்றம் காண்பர். புத்தாடை அணிகலன்கள் கிடைக்கும். மார்ச் முதல் ஓகஸ்ட் வரை வேலைக்குச் செல்லும் பெண்கள் வளர்ச்சி நிலை பெறுவர். கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்பு பெறுவர்.

**பரிகாரம்:** கேதுவுக்கு அர்ச்சனை செய்யுங்கள். துர்க்கை வழிபாட்டை ராகு காலத்தில் மேற்கொள்ளுங்கள். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்திக்கு வில்வமாலை சாத்தி அர்ச்சனை செய்யுங்கள். ஆஞ்சநேயரை சனிக்கிழமையில் வழிபடுங்கள். மாணவர்களின் கல்விச் செலவுக்கு உதவி செய்யுங்கள்.

(தொடரும்)



# நினைவிடத்தை காவல் காக்கும் ஜெயலலிதா ஆவி?

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆவி தனது நினைவிடத்தை காவல் காத்து வருவதாக சமூக வலைதளங்களில் ஒரு வதந்தி வைரலாகி வருகிறது.

தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா கடந்த 5ம் தேதி மரணம் அடைந்தார். இதனையடுத்து அவருடைய உடல் எம்ஜியார் நினைவிட வாளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் மரணம் மர்மானது என அவ்வப்போது இணையத்தில் தகவல்கள் வெளியாகி கொண்டே இருகிறது.

மேலும் ஜெ., உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட போது அவருடைய ஆவி போன்ற உருவம் ஒன்று அந்த நினைவிடத்தில் நிற்பது போன்ற புகைப்படங்கள் ஒன்று சமூக வலைதளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. ஜெ.,ம்யின் நினைவிடத்தில் அழுக்குரல் கேட்பதாக மற்றொரு வதந்தியும் பரவலாக பரவியது.


இந்தநிலையில் வதந்தி ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. வர்தா புயலின் போது சென்னையே பெரும் பிரச்சனைக்குள்ளான நிலையில் ஜெயலலிதா நினைவிட மேற்கூரைக்கு எந்த வித பாதிப்பும் இல்லை.ஜெயலலிதாவின் ஆவி தான் தனது நினைவிடத்தை காப்பதாகவும் அதனால் தான் நினைவிடக் கூரைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று அந்த வதந்தி தகவலில் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேலும் ஜெ.,வுக்கு முறையாக இறுதி சடங்குகள் செய்யப்பட்டவில்லை என்றும் அதனால் தான் அவரது ஆவி, நினைவிடம், போயஸ் இல்லம் போன்றவற்றில் சுற்றி வருவதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளது.

- ஒரு தம்பதிகளுக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பாக கணவரின் ஜாதகத்திற்கே வலிமை அதிகம். ஆனால் குழந்தைகள் பிறந்த பின்னர் அந்தக் குழந்தைகளின் ஜாதகமே பிரதானமாக வேலை செய்யும். இதில் ஆண்/பெண் என்ற பேதம் இல்லை.
- பிள்ளைகள் பிறந்த பின்னர் தாய், தந்தையர் ஜாதகத்தை பார்த்துப் பலன் கூறினால் சரியாக வராது. மாறாக பிள்ளைகளின் ஜாதகத்தை வைத்தே அந்த குடும்பத்தின் நலனைப் பற்றி கணிக்க வேண்டும்.
- ஒரு சில வீடுகளில் தந்தைக்கு மிகப்பெரிய யோக தசை நடக்கும், ஆனால் அவர் மகனுக்கு மிக மோசமான தசை நடந்து கொண்டிருக்கும். தந்தையின் ஜாதகத்தை கணித்துப் பார்த்தால், அவருக்கு வீடு வாங்கும் யோகம் இருக்கும். ஆனால் மகனின் ஜாதக அமைப்பு காரணமாக அவர் இருக்கும் வீட்டை விற்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகி இருப்பார்.
- எனவே, ஒரு குடும்பத்தில் குழந்தைகள் பிறக்கும் வரை அந்தக் குடும்பத் தலைவரின் ஜாதகத்திற்கு வலிமை அதிகம். வாரிசுகள் வந்து விட்டால் அவர்களின் ஜாதகம்தான் குடும்பத்தின் ஏற்றத் தாழ்வுகளை முடிவு செய்யும். குறிப்பாக தலைப்பிள்ளையின் ஜாதகத்திற்கு வலிமை அதிகம்.

## குடும்பத்தில் யாருடைய ஜாதகத்திற்கு வலிமை அதிகம்?





**பா**டசாலை மாணவர்கள் படிப்பில் மந்த நிலையில் உள்ளவர்களை, வாஸ்து முறையில் வீடு அமைந்த நண்பர் அல்லது உறவினர் அல்லது விடுதியில் தங்கி படித்தால் முன்னேற்றம் உருவாகும். வகிக்கும் இடம் வாஸ்து குறை இருந்தால் இதுபோன்ற நிலை உருவாகும்.

**வ**சதி படைத்தவர்கள், மேல்படிப்பு படித்தவர்கள் வாஸ்துவை அலட்சியப் படுத்துகிறார்கள். ஏனென்றால் வாஸ்து குறைவினால் ஏற்படும் தீமைகளை பொருளாதார ரீதியில் சமாளிக்கும் திறன் உருவாகின்றது. உடல்,, நோய், உயிர்பலி ஆகியன இவர்களை தாக்கி நாளடைவில் சரிவு நிலை உருவாகி பொருளாதாரமற்ற நிலைக்கு ஆட்படுகின்றார்கள். நடுத்தர வர்க்கத்தினர் வாஸ்து முறையை பின்பற்றினால் வாழ்க்கையில் உயர்வு நிலை உருவாகும்.

**க**ட்டடத்திலிம், காலி இடத்திலும் வடகிழக்குப் பகுதி பாரமற்ற நிலை, சுகமான வாழ்க்கை, கட்டடத்தின் வடகிழக்குப் பகுதி அறையில் சூரிய வெளிச்சமும், நல்ல காற்றோட்டமும் இல்லையென்றால் வியாதி, வறுமை ஏற்படும். தளத்தின் மேற்பகுதியில் (தென்மேற்கு) தண்ணீர் தொட்டி அமைப்பு நன்மை தரும்.

**மே**ல்தளத்திலிருந்து கீழ்பாகத்தில் அறையின் காற்று வெளியே செல்வதற்கு அகலம் குறைந்து நீளமான அமைப்பில் தளத்தின் கீழ்பகுதியில் துவாரம் வைத்துக் கொள்ளவும். தெற்மேற்கு, தெற்கு, மேற்கு அறை பகுதிகளில் அமைக்கக்கூடாது. கிழக்கு, வடக்கு, வடகிழக்கு அறையில் அமைத்துக் கொள்ளலாம்.

# வீடு

## சில வாஸ்து தகவல்கள்

**கா**லையில் படுக்கை அறையில் இருந்து எழும் பொழுது சிலர் உள்ளங்கை பார்ப்பர். சிலர் கடவுள் படத்தைப் பார்த்தைப் பார்த்து எழுவர். சிலர் கண்ணாடி பார்ப்பார்கள். இந்த முறையை விடுத்து எழுந்தவுடன் பசுமை நிறைந்த இயற்கை காட்சிகள் இணைந்த படம், நீர்வீழ்ச்சி இணைந்த படம் இவற்றைப் பார்த்து எழுவது நன்மை பயக்கும்.

**தீ**ராத வழக்கு, சண்டை, வீண் பிரச்சனைகள், உறவினர்கள் பகை, குழந்தைகள் ஆரோக்கியமற்ற நிலை, படிப்பு மந்தம், தீராத வியாதி, கணவன் மனைவி பிரிதல், குடிப்பழக்கம் போன்றவர்களின் குடியிருக்கும் வீட்டை வாஸ்து முறைப்படி மாற்றியமைத்தால் மாற்றுத்தன்மை உருவாகி நன்மைகள் உண்டாகும்.


**வி**ஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட கருவிகள் மூலம் உணவு தயாரித்து உட்கொள்கிறோம். இது உடலுக்கு நல்லதல்ல. மண் பாத்திரத்தில் சமைத்த உணவை சாப்பிட்டால் உடலுக்கு நன்மை தரும்

**வீ**ட்டில் முகம் பார்க்கும் கண்ணாடி முழு உருவம் தெரியும்படி கண்ணாடிகளை உள்பகுதி அறைகளில் தெற்கு சுவரோரமாகவோ, மேற்கு சுவரோரமாகவோ வைத்துக் கொள்ளலாம். கிழக்கு, வடக்கு பிரதான தலைவாயில் பகுதியில் (கிழக்கு, மேற்கு பார்த்த நிலையில்) அமைத்துக் கொள்ள வேண்டாம்.

**வீ**ட்டின் கழிவுப் பொருட்களைப் போடும் தொட்டி அமைப்பு, தென்மேற்கு பகதி, தெற்க மத்தியப் பகுதி, மேற்கு மத்திய பகுதி, வடமேற்கப் பகுதிகளில் அமைத்துக் கொள்ளலாம். வடக்கிழக்குப் பகுதி, தென்கிழக்கு பகுதி, கிழக்கு மத்தியப் பகுதி, வடக்கு மத்தியப் பகுதிகளில் அமைப்பு கூடாது.

## விநாயகருக்கு பிடித்த பூ


**வி**நாயகரை அர்ச்சிக்க உகந்த மலர் எருக்கம்பூ மலர் ஆகும். இந்த பூவை அர்க்கபுஷ்பம் என்பர். அர்க்க என்ற சமஸ்கிருத சொல்லுக்கு எருக்கு என்று பொருள். விநாயகரைப் போன்றே சூரியனுக்கும் எருக்கம்பூ உகந்தது. சூரியனுக்கு அர்க்கன் என்ற பெயரும் உண்டு. சூரியனார் கோயிலில் தலவிருட்சம் கூட எருக்கஞ்செடிதான். எருக்கம்பூ மாலையை விநாயகருக்கு அணிவிப்பதன் மூலம் விக்னங்கள் (தடைகள்) நீங்குவதோடு, சூரியனின் அருளும், ஆத்ம பலனும், ஆரோக்கியமும் நமக்குக் கிடைக்கும்.



## கண் திருஷ்டி நீங்க

**இ**ல்லாதவன் இருப்பவனை பார்த்து பெருமூச்சு விடுவதும்..ஏக்கப்பார்வை பார்ப்பதும், கண்களால் கண்டு பொறாமைப்படுவது கண்பார்வை திருஷ்டி எனப்படும்...முறைப்படி திருஷ்டி கழிப்பது எப்படியென்பதை பார்ப்போம்ஞ்

சிலர் கல் உப்பு கொஞ்சம் எடுத்து தலையை 3 முறை சுற்றி ஓடும் தண்ணீரில் போடுவார்கள். பிறந்த குழந்தைகளுக்கு ஒரு வேஷ்டி துணி சிறிது கிழித்து திரி செய்து திரியை தலை முதல் கால் வரை வலது புறம் தடவி மற்றொரு திரியை இடதுபக்கமாக தடவி அதனை சுவர் ஓரமாக வைத்து எரிய விடவும். குழந்தை அழாமல் தூங்கி விடும்.



குடும்பத்தில் இருக்கும் அனைவரின் தோஷம் நீங்க, தெரு மண் கொஞ்சம் எடுத்து கடுகு, உப்பு, மூன்று காய்ந்த மிளகாய் எல்லாம் சேர்த்து கிழக்கு பார்த்து அமர்ந்து மூன்று முறை எல்லோரையும் சுற்றி, எரியும் விறகு அடுப்பில் போட்டுவிடவேண்டும். இது கண் திருஷ்டியை போக்கும். இதை செவ்வாய் அல்லது ஞாயிற்றுக்கிழமையில் செய்வார்கள்.

நம் வீட்டிற்குள் கெட்ட சக்தி நுழையாமல் தடுக்கவும், கெட்ட எண்ணம் உடைய மனிதர்களின் தாக்கம் பாதிக்காமல் இருக்கவும், கண் திருஷ்டி விலகவும் வீட்டு வாசலில் பௌர்ணமியில் நீர் பூசணி கட்டி தொங்கவிடலாம். வளர்பிறை வெள்ளிக்கிழமையில் காலை 9 மணிக்கு கற்றாழை கட்டி தொங்கவிடலாம். வாசலுக்கு மேல் ஒரு எலுமிச்சை, ஒரு பச்சை மிளகாய் என மாற்றி மாற்றி 3 எலுமிச்சை நான்கு பச்சை மிளகாய் என கெட்டியான கயிறில் கோர்த்து தொங்கவிடலாம். செவ்வாய் கிழமையில் இதை செய்யலாம். சிலர் படிகாரக்கல், வெள்ளெருக்கு வேர், மருதாணிக்கட்டை சேர்த்தும் தொங்க விடுவர்.

மூன்று வயது குழந்தை வரை கன்னத்தில் கறுப்பு பொட்டு வைத்துவிடுவர். இதுவும் கெட்ட கண் பார்வையை தடுக்கும். நாமும் வெளியே செல்லும்போது கறுப்பு பொட்டு சிறிது வைக்கலாம். அந்த கறுப்பு பொட்டு ஹோம குண்டத்தில் எடுக்கப்பட்ட சாம்பலாக இருக்க வேண்டும். அதனை நெய்யில் கலந்து இட்டுக்கொள்ள வேண்டும். வீட்டு நிலையில் வெள்ளி தோறும் மஞ்சள் சிறிது பூசி குங்குமம் இடவேண்டும். இது நோய்கிருமிகளை அண்டாமல் பாதுகாப்பது மட்டுமில்லாமல் கண் திருஷ்டியையும் போக்கும்....

# தமிழ்செல்வனிடமும் பிடி கொடுக்காத கருணா



கருணா குழுவினர்


பீஷ்மர்

விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்வதாக கருணா உத்தியோக பூர்வமாக அறிவித்தது 2004 மார்ச்சில். அப்பொழுதுதான் உலகத்திற்கு விடயம் தெரியும். ஆனால் கருணா பிரியப்போவது பிரபாகரனிற்கு தெரிந்தது 2003 நவம்பரில்!

கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்களாக இரகசியமாக இந்த இழுபறி நீடித்தது. கருணா தனிவழியில் செல்ல முடிவெடுத்து விட்டார் என்பதை புலிகள் தெரிந்ததும், அவர்கள் தமது பாணியில் செயற்படவில்லை. மிக நிதானமாக கையாண்டார்கள். அதனால்தான் கிட்டத்தட்ட ஆறுமாதங்களாக தகவல் வெளியில் கசியாமல் இருந்தது.

கருணா தரப்பில் பிரிவிற்கான காரணமாக சொல்லப்பட்டது, யாழ்ப்பாணத்தவர்கள் கிழக்கை சேர்ந்தவர்களை சமமாக கருதுவதில்லை, போராடி சாவதற்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள், புலிகள் அமைப்பின் பொட்டம்மான், தமிழேந்தி, நடேசன் முதலானவர்கள் பாகுபாடாக நடக்கிறார்கள்,



பதுமன்

அவர்களுடன் இருக்க முடியாதென்பது.

நடேசன் புலிகளின் காவல்துறை பொறுப்பாளராக இருந்தவர். புலிகளின் காவல்துறை வடக்கில் முறையான கட்டமைப்பாக உருவாகிவிட்டது. சமாதான உடன்படிக்கை காலத்தில் கிழக்கிற்கும் விஸ்தரிக்கப்பட்டது. இந்த சமயத்தில்தான் சிக்கல் ஆரம்பித்தது.

வன்னியிலேயே இயக்கம் காவல்துறை முரண்பாடு இருந்தது. சிவில் வழக்கொன்றில் இயக்க உறுப்பினர் சிக்கியிருந்தால் அவரை கைது செய்து விசாரித்து தண்டிக்க சட்டத்தில் இடமிருந்தது. இது இயக்க உறுப்பினர்களிற்கு உவப்பில்லாதது. இதன் காரணமாக வன்னியிலும் முறுகல் இருந்தது. கிழக்கில் தமது கட்டுப்பாட்டு பகுதிக்குள் நடக்கும் சகல விடயங்களையும் அந்ததந்த பகுதி பொறுப்பாளரே கையாள்வது வழக்கம். திடீரென . காவல்துறை அந்த பொறுப்பை ஏற்றது கிழக்கு போராளிகள், பொறுப்பாளர்களிற்கு பிடிக்கவில்லை. இதனால் நாளாந்தம் காவல்துறை போராளிகள் பிரச்சனை உருவெடுத்தது.

அந்த பிரச்சனைகளின் பெரும்பாலானவை சிவில் விவகாரங்களில் இயக்க உறுப்பினர்கள் சம்பந்தப்படுபவை. சம்பந்தப்பட்ட இயக்க உறுப்பினர் காவல்துறையால் கைது செய்யப்பட்டால் விவகாரம் விஸ்பரூபம் எடுத்துவிடும். துப்பாக்கிச்சூடு நடக்காத குறையாக இருதரப்பு முரண்பாடுகள் நடந்தன. சிவில் நிர்வாகத்தில் தமது பிடி இளகுவதை கருணா விரும்பவில்லை.

இரண்டு, நிதி விவகாரம். கிழக்கில் தொடர் யுத்தம், முறையான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் நிர்வாக கட்டமைப்புக்கள் முழுமையாக இருக்கவில்லை. அதிலும் குறிப்பாக நிதி விடயத்தில் கிழக்கை புலிகள் கண்டும் காணாமலும் விட்டிருந்தனர். மாதாந்த செலவிற்காக வன்னியிலிருந்து அனுப்பப்பட்ட பணத்திற்கு மேலதிகமாக, கிழக்கில் நிதி சேகரிக்கப்பட்டது. வர்த்தகர்களிடமிருந்து பெருமளவு நிதி கிழக்கில் அறிவிடப்பட்டது. வரி அறவீட்டை நிறுத்துமாறு தலைமையிடமிருந்து அறிவித்தல் அனுப்பப்பட்டு, மாதாந்த ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டபோதும் கிழக்கு வரி அறவீடு நிறுத்தப்படவில்லை.

புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தலைவர்களின் கணக்கில் சுளைசுளையாக பணமிருந்தன் இரகசியம் இதுதான்!

மாதாந்த பணத்தின் கணக்கு விபரங்களை பார்த்து கேள்வி கேட்டதுடன், கிழக்கு வரி அறவீட்டிற்கு எதிராக தமிழேந்தி செயற்பட தொடங்கினார்.

கிழக்கில் நடந்த திருகுதாளங்களை தலைமையின் காதில் உடனுக்குடன் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார் பொட்டம்மான். இதனால் நடேசன், தமிழேந்தி, பொட்டம்மானில் கருணா தரப்பிற்கு கடும் கோபமிருந்தது.


இதற்குள் “வன்னிப்புலிகள்“ என்ற சொல்லை உருவாக்கி, கிழக்கு பிரிவிற்கு தூபமிடுவதில் சில புத்திஜீவிகள் தீவிரமாக ஈடுபட்டனர். இதில் ஊடகவியலாளராக செயற்பட்ட சிவராம் முக்கியமானவர். விடுதலைப்புலிகளை பிளவுபடுத்த அவர் வெளிநாட்டு உளவு அமைப்புக்களின் தரகராக செயற்பட்டாரா என்பதும் ஆராயப்பட வேண்டியது. புலிகள் அமைப்பிலிருந்து கிழக்கு அணி பிரிந்ததற்கு எந்த தத்துவார்த்த விளக்கமும் கிடையாது. ஆனால் அந்த பிரிவிற்கு கோட்பாட்டு விளக்கம் கொடுக்க முயன்றவர்களின் முதன்மையானவர் சிவராம். அவரை புலிகள் மன்னித்தது பேராச்சரியங்களில் ஒன்று!

2003 இன் இறுதியின் பின்னர் பிரபாகரனை சந்திப்பதை தவிர்த்து வந்தார் கருணா. கருணா அதிருப்தியில் இருக்கிறார் என்பதை தெரிந்ததும், பிரபாகரன் அவரை அழைத்தார். பிரபாகரன் அவரை அழைத்ததன் நோக்கம், கருணாவுடன் பேசி பிரச்சனையை சுமுகமாக தீர்த்து கொள்ளலாம் என்றே. ஏனெனில், பிரபாகரன் பின்னர் நடந்து கொண்ட விதங்களே அதற்கு சாட்சி. எனினும், கருணா அந்த அழைப்புக்களிற்கு செவிசாய்க்கவில்லை.

கிழக்கிலிருந்த புலிகளின் போராளிகளை ஒன்று திரட்டினார். சுமார் ஆறாயிரம் போராளிகளை தனது தேனகம் முகாமை சுற்றி நிறுத்தினார். வெற்வேறு முகாம்களில் பிரிந்திருந்த போராளிகளை ஓரிடத்தில் திரட்டி வைத்திருந்ததால் பாதுகாப்பு சிக்கல்களும் எழவில்லை. காரணம் அது சமாதானகாலம். வன்னியிலிருந்து வரக்கூடிய ஆபத்துக்களை தவிர்க்கவே இந்த ஏற்பாடு.

கிழக்கில் கருணாவிற்கு அடுத்த நிலையில் இருந்த ரமேஷ், கரிகாலன், ரமணன், தாத்தா போன்றவர்கள் எல்லோரும் கருணாவை ஆதரித்தார்கள். அதனால் உள்ளக நெருக்கடிகள் எழ வாய்ப்பில்லை. அம்பாறையிலிருந்த ராமினால் பெரும் நெருக்கடிகள் கொடுக்க முடியாது என்பதை கருணா அறிந்திருந்தார்.

ஆனால் திருகோணமலை தளபதியாக இருந்த பதுமன் கருணாவிற்கு ஆதரவான போக்கிலேயே இருந்தார். பிரிவிற்கு முன்னர் பதுமனுடன் நீண்ட கலந்துரையாடல்களை கருணா நடத்தியிருக்கிறார். தன்னுடன் பிரிந்து வருமாறு பதுமனை பலமுறை கேட்டிருக்கிறார். எனினும் பதுமன் அதை ஏற்கவில்லை. அதற்காக கருணாவை கைகழுவி விடவுமில்லை. இரண்டும் கெட்டான் நிலையிலிருந்தார். கருணா பிரிந்து செல்வதை முன்கூட்டியே அறிந்திருந்தும், அதனை தலைமையிடம் சொல்லாமல் மறைத்திருந்தார் பதுமன்.



சிவராம்

கிழக்கில் கருணா மீது புலிகள் தாக்குதல் நடத்தினால் திருகோணமலையில் பதுமன் மூலம் நெருக்கடி கொடுக்கலாமென்பது கருணாவின் திட்டம். கருணாவுடனான பதுமனின் தொடர்பை நன்றாக உறுதிசெய்த பின்னர் அவரை புலிகள் கைது செய்தனர். 2003 இல் பதுமன் கைது செய்யப்பட்டு, விசாரணையின் பின் 2009 வரை வீட்டுகாவலில் வைக்கப்பட்டிருந்தார். யுத்தத்தின் இறுதியில் அவர் இராணுவத்திடம் சரணடைந்து, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் தமிழ்செல்வன் தொடர்பில் மட்டுமே கருணாவிற்கு இணக்கமான பார்வையும் ஓரளவு நெருக்கமும் இருந்தது. புலிகள் கருணாவுடன் பேச்சிற்கு முயற்சித்துக் கொண்டிருந்த சமயத்தில், தமிழ்செல்வனை அனுப்பிவைக்குமாறு கருணா தரப்பிலிருந்து கேட்கப்பட்டிருந்தது. கருணா பிரிந்து செல்வதற்கு முன்னர் இலங்கை விமானப் படையின் ஹெலிகொப்ரரில் தமிழ்செல்வன் மட்டக்களப்பிற்கு சிலநாள் சுற்றுப்பயணம் செய்திருந்தது நினைவிருக்கலாம்.

மட்டக்களப்பில் சிலநாட்கள் தங்கியிருந்த தமிழ்செல்வன் பலசுற்றுப் பேச்சுக்களை கருணாவுடன் நடத்தினார். கருணா விவகாரத்தை புலிகள் பெரிதுபடுத்தவில்லை, நடந்ததெல்லாவற்றையும் மறக்கலாம், பிரச்சனையை விட்டு இரண்டு தரப்பும் ஒன்றாகலாமென தமிழ்செல்வன் பேசிப் பார்த்தார். கருணா மசியவில்லை.

கருணாவிற்கும் குடும்பத்திற்கும் பொது மன்னிப்பு வழங்க புலிகள் தயாராக உள்ளனர். அவர் விரும்பிய நாட்டிற்கு செல்லலாம். ஒரு பெருந்தொகை பணம் வழங்கி அனுப்பி வைக்கலாம் என வாக்களித்தனர். பலனில்லை.


மாறாக சாத்தியமேயற்ற நிபந்தனையை விதித்தார். பொட்டம்மான், நடேசன், தமிழேந்தியை அமைப்பில் இருந்து நீக்க வேண்டும், தன்னுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்ய வேண்டும் என்றார்.

கருணா பிளவை சமாதானமாக தீர்க்க புலிகள் எடுத்த முயற்சி தோற்றுப் போனது. தமிழ்செல்வன் வெறும்கையுடன் திரும்பி வந்து. பிரபாகரனிடம் விடயத்தை சொன்னார். கருணாவில் உயர்ந்த அபிப்பிராயம் வைத்திருந்த பிரபாகரன் இதன் பின்னர்தான் அடுத்த ஆயுதத்தை எடுத்தார். அது சேர்ஜிக்கல் ஒப்ரேசன்.

அந்த பொறுப்பை பொட்டம்மானிடம் கொடுத்தார்!

(தொடரும்)

# இளம் வயதில் முடி உதிர்ந்தால் முதுமைத் தோற்றம் ஏற்படலாம்



நம்மில் தலை முடிப் பிரச்சினை இல்லாதவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆண், பெண் என்ற வேறுபாடு கிடையாது. பெண்களுக்கு குறிப்பாக இளம் பெண்களுக்கு தலைப் பொடுகு, பேன், இளநரை... இவை ஓயாத பிரச்சினை. ஆண்களுக்கு இவைகளை விட தலையாயப் பிரச்சினை வழுக்கை ஏற்படுதல். இளம் வயதிலேயே முடி உதிர்வதால் முதுமைத் தோற்றத்திற்கு ஆளாகுமத் நிலை.

### முடி உதிர்வது ஏன்?

முடி உதிர்வது என்றால் அதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை முதலில் ஆராய வேண்டும். முடி உதிர்வது என்பது நோயின் அளவு கோல். உடலில் ஏற்பட்டுள்ள பாதிப்புத் தான் முடி உதிர்வதின் அடிப்படைக் காரணமாகும். தவிர, அதிகமான எண்ணெய்ப் பசை எண்ணெயே இல்லாமல் முடி வறண்டு போதல், அதிகமான டென்ஷன், இப்படி சில காரணங்களும் இருக்கலாம். காரணம் அறிந்த பின்பு தான் சிகிச்சைகளை துவங்க வேண்டும்.

முடி உதிர்வதைக் கட்டுப்படுத்த மிக எளிய வழி வெறும் கைகளினால் தலைப் பகுதியில் இதமாக மசாஜ் செய்த விடுவது தான். தலையில் இறுக்கமான தொப்பி, ஹேர்பெல்ட் போன்றவற்றை அணிவதாலும் முடி உதிரலாம்.

### பொடுகுத் தொல்லையா?

தலைப் பகுதி சருமத்தில் ஏற்படும் வறட்சியின் காரணமாகவும், எண்ணெய் சுரப்பிகள் குறைந்து இறந்த செல்களின் படலங்கள் உதிர்வதாலும் பொடுகு உண்டாகும். இது தொற்றக் கூடிய பிரச்சினை வேறு. எனவே பொடுகு உள்ளவர்கள் பயன்படுத்திய சீப்பு, டவல், தலையணை உறை போன்றவற்றை பிறர் பயன்படுத்தவே கூடாது.

பொதுவாக அழகு நிலையங்களில் முடிக்கான, பொடுகு நீக்கும் சிகிச்சைகள், மசாஜ் போன்றவைகளைத் தருவார்கள். ஆனால் இந்தக் காரணங்கள் ஆராயப்பட்டு மருந்துகள் தரப்படுகின்றன.

### வழுக்கைக்கான காரணம் என்ன?

பரம்பரை தவிர, தலைப் பகுதியில் ஏற்படும் வறட்சியும,; அதனால் ஏற்படும் முடி உதிர்வை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் அலட்சிப்படுத்துவமே வழுக்கைக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

### நுனியில் முடி பிளவுபடுவது ஏன்?

உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள தன்னடையாளம் தான்

நுனியில் முடி பிளவுபடுவது. உணவு முறைகளில் மாற்றம் செய்தால் இந்தப் பிரச்சினை தீரும். இதற்கான பிரத்யோக சிகிச்சைகளும் உண்டு. அதே போல நரை வேகமாக உண்டாகவும் முடிப் பகுதியில் ஏற்படும் அதிர்வுகளும் முக்கிய காரணம்.

### முடி பராமரிப்புக்கு எளிய வழிகள்

அதிகமாகவும் எண்ணெய் தடவவும் கூடாது, அதே போல எண்ணெய் தடவாமலும் இருக்கவும் கூடாது. நேரம் கிடைக்கும் போது தலையை மென்மையாக மசாஜ் செய்து கொள்வது நல்லது. இதனால் இரத்த ஓட்டம் சீராகும். முடி உதிர்வதும் நிற்கும்.

குளிர்ந்த நீரில் தலையை அலசுவது நல்லது. ஈரமான தலையினை சீப்பினால் வாரக் கூடாது. கூடுமானவரை டிரையர் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

எண்ணெய்ப் பண்டங்கள், இனிப்புப் பொருட்களை உண்ணாமல் தவிர்ப்பது நல்லது. பொடுகு, பேன் போன்ற பாதிப்புக் களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சையை நாட வேண்டும். இது போல முடி உதிர்வு ஏற்படும் போதும் அலட்சியம் காட்டக் கூடாது. இப்படிச் செய்வது வழுக்கையை உண்டாக்கும்.


### பராமரிப்பு

சரியான பராமரிப்பு இல்லாத, உப்புத் தண்ணீரில் தலை குளிப்பது, போஷாக்கில்லாத ஆகாரம், மருந்தினால் ஏற்படும் பக்க விளைவுகள் என பல்வேறு காரணங்களால் கூந்தல் உதிர்கின்றது. கூந்தலில் அழுக்குச் சேராமல் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். இரும்புச் சத்து நிறைந்திருக்கும் உணவினை அதிகம் சாப்பிட வேண்டும்.

விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் ஆகியவற்றை சம அளவில் எடுத்து லேசாக சூடாக்கி தலையில மசாஜ் செய்து, வெந் நீரில் முழ்கிப் பிழிந்த டவலால் தலைக்கு ஒத்தடம் தர வேண்டும். பிறகு தரமான சீயாக்காயோ, ஷாம்போவோ போட்டு கூந்தலை அலச வேண்டும்.

---

# இரத்த கொதிப்பாளர்களுக்கு சில உணவு முறைகள்



நீரழிவு நோய் உள்ளவர்களுக்கு உணவு கட்டுப்பாடு எவ்வளவு இன்றியமையாததோ அது போலவே இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கு மிக மிக அவசியாமானது.

இரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்கு உயர் இரத்த அழுத்தத்தை உணவு முறையினால் எப்படி கட்டுப்படுத்தி நிறுத்துவது என்பது குறித்து பெரிய அளவில் ஆய்வு நடத்தப்பட்டு அது எப்படி சாத்தியமானது என்பதை எல்லாம் டெஸ் என்ற ஆய்வு விளக்கியுள்ளது. DASH:DIETAPPROACH-ES TO STOP HYPER TEN-SION உணவினால் இரத்தக் கொதிப்பை நிறுத்துவது. இந்த ஆய்வின் படி உணவில் முறையாகத் தவிர்க்க வேண்டியதைத் தவிர்த்து சேர்க்க வேண்டியதை சேர்த்தால் இரத்தக் கொதிப்பு குறைவதாக கண்டறியப்பட்டுள்ளது.

உணவில் அதிக கொழுப்பு தவிர்த்து, காய்கறிகள், கீரை, பழங்கள் அதிக கொழுப்பு இல்லாத பால் பொருட்களை சாப்பிடுவதனால் கல்சியமும், மக்னீசியமும், நார்ச் சத்தும் கிடைக்கின்றன. அவைகள் இரத்தக் கொதிப்பைக் குறைப்பதற்கு உதவுகின்றன.

**இரத்தக் கொதிப்புடன் சிறு நீரக செயலிழப்பு உள்ள நோயாளிகள் அதிக பொட்டாசியம் உள்ள உணவை தவிர்க்க வேண்டும்**

உணவு சமைக்கும் போது அதிகமாக காய்கறிகளையும் தானியங்களையும் சேர்த்துக் கொண்டால் அதிலுள்ள நார்ச்சத்து பசியைத் தூண்டாது. அதிக உப்பு உள்ள பொருட்களையும், பதப்படுத்திய உணவுப் பொருட்களையும் தவிர்ப்பது நல்லது.

இரத்தக் கொதிப்பு அதிகமாகவும், குறைவாகவும் இருப்பவர்களுக்கு ஒரு கிலோ எடை என்ற அளவில் ஒரு கிராம் புரதம் எடுக்க வேண்டும். அதிக கொழுப்புள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும். ஈரல், முட்டை, மஞ் சள் கரு, இறால், நண்டு தவிர்க்கப்பட வேண்டும். சேர்த்துக் கொள்ளக் கூடிய கொழுப்புக்களாக தாவர எண்ணெய், சோள எண்ணெய், ஆலிவ் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் எடுக்கலாம்.

தாதுப் பொருட்களும் விட்டமின் சத்தும் குறைவான உப்பு, கொழுப்பு, அதிக பொட்டாசியம் இரத்தக் கொதிப்பைக் குறைக்க உதவுகின்றன. ஒரு நாளைக்கு 2 முதல் 3 கிராம் உப்பைக் குறைத்து சாப்பிடுவதன் மூலம் 6லிருந்து 10 மி.கி குறைவாக ஆய்வுகள் கூறுகின்றன. பொட்டாசியம் அதிகமாக உள்ள தக்காளி, வாழைப்பழம், கீரை வகைகள், சுரைக்காய்,



உருளைக் கிழங்கு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரத்தக் கொதிப்புடன் சிறு நீரக செயலிழப்பு உள்ள நோயாளிகள் அதிக பொட்டாசியம் உள்ள உணவை தவிர்க்க வேண்டும். பூண்டு, நெல்லிக்கனி அதிகளவில் சேர்த்துக் கொண்டால் இரத்தக் கொதிப்புக் குறையும்.

---



# உருளைக்கிழங்கு கட்லட்

**தேவையான பொருட்கள்:** சிக்கன் 500 கிராம், உருளைக்கிழங்கு 2, வெங்காயம் 2, இஞ்சி பூண்டு விழுது 1 ஸ்பூன், பச்சை மிளகாய் 2, மிளகாய் தூள் 1 ஸ்பூன், மல்லித் தூள் 1 ஸ்பூன், மஞ்சள் தூள் 1/2 ஸ்பூன், சீரகத் தூள் 1 ஸ்பூன், மசாலா தூள் 1 ஸ்பூன், உப்பு தேவையான அளவு, எலுமிச்சை சாறு 2 ஸ்பூன், மைதா மாவு 3 ஸ்பூன், றக்ஸ் தூள் தேவைக்கு, எண்ணெய் பொரிக்க

**செய்முறை :** எலும்பில்லாத சிக்கனை சுத்தம் செய்து சிறிய துண்டுகளாக நறுக்கி மிக்சியில் போட்டு அரைத்து கொள்ளவும். உருளைக்கிழங்கை வேக வைத்து மசித்து கொள்ளவும். வெங்காயம், கொத்தமல்லி, ப.மிளகாயை பொடியாக நறுக்கி கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு சூடானதும் வெங்காயம் சேர்த்து சிறிது நேரம் வதக்கிய பின்னர் இஞ்சி பூண்டு விழுது ப.மிளகாய் சேர்த்து கிளறவும். பின்பு மிளகாய் தூள், மல்லித் தூள், மஞ்சள் தூள், சீரகத்தூள், கரம் மசாலா தூள், உப்பு சேர்க்கவும். அடுத்து அதில் சிக்கனை சேர்த்து பொன்னிறமாகும் வரை வேக வைக்கவும்.

கடைசியாக எலுமிச்சை சாறு, மசித்த வைத்த உருளைக்கிழங்கை சேர்த்து நன்கு சுருள வதக்கி இறக்கவும். ஆறியதும் அதிலிருந்து சிறிய பகுதி எடுத்து அதனை பந்து போன்று உருட்டி வேண்டிய வடிவில் தட்டி வைக்கவும். மைதா மாவை சிறிது தண்ணீர் ஊற்றி கரைத்து கொள்ளவும். பின்பு செய்து வைத்திருக்கும் கட்லெட்டை மைதா மாவில் முக்கி எடுத்து றக்ஸ் தூளில் பிரட்டி எடுத்து வைக்கவும். அனைத்து கட்லெட்டுகளையும் மாவில் முக்கி எடுத்து அவற்றை 30 நிமிடம் பிரிட்ஜில் வைக்கவும்.பின்பு கடாயில் எண்ணெய் விட்டு சூடானதும் கட்லெட்டை எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்தெடுக்கவும்.

சூப்பரான சிக்கன் உருளைக்கிழங்கு கட்லெட் ரெடி.



## பனிக்காலத்தில் சரும வரட்சியை போக்க என்ன செய்யலாம்

பனிக்கலாத்தில் சருமம் வரண்டு போதல் இயல்பு. இதனால் கை கால் பொருக்கடிக்கின்றது என பெண்கள் ஆண்கள் இருவருக்குமே வருத்தம் இருக்கும். அதனை போக்குவதற்கு தேங்காயெண்ணை அல்லது ஒலிவ் ஒயிலினை பயன்படுத்துவார்கள்.

இத்தகைய வறட்சியைப் பொக்குவதற்கு பலர் தேங்காய் எண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் கிரீம்களை பூசிக்கொள்ளலாம். சரும வறட்சிக்கு புறக்காரணிகள் காரணமாக இருந்தாலும், சிலருக்கு பரம்பரைக் காரணங்களாலும் சரும வறட்சி ஏற்படுகிறது. இத்தகைய வறட்சியடைந்த சருமத்தை உடனுக்குடன் சரிசெய்து கொள்ள வேண்டும். இல்லையெனில், பல பாக்டீரியாக்கள் வறண்ட சருமத்தின் வழியே ஊடுருவி சரும அழற்சியை ஏற்படுத்தும்.

சரும வறட்சி பெரும்பாலும் உலர்ந்த காற்றினால் முக்கியமாக ஏசி அறைகளில் மணிக்கணக்கில் அமர்ந்திருந்தால் சருமம் வறட்சியடையும். மேலும் சரும வறட்சியானது மிகக்குறைந்த வெப்பநிலை, மிகக்குறைந்த ஈரப்பதம் மற்றும் பயங்கரமாக அல்லது மிக வேகமாக அடிக்கும் காற்று போன்றவற்றாலும் ஏற்படும். அதிகநேரம் வெந்நீரில் சருமத்தை நனைப்பதாலும், சருமம் வறட்சியடைந்து விடுகிறது. பொதுவாக சருமத்தில் இயற்கையாக உள்ள என்ணெய் பசையானது சருமத்தை நன்கு பாதுகாத்து இறுக்கமாக இருக்க உதவுகிறது.

## பெண்ணின் கருவை பாதிக்கும் விடயங்கள்



ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாக இருக்கும் காலம் என்றால் அது கர்ப்ப காலமும், பிரசவ காலமும் தான். ஆனால் அத்தகைய தாய்மையை இன்றைய தலைமுறையினர் பலரால் பெற முடிவதில்லை. இதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. ஒருசில காரணிகள் தான் ஒரு பெண்ணின் கருவளத்தைப் பாதித்து, குழந்தைப் பெற்றெடுக்கும் தன்மையை பாதிக்கிறது.

மோசமான மற்றும் ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கத்தால், ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் உடல் பருமனால் அவஸ்தைப்படுகின்றனர். உடல் பருமன் நோய்களுக்கு மட்டும் வழிவகுப்பதோடு, குழந்தைப் பெற்றெடுப்பதிலும் இடையூறை ஏற்படுத்தும். எனவே பெண்கள் எப்போதும் தங்களது உடல் எடையைச் சிக்கென்று பராமரிக்க வேண்டியது அவசியம்.

வயதும் பெண்களின் கருவளத்தைப் பாதிக்கும். பொதுவாக 23-40 வயது வரை பெண்களால் கருத்தரித்து குழந்தைப் பெற்றுக் கொள்ள முடியும். எனவே பெரும்பாலான தம்பதிகள் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைக்கு வந்த பின் குழந்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று குழந்தையைத் தள்ளிப் போடுகின்றனர். இப்படி பெண்கள் குழந்தைப் பெற்றெடுப்பதைத் தள்ளிப் போட்டால், அவர்களின் கருப்பை வயது அதிகரிக்க அதிகரிக்க பலவீனமாகி, பின் கருத்தரிப்பதில் சிக்கல்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

திருமணத்திற்குப் பின் ஒவ்வொரு பெண்ணும், ஆணும் தங்களது உடல் ஆரோக்கியத்தின் மீது அக்கறை அதிகம் காண்பிக்க வேண்டும். பெண்களின் கருவளத்தை வீட்டில் பயன்படுத்தும் கெமிக்கல் கலந்த பொருட்களும் பாதிக்கும். அதிலும் கழிவறையை சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் பொருட்களில் உள்ள கெமிக்கல்களை சுவாசிக்கும் போது, அந்த வாயுக்கள் நேரடியாக கருவளத்தைப் பாதிக்கும். எனவே இவற்றை தவிர்தல் வேண்டும்

## திருமணத்திற்கு முன் மன ரீதியாக தயாராகுங்கள்

ஆணும் பெண்ணும் மட்டும் இல்லற பந்தத்தில் இணைவது தான் இல்வாழ்க்கை என நினைத்துவிட வேண்டாம். கணவன் மனைவி ஓர் வீடு என்றால் அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் உறவினர்கள் எனும் சுற்றத்தை வலுவாக வைத்துக் கொள்வதும் அவசியம்.

எனவே, திருமணத்திற்கு முன்னர் உடல் ரீதியாக தயார் ஆவதற்கு முன்னர் மன ரீதியாக நீங்கள் எப்படி



தயாராக வேண்டும் என தெரிந்துக் கொள்ளுங்கள்...

பெண்கள் நிறைய பேசுவார்கள். நீண்ட நேரம் ஒரே விஷயத்தை உட்கார்ந்து கேட்கும் பண்பு ஆண்களிடம் அறவே கிடையாது. ஆயினும், நீங்கள் கேட்க தான் வேண்டும். கேட்க பழக தான் வேண்டும்.

உங்கள் துணையிடம் இருக்கும் போது மொபைலை நோண்டாமல் இருக்க வேண்டும். நீங்கள் அவர் மீது தான் கவனம் செலுத்த வேண்டும். மொபைல் நோண்டுவது கவன சிதறலை உண்டாக்கும் என்பதற்காக அல்ல. அவர் அருகில் இருக்கும் போதும் நீங்கள் மொபோலை நோண்டிக் கொண்டிருந்தால் வேண்டாத சந்தேகங்கள் அவர்களது மூளைக்கும் கசியும், பிறகு சண்டை சச்சரவுகள் பிறக்கும். இதெல்லாம் தேவையா??

நீங்கள் பிறந்ததில் இருந்து, உங்களது எதிர்கால திட்டங்கள் என்னென்ன, எதை எல்லாம் முயற்சி செய்தீர்கள், முயற்சி செய்யலாம் என எண்ணி கைவிட்டீர்கள் என ஒன்று விடாமல் கூறிவிட வேண்டும். நீங்கள் ஒரு திறந்த புத்தகமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

பெண்கள் நிறைய விஷயங்களை கூறுவார்கள். அதே போல கூறிய அனைத்தையும் (நீங்கள் கூறியதையும் சேர்த்து..) நினைவில் வைத்துக் கொள்வார்கள்.

எனவே, அவர்கள் கூறியது நீங்கள் கூறியது என சின்ன சின்ன விஷயமாக இருப்பினும் கூட அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

காலை எழுந்ததும், காலை வணக்கத்துடன் ஓர் ஆசை முத்தமும், இரவு உறங்கும் முன் காதலுடன் ஓர் முத்தமும் இரண்டு வேளை அளித்து வந்தால், உங்கள் உறவு மிகவும் ஆரோக்கியமாக இருக்கும்.

அவ்வப்போது இன்ப அதிர்ச்சி அளிக்க மறக்க வேண்டாம். பரிசுகளாக இருக்கலாம், அவர்களுக்கு பிடித்த விஷயாமாக இருக்கலாம், வெளியிடங்களுக்கு கூட்டி வருவதாக இருக்கலாம். ஏதேனும் ஒன்று செய்து மாதம் ஒரு முறையாவது அவருக்கு இன்ப அதிர்ச்சி அளித்து வந்தால், உங்கள் இல்வாழ்க்கையில் அதிர்ச்சி இல்லாமல் பயணிக்கலாம்.



## முகப் பராமரிப்பு
## முகச்சுருக்கம் நீங்கி முகம் பளபளவாக

தினமும் பாலில் தேவையான அளவு தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் எந்த நோய்களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடல் பெற்று விடும். முகம் அழகாகவும், உடல் பளபளப்பாகவும் இருக்கும். அதிகாலையில் வெறும் வயிற்றில் அத்திப்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் உடல் அழகும், இளமையும் நாளுக்கு நாள் அதிகமாகும்.


முகச் சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணையில் மஞ்சத்தூளை போட்டுக் குலைத்து உடம்பிற்கு தடவி. பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும். தினமும் முகத்தில் ஆலிவ் எண்ணெய் பூசி வர முகச்சுருக்கம் நீங்கி பளபளப்பாக இருக்கும்.ஒரேஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

உலர்ந்த ரோஜா இதழ்களுடன் சிறிது பன்னீரும் சந்தனமும் அரைத்து முகத்தில் தடவ தோலின் நிறம் பொலிவு பெறும். பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

### முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும். முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.





# சுமந்திரனோடு இணையத் தயார்!

## கஜேந்திரன் “கலகல” பேட்டி

எஸ்.நிதர்சன்

**தீபம்:** *வரும் உள்ளூராட்சிசபை தேர்தலில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவுள்ளதாக தகவல் வந்துள்ளதே... உண்மையா?*

**கஜேந்திரன்:** உண்மைதான் போட்டியிடப்போகிறோம்.

**தீபம்:** *இதற்கு முந்தைய உள்ளூராட்சிசபை தேர்தலில் போட்டியிடவில்லை.. இப்பொழுது திடீரென ஏனிந்த மாற்றம்?*

**கஜேந்திரன்:** 2011இல் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது நெருக்கடியான நிலைமையிருந்தது. அப்போது எங்களால் வேட்பாளர்களை இனம்காண முடியவில்லை. நாங்கள் உள்ளூராட்சிசபை தேர்தல்களை புறக்கணிப்பதாக அறிவிக்கவில்லை. மாகாண சபை தேர்தலில்கூட போட்டியிட தயாராக இருந்தோம். ஆனால் மாகாணசபையை தீர்வாக ஏற்க முடியாதென்பதே எமது நிலைப்பாடு. நாங்கள் எல்லா தேர்தல்களையும் புறக்கணிக்க சொல்வதாக தமிழ்தேசிய கூட்டமைப்புத்தான் பொய் பிரசாரம் செய்தது. நாங்கள் புறக்கணிக்க சொல்வதன் மூலம் ஈ.பி.டி.பி, தேசியகட்சிகளை வெல்ல செய்ய முயற்சிப்பதாக அபிப்பிராயத்தை பரப்பினார்கள். தேர்தலை பகிஸ்கரிப்பதாக நாம் சொல்லவில்லை. எதிர்காலத்தின் உள்ளூராட்சி தேர்தல்களில் நிச்சயம் போட்டியிடுவோம்.

**தீபம்:** *உள்ளூராட்சி மன்ற பிரதிநிதித்துவங்களை கொண்டிருக்காமல் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அடைவது சிரமம் என்ற கடந்தகால பாடத்திலிருந்து இந்த முடிவிற்கு வந்ததாக கொள்ளலாமா?*

**கஜேந்திரன்:** ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான அபிப்பிராயம் வரலாம். ஆனால், தேர்தல் வரும்பொழுது எதிர் கொள்வது அரசியல்கட்சிகளின் கடமை. வடமாகாணசபை தேர்தலின் முன்னர் மன்னார் ஆயர் தலைமையில் ஒரு கூட்டம் நடந்தது. தமிழ்தேசிய கூட்டமைப்பு, நாம், சிவில் சமூகத்தினர் கலந்து கொண்டோம். தமிழ்தேசிய அவை என்ற பெயரில் அனை வரையும் உள்ளடக்கிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் தான் போனோம். ஆனால் மாகாணசபை தேர்தலை எதிர்கொள்வது பற்றியே அங்கு விவாதிக்கப்பட்டது.

அங்கு நாம் ஒரு யோசனையை வைத்தோம். அனைவரும் சேர்ந்து மாகாணசபை தேர்தலை புறக்கணிப்போம் என. நாம் புறக்கணித்தால் ஈ.பி.டி.பி போன்றவர்கள் கைப்பற்றிவிடுவார்கள், புறக்கணிக்க முடியாதென்றது கூட்டமைப்பு. அப்பொழுது நாம் அதை ஏற்றுக்கொண்டோம்.

13வது திருத்தத்தை நாங்கள் இரண்டு கட்சிகளும் ஏற்கவில்லையென அறிக்கை விட்டு, சுயேட்சைக்குழுக்களாக இண்டு கட்சியும் இணைந்து வேட்பாளர்களை நியமிக்கலாம் என்ற யோசனையையும் வைத்தோம். அப்படி செய்தால் மக்களிற்கு சின்னங்களை தேர்வு செய்வதில் குழப்பம் வரும் என்றார்கள். ஏற்றுக் கொண்டோம்.

13வது திருத்தத்தை ஏற்கவில்லை, தவறானவர்களிடம் மாகாணசபை அதிகாரம் சென்றுவிடக்கூடாதென்பதற்காகவே போட்டியிருகிறோம் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட சொன்னோம். அவர்கள் ஏற்கவில்லை.

மாகாணசபையை தீர்வாக ஏற்க முடியாதென்பதன் அடிப்படையிலேயே அந்த தேர்தலை தவிர்த்தோம். எமது கடந்தகால வரலாறு இப்படியிருக்க, பாராளுமன்றம் போவதற்காகத்தான் உள்ளூராட்சிசபை தேர்தலில் போட்டியிடுகிறோம் என்பது எங்களை கொச்சைப்படுத்தும் கருத்து.

**தீபம்:** *சரி... அப்படியானால் அடுத்த மாகாணசபை தேர்தலில் கட்சி போட்டியிடுமா?*

**கஜேந்திரன்:** தேர்தல் வரும்போது பார்த்து கொள்ளலாம். அரசை நியாயப்படுத்தும் வேலையை தமிழ்தரப்பிலுள்ளவர்கள் தொடர்ந்து செய்தால், அந்த சூழலுக்கு என்ன சரியோ அந்த முடிவை எடுப்போம்.

**தீபம்:** *13வது திருத்தம் தமிழர் பிரச்சனைக்கான தீர்வல்ல. அதனால் புறக்கணிக்கிறோம் என்றுதான் கடந்த மாகாணசபை தேர்தல் சமயத்தில் உங்கள் கட்சி விளக்கமளித்தது. இப்பொழுது உள்ளூராட்சிசபை, மாகாணசபை தேர்தல்களில் போட்டியிட தயாராகிறீர்கள். கட்சியின் கொள்கை மாற்றமாக இதை கொள்ளலாமல்லவா?*

**கஜேந்திரன்:** கொள்கை மாற்றமென்ற பேச்சிற்கே இடமில்லை. மாகாணசபை முறையை நிராகரித்து சுயநிர்ணய அடிப் படையிலான தீர்வை நோக்கி செல்வதுதான் எமது நிலைப்பாடு. ஆனால் பிழையானவர்கள் வரக்கூடாதென்பதற்காக போட்டியிடும் தமிழ்தேசியகூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டோம். ஆனால் அதனை தீர்வாக ஏற்றுக்கொண்டதால் ஒற்றையாட்சி அரசமைப்பிற்கு ஆணைகொடுக்க தமிழ்தேசிய கூட்டமைப்பு தயாராகியுள்ளது.

நெருக்கடியிலிருந்து தப்பிப்பதற்காக, தமிழர்களிற்கு தீர்வு கொடுக்கப்போவதாக ஐ.நாவிற்கு வாக்களித்துள்ளது அரசு. அதனால் பாராளுமன்றம் அரசியலமைப்பு சபையாக்கப்பட்டு அரசியலமைப்பு உருவாக்கப்படுகிறது. அதிலும் ஒற்றைய ாட்சிதான் உள்ளது. அதற்கான வாக்கெடுப்பிற்கு பொதுமக்களை தயாராகுமாறு கூட்டமைப்பினர் கூறியுள்ளனர். ஒற்றையாட்சியை ஏற்காதபடியால் நாங்கள் அதை நிராகரிக்கிறோம். எங்கள் கட்சியின் கொள்கை மாறிவிட்டதென எப்படி சொல்லலாம்?

**தீபம்: புதிய அரசியலமைப்பு தொடர்பாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு என்ன?**

**கஜேந்திரன்:** புதிய அரசிலமைப்பும் ஒற்றையாட்சி அடிப்படையிலானதாகத்தான் இருக்கும். ஒற்றையாட்சிமுறையை தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்கவில்லை. 1948இல் முதலாவது அரசியல் யாப்பான சோல்பரி யாப்பு நடைமுறைக்கு வந்தபோது அப்போதிருந்த ஒரே தமிழ்கட்சியாக தமிழ் காங்கிரஸ் அதனை நிராகரித்திருந்தது.

1972 இல் குடியரசு யாப்பை எதிர்த்து தந்தை செல்வா பதவி விலகினார். இடை தேர்தலை நடத்துங்கள், அதில் நான் வென்றால் தமிழர்கள் இந்த யாப்பை நிராகரிக்கிறார்கள், நான் தோற்றால் தமிழர்கள் யாப்பை ஏற்கிறார்கள் என சவால் விட்டார். அந்த தேர்தலில் செல்வா அமோகமாக வென்றார். பின்னர் தமிழர்கள் தனிநாட்டிற்கான ஆணை வழங்கினார்கள். இலங்கையில் நடைமுறையில் இருந்த மூன்று யாப்பையும் தமிழர்கள் ஏற்கவில்லை.

இந்த அரசியலமைப்பு வாக்கெடுப்பிற்கு விடப்படும்போது தமிழ்தேசியகூட்டமைப்பு மக்களை ஆதரிக்ககோரும். நாங்கள் அதனை கடுமையாக எதிர்ப்போம். மக்கள் அதை நிராகரிக்க செய்யும் வேலைத்திட்டங்களை செய்வோம்.



**தீபம்: மக்களை திரட்டும் வேலைத் திட்டம் செய்யப்போவதாக கூறுகிறீர்கள்... அது சாத்தியமா? ஏனெனில், தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வு யோசனையையே சரியான முறையில் மக்களிடம் கொண்டு செல்ல உங்களால் முடியவில்லையல்லவா?**

கஜேந்திரன்: தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்வது பெரிய வேலைத்திட்டம். அது படிப்படியாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. எழுக தமிழ் நிகழ்வினூடாக புரிய வைத்தோம். இப்பொழுது தீர்வுத்திட்ட யோசனையின் தமிழ் வடிவத்தை மக்களிடம் விநியோகிக்க தயாராகிறோம். இவ்வளவு நாளும் இதை செய்யாமல் தாமதமானது என்பதில் உண்மையுள்ளது. காரணம், வளப்பற்றாக்குறை.

**தீபம்: எழுக தமிழின் பின்னர் எல்லோரும் காணாமல் போய்விட்டீர்களே.. அந்த எழுச்சியை ஏன் உங்களால் தொடர முடியவில்லை?**

கஜேந்திரன்: அடுத்த கட்ட வேலைகள் மட்டக்களப்பில் நடக்கிறது. வரும் 21ம் திகதி அங்கு எழுக தமிழ் நடக்கவுள்ளது. இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கில் சமஷ்டி அடிப்படையில் தீர்வை வலியுறுத்தியே நடக்கவிருக்கிறது. இவை தொடர்ச்சியான வேலைத்திட்டம். சிலவேளை வேகம் போதாமல் இருக்கலாம். அந்த அமைப்பிற்கு இந்தியாவோ, அமெரிக்காவோ, இலங்கை அரசோ நிதி கொடுக்கவில்லை. மக்களின் பங்களிப்புடன் நடக்கிறது. அதனால் சில தாமதங்கள் உள்ளன. ஆனால் முழுமை பெறும்.

**தீபம்: யாழ்ப்பாண நிலமை வேறு. மட்டக்களப்பில் கவனிக்கத்தக்க பேரணி யொன்றிற்காக மக்களை திரட்ட முடியுமா?**

கஜேந்திரன்: கிழக்கில் 33 வீதமான தமிழர்கள்தான் உள்ளனர். அவர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கிறார்கள். தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்டது, அதனால் சரியாக நடக்குமென சிந்திக்கி றார்கள். கூட்டமைப்பிற்குஎதிராகசெயற்படும் போது மக்களிடம் குழப்பம் வரும்.

யாழ்ப்பாண எழுக தமிழிற்கு வணிகர் கழக தலைவர் கடைகளை பூட்ட மாட்டோம் என்றார். தமிழரசுக்கட்சி தலைவர் ஆதரவில்லையென்றார். ஆனால் மக்கள் அதையும் தாண்டி வந்துள்ளனர். அப்படியான வாய்ப்பு கிழக்கில் இல்லை. அங்குள்ள முஸ்லீம்கள் கூட்டமைப்புடன் உறவை வைத்துள்ளனர். அதனால் ஒத்துழைக் காமலிருக்கும் நிலை ஆரம்பத்திலிருக்கும். சிங்களவர்கள் நிச்சயம் எதிர்ப்பார்கள். இவற்றை கடந்து மக்களை அணிதிரட்ட முயற்சிப்போம்.

கடந்த சில வாரங்களாக அங்கு பணி யாற்றும்போது, மக்களின் ஆதரவிருப்பதை அறிய முடிகிறது. மட்டக்களப்பு பிக்குவின் ஆட்டத்தை நிறுத்த வேண்டுமென்ற எதிர்பார்ப்பு எல்லோரிடமும் இருந்தது. எழுக தமிழ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் தவிர்க்க முடியாமல் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். எழுக தமிழிற்கு மக்கள் செல்வதை தடுக்கவே இந்த கைது நடந்தது.

**தீபம்: வரும் உள்ளூராட்சிசபை தேர்தலில் வேறு சிலகட்சிகளை இணைத்துக் கொண்டு தமிழ்தேசிய மக்கள் முன்னணி போட்டியிடும் எண்ணமுள்ளதாக சொல்லப்படுகிறதே..**


கஜேந்திரன்: தேர்தலிற்கு இன்னும் காலமுள்ளது. அப்பொழுது அதை பார்ப் போம். எமக்கென கொள்கை உள்ளது. அதனுடன் இணங்கும் யாரும் அது சம்பந்த னோ, சுமந்திரனோ எம்மோடு சேரலாம். இணக்கமான கொள்கையுடைய யாருடனும் இணைந்து பணியாற்ற நாம் தயார்.

**தீபம்: அரசியல் எதிரிகள் உங்களிளை குறிக்க பாவிக்கும் சொல் குதிரை. ஏன் அந்த பெயர் உருவானது?**

கஜேந்திரன்: ஈ.பி.டி.பி, இராணுவத்தின் அடக்குமுறைக்குள் யாழ்குடா இருந்த சமயத்தில் ஊடகவியலாளர் நிமலராஜன் கொல்லப்பட்டார். அது 2000ம் ஆண்டு. அநந்தப்படுகொலைக்கு எதிராக யாழ் பல்கலைகழகம்தான் முதலில் குரல் கொடுத்தது. அதில் நான் முக்கிய பங்கு வகித்தேன். பல்கலைகழகத்திலிருந்து கச்சேரி வரையும் பெரிய பேரணியொன்று நடத்தப் பட்டது. ஈ.பி.டி.பிதான் அநத கொலையை செய்ததென பகிரங்கமாக பேரணியில் குற்றம்சாட்டினர். இது ஈ.பி.டி.பிக்கு இராஜதந்திர நெருக்கடியை கொடுத்ததுடன், அதிர்ச்சியையும் கொடுத்திருந்தது.

ஈ.பி.டி.பியின் இதயவீணை என்ற வானொலிதான் இந்த புரளியை முதலில் அவிழ்த்து விட்டது. பல்கலைகழக மாணவர்கள் தமக்கு எதிரில்லை, சிறிய குழுவொன்றுதான் இதன் பின்னணியில் இருந்தது என பிரசாரம் செய்தார்கள். வன்னிக்குதிரைகள்தான் அந்த சிறியகுழு என்றார்கள். வன்னிக்குதிரைகள் என்பது, வன்னியிலிருந்து புலிகளால் குதிரை யோடி பல்கலைகழகம் அனுப்பப்பட்டவர் களாம்.



▶ கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்தில் ஒளி விழா நிகழ்வுகள் அண்மையில் நடந்தன. அனைத்து ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி;.றோகணபுஸ்பகுமார சிறப்பு அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.




▶ சிரமத்தின் மத்தியில் வாழும் மாவீரர் பெற்றோரான விசுவமடுவை சேர்ந்த வயதான தம்பதியருக்கு மாதாந்த உதவித்தொகையை ஜேர்மனியில் வழங்கும் பெண்மணியொருவர் வழங்க முன்வந்துள்ளார். ஆறு மாதத்திற்குரிய உதவிப்பணம் உதவும் இதயங்கள் அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது.

## பொன்மொழி

ஆழ்ந்த நம்பிக்கை இமயமலை போன்றது. அதை எவராலும் அசைக்க முடியாது.
- ஸ்ரீ ராமகிருஷ்ணர்

கோபம் அன்பை அழிக்கும். கர்வம் அடக்கத்தைக் கெடுக்கும்!
-மகாவீரர்

கடுமையாக உழைப்பவனுக்குக் கவலைப்பட நேரமில்லை!
- சாணக்கியர்

கடந்ததைப் பற்றி வருந்தாதே! வருவதைப் பற்றி கற்பனை செய்யாதே!
- ஸ்ரீ அன்னை

தன் எடையைப் போல் பத்து மடங்கு அதிக எடையுள்ள தானியத்தை எளிதில் சுமக்கும் எறும்பைப் பார்த்துமா உங்கள் சிந்தனை இன்னும் விழிக்கவில்லை.
- திரு.வி.க

பிறர் குற்றங்களைக் காண முயல்பவன் அரை மனிதன்.
- வேட்லி

நறுமண மலர்களோ மெதுவாக மலரும். களைகளோ வேகமாக வளரும்.
- ஷேக்ஸ்பியர்

நீ துயரப்படக் காரணம் எதுவாக இருந்தாலும் பிறருக்குத் துன்பம் செய்யாதே.
- ஜார்ஜ் எலியட்

கல்வி ஒரு மூட்டை நூல்களை வாசிப்பது அன்று. அடக்கம் ஒழுங்கு அறம் நீதி இவற்றின் முன்மாதிரியாகும்.
- எட்மண்ட் பர்க்

உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே. இனிய குரல் கொண்ட பறவைகள்தான் பாட வேண்டும் என்றால் காடு அமைதியாகி விடும்.
- ஹென்றி வேன்டேக்

நல்லவை எங்கே இருந்தாலும் ஒளிவிட்டுச் சுடரும். கெட்டவை இமயமலை உச்சியில் வைக்கப்பட்டு இருந்தாலும் இருள் கவிந்து மறைக்கப்படும்.
- புத்தர்

எத்தனைப் படிகள் என்று மலைக்காதீர்கள். எல்லாப் படிகளும் கடக்கக்கூடியவையே.
- இராமலிங்க வள்ளலார்

பணத்தின் மீது நம்பிக்கை வைக்காதே. நம்பிக்கை மீது உன் பணத்தை வை.
- ஹோம்ஸ்

நாம் நான்கு வழிகளில் காலத்தை இழக்கிறோம். ஒன்றும் செய்யாமல் இருத்தல், செய்ய வேண்டியதைச் செய்யாமல் இருத்தல், தவறாகச் செய்தல், காலமற்ற காலத்தில் செய்தல்.
- வொல்தேர்

சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது. உண்மை எல்லா மூட நம்பிக்கைகளையும் அழிக்கிறது.
- இங்கர்சால்

மனித இனத்தின் பொறுப்புகள் மூன்று ஒன்று பகைவனை நண்பனாக ஆக்குதல், இரண்டு கெட்டவனை நல்லவனாக மாற்றுதல், மூன்று படிப்பற்றவர்களுக்கு கல்வி கற்பித்து அவர்களின் வாழ்க்கையை உயர்த்துதல்.
- டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

நாம் படிக்கப்படிக்கத்தான் நம்மிடமுள்ள அறியாமையைக் கண்டு கொள்கிறோம்.
- கவிஞர் ஷெல்லி

வெறும் அதிர்ஷ்டத்தை மட்டும் தேடி ஓடும் போதுதான் நாம் கால்கள் இடறி விழுந்துவிடுகிறோம்.
- ஷேக்ஸ்பியர்




ஒரு காட்டில் பல முயல்கள் இருந்தன. அவைகளுக்கு ஒவ்வொரு நாளும் தங்களை சிங்கம் புலி என்று ஏதாவது விலங்குகள் தங்களைத் தாக்கிக் கொன்று தின்று விடுமோ என்கிற அச்சமிருந்து வந்தது.

ஒரு நாள் அவை எல்லாம் ஒன்று சேர்ந்து 'நாம் கோழைகளாக ஒவ்வொரு நாளும் பயந்து சாவதை விட ஒட்டு மொத்தமாகக் குளத்தில் விழுந்து சாகலாம்' என முடிவெடுத்தன.

அனைத்து முயல்களும் தங்களின் சாவிற்காக ஒரு குளத்தை நோக்கிச் சென்றன.

அந்த குளத்தில் பல தவளைகள் வாழ்ந்து கொண்டிருந்தன. குளத்தின் கரையில் உட்கார்ந்து கொண்டிருந்த தவளைகள் பல முயல்கள் தங்களை நோக்கி வருவதைப் பார்த்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நினைத்துக் குளத்தில் குதித்து மறைந்தன.

இதைப் பார்த்த முயல்களில் பெரிய முயல் ஒன்று தன்னுடன் வந்த முயல்களைப்பார்த்து 'இந்தப் பூமியில் நாம்தான் கோழைகள் என்று நினைத்தோம். ஆனால் நம்மை விடக் கோழையானவர்களும் இந்த உலகில் பலர் இருக்கின்றனர். அவர்களே பயமில்லாமல் இந்த உலகில் வாழும் போது நாம் மட்டும் ஏன் பயந்து போய் சாகவேண்டும்' என்று கூறியது.

மற்ற முயல்களுக்கும் அந்தப் பெரிய முயல் சொன்னதில் உண்மை இருப்பதைப் போல் தோன்றியது.நாம்பிறரைக்கண்டு அச்சப்படாமல் இருக்கவேண்டும். நம்மைக் கண்டு அச்சப்படு பவர்களும் இந்த உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை உணர வேண்டும். பயம்... மட்டும் மனிதனைச் சிறிது சிறிதாகக் கொன்றுவிடும். எனவே எதற்கும் எப்போதும் பயப்படக்கூடாது என்பதை நம் மனதில் கொள்ள வேண்டும்.

# குழந்தைகளின் கைகளில் பணம் கொடுக்கலாமா



சிறுவயது குழந்தைகளுக்கு காசு கொடுத்து பழக்குவது அவர்களிடம் கெட்ட விளைவுகளையே உண்டாக்குகிறது. கையில் காசு இருப்பதால் நினைத்த போதெல்லாம் கடைக்குச் சென்று ஏதேனும் வாங்கி உண்ணும் குழந்தைகளுக்கு ஏதேனும் சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டு விடுகிறது.

சிறுவயதிலிருந்தே தன் விருப்பம் போல் பலவற்றையும் வாங்கி சாப்பிட்டு பழகிவிட்ட குழந்தைகளுக்கு மேல்நிலைப் பள்ளி அல்லது கல்லூரி செல்லும் போது திண்பண்டங்களின் மீது வெறுப்பு ஏற்பட்டு அலுப்புத் தட்டி விடுகிறது. எப்போதும் போல் பெற்றோரிடம் இருந்து பணம் பெறும் அவர்கள் கையில் காசை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று யோசிக்கும் போது தான் மனக்கிளர்ச்சியை உண்டாக்கும் மதுப் பழக்கம் மற்றும் போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையாவதெல்லாம் நடக்கிறது.

செலவு செய்வதற்காக குழந்தைகளுக்குப் பணம் கொடுப்பதை விட சேமிக்க கொடுக்கலாம். பணம் கொடுத்து தன் முன்னிலையிலேயே உண்டியலில் போடுமாறு பெற்றோர் குழந்தைகளை ஊக்கப்படுத்தலாம். பின்னாளில் இந்நடத்தை சேமிக்கும் பழக்கத்தை குழந்தைகளிடம் வளர்க்கும். குழந்தைப் பருவத்தில் இருந்தே சேமித்துப் பழகியவர்கள் பிற்காலத்தில் படித்து முடித்தவுடன் வேலைக்குச் சென்று விடுகின்றனர். மேலும் தான் பெறும் சம்பளப் பணத்தை கண்ணும் கருத்துமாக செலவு செய்பவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு குடும்ப பொறுப்பும் அதிகமாக இருக்கிறது. திட்டமிட்டு பொருட்களை வாங்கும் திறமை வளர்ந்து விடுகிறது.

கிடைத்த பணத்தையெல்லாம் செலவு செய்து வளரும் குழந்தைகள் பின்னாளில் மனதில் நினைத்ததையெல்லாம் வாங்கிக் குவித்து விடும் இயல்பினராக மாறிவிடுவர். பணம் இல்லா விட்டால் என்ன நிகழும் என்பதை அவ்வப் போது குழந்தைகளுக்கு புரிய வைப்பது நல்லது. அப்போது தான் உதாரித்தனமாக செலவு செய்வதை பிற்காலத்தில் தவிர்ப்பார்கள்.



# ஞானிக்கு வியர்க்கலாமா

ஜப்பானிய செல்வந்தர் ஒருவர் சம்பந்தப்பட்ட விழாவுக்கு ஜென் ஞானி காசன் அழைக்கப் பட்டிருந்தார். இதற்கு முன் இப்படியொரு ஆடம்பர விழாவில் அவர் கலந்து கொண்டதில்லை. எனவே, அவருக்கு உடல் நடுக்கம் ஏற்பட்டது. வியர்த்துக் கொட்டியது.

இந்நிகழ்ச்சிக்குப் பின் காசன் தன் மாணவர்களை அழைத்தார். 'என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களுக்கு ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவன். உலகத்தில் ஏற்படும் பிரபலத்தை சமமாகப் பாவிக்க முடியாத மனநிலையில் தற்போது இருக்கிறேன். நீங்கள் வேறு ஆசிரியரிடம் சென்று பயிலுங்கள்" என்று கூறி விடைபெற்றார்.

பின்னர், ஒரு கோயிலில் சென்று தனிமையில் தியானம் செய்தார். வேறு ஓர் ஆசிரியரிடம் மாணவராகச் சேர்ந்து பயின்றார். எட்டு ஆண்டு களுக்குப் பின் காசன் ஞானம் அடைந்தவராக புதிய மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

# எந்த மீன் பிழைக்கும்



ஒரு கிராமத்தில் ஆழமற்ற குட்டை ஒன்று இருந்தது. அதில் பல மீன்கள் இருந்தன. அவற்றில் மூன்று மீன்கள் நட்புடன் இருந்தன. அவற்றில் ஒரு மீன் அதிக புத்திசாலி மற்றொன்று ஆழ்ந்த சிந்திக்கும் திறன் கொண்டது. மூன்றாவது மக்கு.

ஒருநாள் சில மீனவர்கள் குட்டை நீரைக் கால்வாய் அமைத்துப் பள்ளங்களில் வடிய வைத்தனர். அது கண்டு பயந்த ஆழ்ந்த சிந்தனை உள்ள மீன் 'ஆபத்தில் சிக்கிக் கொள் ளாமல் விரைந்து கால்வாய் வழியே தப்பி வேறு இடம் சென்றிடுவோம்' என்றது.

ஆனால் மக்கு மீனோ 'இங்கேயே இருக்கலாம்' என்றது. புத்திசாலி மீன் 'சமயம் வரும்போது புத்திசாலித்தனமாக தப்பி விடுவோம்' என்றது.

ஆனால் ஆழ்ந்த சிந்தனை கொண்ட மீன் அந்த இடத்தை விட்டு... கால்வாய் வழியே வெளியேறி ஆழமான குளத்தைச் சேர்ந்தது.

தண்ணீர் வடிந்ததும் மீனவர்கள் வலைகளை விரித்து மீன்களைப் பிடித்தனர்.

மக்கு மீன் மற்ற குட்டையில் இருந்த மீன் களுடன் சேர்ந்து வலையில் சிக்கியது. புத்திசாலி மீனோ வலையின் கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. வலையை எடுத்துச் சென்று குளத்தில் கழுவும் போது புத்திசாலி மீன் வலையிலிருந்து தன் பிடியை விட்டு விரைவில் குளத்தில் நுழைந்து தப்பித்தது. மக்கு மீனோ வலை யில் சிக்கி இறந்தது. சிந்திக்கும் திறனும், புத்திசாலித்தனமும் இருந்தால் மகிழ்ச்சியுடன் வாழலாம்.




ராம் தல ஆகிய நான்




தீராத விளையாட்டு விளையாட்டு

Photography level : Infinite 😂





Thuru Thurushan

இதையே ஒரு வெளிநாட்டு நாய் செஞ்சிருந்தா பாராட்டி பரிசு குடுத்திருப்பீங்க... செஞ்சது நம்மூரு நாட்டு நாய்ங்கறதால லைக் கூட போடாம போயிடுவீங்க பாருங்க...😂😂😂




'மல்லியப்பு சந்தி' திலகர்

(சீனாவின் Huawei கைத்தொலைபேசி நிறுவனத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திலகராஜ், சித்தார்த்தன்)



**Sai B Ala**

துணியை துவைத்து முடித்து காய போட்டவுடன் எதையோ
சாதித்த சந்தோசம் பேச்சுலர்க்கு மட்டுமே உரித்தானது...
#முடியல

**நாட்டாமை**

ஆணின் உண்மையான முகம் தண்ணி அடிக்கும் போதும் ...
பெண்ணின் உண்மையான முகம் தண்ணி பிடிக்கும் போதும் தெரிகிறது.....
#தண்ணியின்... ஒற்றுமை...

**கொம்பன் குமரேஷ்**

காளிப்ளவரும் வாழைப்பூவும் உண்மையில் பாவம் செய்தவையே..
பெண்கள் யாரும் அவைகளை கூந்தலின் வைப்பதில்லை. நாங்களும் யோசிப்போம்.

**Babu Shyam**

இது பேஸ்புக்கா இல்ல லூஸ்புக்கான்னு தெரியல.... ...? எல்லாம் லூசா சுத்துது

**துள்ளாத மனமும் துள்ளும்**

கிறிஸ்துமஸ்னு தலைல குல்லா லாம்
போடுறீங்க,அப்போ கார்த்திகை தீபம்னா
தலைல விளக்கோ இல்ல நெருப்போ
வச்சிருக்கணும் என் வைக்கலைன கேட்டா அடிக்க வர்றாங்க..!!

**துள்ளாத மனமும் துள்ளும்**

ஒரு பெண்ணிடம் பிறந்த வீட்டிலிருந்து என்ன கொண்டு வந்தாய் என விசாரிக்கும் சமுகம்,*பிறந்த வீட்டிலிருந்து எதை எல்லாம் இழந்து வந்தாய் என விசாரிப்பதில்லை!

**Gnanadas Kasinathar**

காந்தி சிலை உடைப்பு உணர்த்தி நிற்பது என்ன?
இது உண்மையில் ஈழத்தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வின் வளர்ச்சி பெற்ற நிலையின் வெளிப்பாடாகும். புத்தர் சிலைகளைக் கூட உடைக்க முனையாதவர்கள் ஏன் காந்தி சிலையை உடைத்தார்கள்? உண்மையில் புத்தர் மீது இலகுவில் கை வைத்து விடலாம்.
ஆனால் காந்தி மீது கை வைப்பது என்பது சாதாரண விஷயமல்ல.
புத்தர் மீது கை வைக்க தடையாக இருப்பது புறவயமான சூழல் மட்டுமே அதாவது இராணுவம், பொலிஸ் போன்ற அரச இயந்திரங்கள். மற்றும்படி சந்தர்ப்பம் கிடைத்தால் புத்தர் சிலையை துவம்சம் செய்ய எமக்கு அகவயமான தடைகள் மனத் தடைகள் எதுவும் குறுக்கே வருவதில்லை.
தமிழர்களைப் பொறுத்தவரை ஏதோ ஒரு பெரிய "தமிழ்" மகான் என்னும் ரேஞ்சிலேயே காந்தி பற்றிய விம்பம் சிறு வயது முதல் எமது ஆழ் மனதில் கட்டியெழுப்பப்படுகின்றது. ஒரு காலத்தில் இந்திரா காந்தியைக் கூட ஔவையார் ரேஞ்சுக்கு தூக்கி வைச்சு வீட்டில் படம் வைத்து வழிபட்ட இனம்தான் நாம். அப்ப காந்தி பற்றிய எமது அணுகுமுறை எப்படி இருக்கும்?
புறவயமான தடைகளை உடைப்பது பெரிய விசயமல்ல ஆனால் அகவயமாக கட்டியெழுப்பப்பட்ட விம்பங்களை உடைத்துச் சிந்திப்பதும் செயற்படுவதும் இலேசான வேலையல்ல.
இன்று காந்தி சிலை முல்லைத்தீவில் உடைக்கப்பட்டிருக்கிறது என்றால் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கம் சம்பந்தமாக எமது மக்கள் கொண்டிருக்கும் தெளிவையும் விழிப்புணர்வையுமே அது காட்டுகிறது. இந்திய பிராந்திய ஆதிக்கமானது.....
காந்தியின் ஊடாக வந்தாலும் சரி, அம்பேத்காரராக வடிவெடுத்து வந்தாலும் சரி, ஏன்... பெரியார் உருவில் வந்தாலும் சரி..... நாம் உடைப்போம்! இந்த விழிப்புணர்வை எம் மக்களிடம் ஏற்படுத்தியவர்கள் யார்? சந்தேகமேயின்றி அது விடுதலை புலிகள்தான். இது விழிப்புணர்வு மட்டுமல்ல....
அக விடுதலையும் கூட! ஒருவித தளை நீக்கம்! இதனை புலிகளால் மட்டுமே செய்ய முடியும். ஏனைய இந்திய எதிர்ப்பாளர்கள் எல்லாம் வாய்ச் சொல் வீரர் மட்டுமே!




# உடனடி வேலைவாய்ப்பு 2017

அமெரிக்க நிதி அனுசரணை வழங்கும் ஆசிய நிறுவனமாகிய
DS max மூலம் யாழ்ப்பாணத்தில் 2017ம் வருடத்தில் புதிய வெற்றிடங்கள்

ல் கட்டமாக
40 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும், அனுபவம் அவசியமற்றது
இறுதித் திகதி :- 20.01.2017

உங்கள் தகமைகள்
O/L, A/L பரீட்சை எழுதிய மற்றும் 2017 பெறுபேறுகளுக்கு காத்திருக்கும் மாணவர்களும் இணைக்கப்படுவர்
வயது 18 - 35 (ஆண், பெண்)

DS MAX
A Subsidiary of Ds max in USA

புதுவருட வாழ்த்துக்கள்

எங்களால் உங்களுக்கு

☆ இலவசமான வெளிநாட்டுப் பயிற்சி
☆ இலவச மருத்துவ காப்புறுதி ETF/EPF வழங்கப்படும்
☆ வெளிமாவட்டங்களில் இருந்து வருவோருக்கு உணவு தங்குமிட வசதி இலவசம்
☆ குறுகிய நாளில்.
பயிற்சியின் போது 12000/= முதல் 18000/= வரையும்
பயிற்சியின் பின்னர் 75000/= வரை நிரந்தரமான சம்பளம் கொடுக்கப்படும்

இன்றே எங்களுடன் இணைந்து கொள்வோருக்கு நீங்கள் விரும்பிய மாவட்டத்திலேயே வேலை அமைத்து தரப்படும்

புதிய கிளைகள் ஆரம்பிக்கவுள்ளோம் - கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்

மேலும் தொடர்புகளுக்கு : 0777009820, 0775936857




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 01.01.2017 அன்று வெளியிடப்பட்டது.